நட்சத்திரக் குழந்தை

முதலிய கதைகள்

★

- ஆஸ்கார் ஒயில்ட்
- கிளாரா வீபிக்
- ஸ்டிரின்ட் பர்க்

மொழிபெயர்ப்பு:
டி. ஆர். சர்மா

ஸ்டார் ★ பிரசுரம்
பாலக்கரை, திருச்சி

NO. 10 ★ STAR-CHILD & OTHER STORIES

நட்சத்திரக் குழந்தை

முதலிய கதைகள்

★

- ஆஸ்கார் ஒயில்ட்
- கிளாரா விபிக்
- ஸ்டீரின்ட் பர்க்

மொழிபெயர்ப்பு:

டி. ஆர். சர்மா

ஸ்டார் ★ பிரசுரம்
பாலக்கரை, திருச்சி

முதல் பதிப்பு JULY 1944

" அறிவு அனைத்தையுமே
என்தேசமாகக் கொள்வேன்'

—பேக்கன்

கிளேஸ் பதிப்பு } விலை ரூ. 1-4-0
ஆன்டிக் பதிப்பு } 1-8-0

STAR PUBLICATIONS
PALAKARAI, TRICHINOPOLY

முன்னுரை

உலகத்தில் பல பாஷைகளிலும் வெளியிட்டுள்ள கதைகளைச் சிறந்த முறையில் மொழிபெயர்த்து ஆங்கிலத்தில் 20 வால்யூம்களில் வெளியிட்ட கதைக்கோவைக்குத் தலைமை ஆசிரியராக உதவிய பேரறிஞர் ஜெ. எ. ஹாமர்டன், சிறு கதைக் கட்டிடத்தைப் பற்றிக் கூறுவது:

"ஒரு சிறு கதை, வாழ்க்கையிலுள்ள சின்னஞ் சிறிய நிகழ்ச்சியையும், 300 வார்த்தைகளிலும் சிருஷ்டிக்கலாம்; அதே சம்பவத்தை 15000 வார்த்தைகளிலும் சிருஷ்டிக்கலாம். ஆனால் அமைப்பில், வாழ்க்கையில் கண்ட உண்மைகளை அஸ்திவாரமாகக் கொண்டு, சிறு கதை உதயமாகவேண்டும். கதையின் கட்டுக்கோப்பில், கற்பனையின் வளர்ச்சி கனிந்து பழுதுபடாமல் அமைய வேண்டும். 3000 வார்த்தைகளுக்கு மேல் போகாமல் கதை அமைவது பொருத்தமாயும் அழகாயுமிருக்கும். சொற்கள், கதையின் இரகசியத்தை ஆழமாகத் தொட்டுத் தழுவி, அதை ஒரு கலையோவியமாகச் சிருஷ்டிக்க வேண்டும்."

மேலே கண்ட முறையில், ஆஸ்கார் ஒயில்ட், கிளாரா வீபிக், ஸ்டிரின்ட் பர்க் என்ற மூன்று ஆசிரியர்களும் சிறு கதை இலட்சியத்திலும் இலக்கணத்திலும் வெற்றிபெற்றுவிட்டார்கள் என்றே சொல்லிவிடலாம்: முதலாவது கதை, ஐரிஷ் கவிஞர் ஆஸ்கார் ஒயில்ட் ஆங்கிலத்தில் எழுதியது; இரண்டாவது கதை ஜெர்மன் ஆசிரியர் கிளாரா வீபிக் எழுதியது; மூன்றாவது கதை ஸ்வீடிஷ் ஆசிரியர் ஸ்டிரின்ட் பர்க் எழுதியது; மூன்று கதைகளிலும், இலட்சிய வானத்தில், நீதித்தடம் மின்னிக் கொண்டிருக்கிறது.

இந்த மூன்று கதைகளையும் மூலத்தின் கற்பனைப் பொலிவுடனும் மொழித்துடிப்புடனும், திரு. டி. ஆர். சர்மா தமிழாக்கித் தந்திருக்கிறார். இந்நூலை ஒரு கதைக்கரும்பு என்றே கூறிவிடலாம். இத்தகைய கதைகளை அற்புதமாக சிருஷ்டிக்க தமிழர்கள் ஆர்வங்கொண்டு முன்வரவேண்டும்.

நமது உள்ளங்கனிந்த ராஜாஜி அவர்கள் ஆராய்ந்து அனுபவித்துக் கூறுவது போல, "நல்ல சிறுகதைக்கு அடையாளம் ஒன்றே: அதைப்படிக்கும் போது, நல்லவர்களுடைய மனதில், மகிழ்ச்சி தோன்றி உள்ளம் பூரிக்கும்; கலைப் பொருள் ஒன்றை உண்டாக்குவது அரிது; எல்லா இலக்கண விதிகளையும் புறக்கணித்து அற்புதமான இலக்கியப் பொருள் தோன்றுவது முண்டு; வரப்பிரசாதத்தில் தோன்றிய இலக்கியம் அல்லது வேறு கலைப்பொருளை, விமர்சனக்காரர்கள் அடக்கியாள முடியாது."

10—6—44 வி. ஆர். எம். செட்டியார் பி. ஏ.

பொருளடக்கம்

நட்சத்திரக் குழந்தை

ஒரு பெரிய பைன் மரக் காட்டின் வழியே இரண்டு எளிய விறகு வெட்டிகள் ஒரு சமயம் தங்கள் வீடு நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது குளிர்காலம், அத்துடன் கடுங்குளிர் நடுக்கும் இரவு, தரையிலும் மரங்களின் கிளைகளிலும் பனிகனமாகப் படிந்திருந்தது. பனி பெய்துகொண்டிருக்கும்போது உறைபனி இளங்கிளைகளின்மீது விழுந்து இருபக்கங்களிலும் சிதறி விழுகின்றது. மலையிலிருந்து வரும் அந்தப் பெரும் நீரோட்டத்தின் அருகில் அவர்கள் வந்ததும், அது சலனமின்றி சாந்நிதியில் இருந்தது. காரணம் என்னவென்றால், பனியரசன் அவளைத் தழுவி முத்தமிட்டதுதான்.

மிருகங்களும் பறவைகளும்கூட இதற்கு என்ன செய்வதென்று அறியாமல் விழித்துக்கொண்டிருந்தன; அவ்வளவு கடுமையான குளிர்.

'ஊஷ்!' என்று ஓநாய் தன் உடலைச் சிலிர்த்தது. இரு கால்களுக்கிடையே தன்னுடைய வாலை மடித்துக்கொண்டு அந்த அடர்ந்த காட்டின்வழியே நெளிந்து நெளிந்து நடந்துவந்தது. 'இது மிகவும் விபரீதமான காலம். இதை ஏன் சர்க்கார் கவனிக்கக்கூடாது?' என்று முணுமுணுத்தது.

பச்சை நிறமுள்ள பாடும் சிறு குருவிகள் 'வீட்-வீட்-விட்' என்று கத்தின. அந்த முதிர்ந்த கிழவியாகிய பூமிதேவி செத்துப் போய்விட்டாள். அவளுடைய வெள்ளைப் போர்வையால் மூடி அவர்கள் அவளை வெளியில் கொண்டுவந்து கிடத்தியிருக்கிறார்கள்,' என்று கத்தின.

'பூமாதேவி கலியாணம்பண்ணிக்கொள்ளப் போகிறாள், இதுதான் அவளுடைய கலியாண உடை' என்று மணிப்புறாக்கள் காதோடு பேசிக்கொண்டன. அவைகளின் சிறிய சிவந்த கால்கள் பனியில் விறைத்துப்போயின. ஆனாலும் அப்போதைய நிலைமை

யைக் குறித்து, விசித்திரமாகப் பேசி மகிழவேண்டியது தங்கள் கடமையென்று கருதிவிட்டன.

'மதியீனம்! இதெல்லாம் சர்க்காருடைய குற்றம்-நான் சொல்கிறேன். என் வார்த்தையில் உனக்கு நம்பிக்கையில்லாவிட்டால், நான் உன்னை விழுங்கிவிடுவேன்' என்று உறுமியது ஓநாய்; அது ஒரு அனுபவ பூர்வமான கொள்கையுடையதாயிருந்தது. மேலும், சரியான விவகார ரீதியிலும் அது பின்வாங்கியதில்லை.

'அதெல்லாம் சரிதான்! எனக்குத் தெரிந்தவரையில் அந்த நுட்பமான கொள்கைகளுக்குரிய வியாக்யானங்களைப்பற்றி நான் சிறிதும் லட்சியம் செய்வதில்லை. ஒரு விஷயம் அவ்விதம் இருக்கிறது என்றால், அது அப்படியேதான். மேலும், இப்பொழுது மிக பயங்கரமான குளிர் தான்,' என்று பிறவியிலேயே பெரிய வேதாந்தியாகிய மரங்கொத்திப்பறவை கூறியது.

உண்மையிலேயே, அது மிக பயங்கரமான குளிராகத்தான் இருந்தது. உயர்ந்து வளர்ந்துள்ள பிர்மரத்தின் உட்புறத்தில் வசித்திருந்த சிறு அணில்கள் தங்களைத் தாங்களே சற்றே உஷ்ணப்படுத்திக்கொள்வதற்காக ஒன்றோடொன்று தங்கள் மூக்கைத் தேய்த்துக்கொண்டன. முயல்களோ வெளியில் தலையை நீட்டி, எட்டிப்பார்க்கவும் துணியாமல் தங்கள் பொந்துகளில் சுருண்டு ஒடுங்கிக்கிடந்தன. கொம்புகள்போன்ற நீண்ட காதுகளையுடைய அந்த ஆந்தைகள் மட்டுமே இந்தக்குளிரை மிகக் குதூகலமாக அனுபவிப்பதுபோலக் காணப்பட்டது—அவைகளின் சிறகுகளும் பனியில் உறைந்துகிடந்தபோதிலும் அவைகள் அதை லட்சியம் செய்யவில்லை. தங்களின் பெரிய மஞ்சள் விழிகளை உருட்டி உருட்டி விழித்துக்கொண்டிருந்தன. காட்டில் மூலைக்கு மூலை அவைகள் குரல் காட்டி 'டு-விட், டு-ஹூ!, டு-விட், ஹூ!, எப்பேர்ப்பட்ட ஒரு இன்பகரமான காலத்தை நாம் அனுபவிக்கிறோம்' என்று ஒன்றோடொன்று குதூகலித்தன.

தரையெங்கும் நிறைந்துள்ள உறைந்த பனிமீது பூட்ஸ் காலால் நடந்துகொண்டே, வாயில் கையை வைத்துச் சீட்டியடித்

துக்கொண்டு, அந்த இரு விறகு வெட்டிகளும் வெகுதூரம் சென்றார்கள். ஒரு தடவை ஒரு ஆழமான பள்ளத்தில் அவர்கள் விழுந்துவிட்டார்கள். அதிலிருந்து அவர்கள் எழுந்து வெளியே வந்ததும், ஆலையில் வேலை செய்பவர்கள் கற்களைப் பொடிசெய்யும் பொழுது உடல் முழுவதும் ஒரே வெள்ளையாய்க் காணப்படுவார்களே, அதேபோல வெள்ளை வெளேரென்று இருந்தனர். ஒரு தடவை சேற்று ஜலம் உறைந்துகிடந்த அந்தக் கடினமான, வழுவழுப்பான பனிப் பாறைமீது வழுக்கி விழுந்துவிட்டார்கள். அப்பொழுது அவர்கள் கொண்டுவந்த சுள்ளிகள் கட்டிலிருந்து கீழே விழுந்தன. அவைகளைத் திரும்பவும் பொறுக்கிக் கட்டிக்கொண்டு போகவேண்டியதாகிவிட்டது அவர்களுக்கு. அவர்கள் வழி தவறிவிட்டதாக ஒருசமயம் எண்ணினார்கள். உடனே அவர்களுக்குப் பெரும் திகிலாக இருந்தது. ஏனென்றால், பனி பெய்யும் பொழுது அங்கே தங்கி உறங்குபவர்களுக்கு அது மிகக் கொடுமைசெய்யும் என்பது அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். ஆனால், பிரயாணிகள் யாவரையும் மிக சிரத்தையுடன் கவனிக்கும் அந்த சிறந்த 'மார்ட்டின் முனிவரிடம்' அவர்கள் ரொம்பவும் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். திரும்பவும் தங்கள் சரியான பாதையைக் கண்டுபிடித்து, மிக ஜாக்கிரதையாக நடந்துசென்று, கடைசியாக அவர்கள் காட்டின் எல்லையை அடைந்தார்கள். அவர்கள் இருந்த இடத்திற்கு ரொம்பக் கீழே, அந்தப் பள்ளத்தாக்கில் தாங்கள் வசித்துவந்த கிராமத்தின் விளக்கு வெளிச்சம் தெரிவதைக் கண்டார்கள். அதைக் கண்டதும் அவர்கள் அளவற்ற ஆனந்தமடைந்து களிப்புமிகுதியால் உரக்கச் சிரித்தார்கள். பூமி அவர்கள் கண்களுக்கு வெள்ளி மலர்போலவும், சந்திரன் பொன் மலர் போலவும் காட்சி யளித்தது.

இன்னும், அவர்கள் இவ்விதம் சிரித்துக்கொண்டிருந்த பிறகு, அவர்கள் வருத்தமடைந்தனர். ஏனென்றால், அவர்கள் தங்களின் வறுமையை நினைத்துக் கொண்டுவிட்டார்கள். அவர்களில் ஒருவன் இன்னொருவனிடம் சொன்னான், "வாழ்க்கை செல்வந்தர்களுக்குத்தான் உரியதாக இருக்கிறது—நம்மைப் போன்றவர்கட்கு இல்லை, என்பதை நாம் நன்றாய்த் தெரிந்துகொண்ட

பிறகும், நாம் சிரித்துக்கொண்டிருப்பதின் காரணம் என்ன? இப்படி இருப்பதைவிட இந்தக் காட்டிலேயே கடுங் குளிரினால் இறந்து விடுவது, அல்லது எந்தக் கொடிய மிருகமாவது நம்மீது பாய்ந்து கொன்று தின்றுவிடுவது மிக மேலானதாக இருக்கும்.''

'உண்மைதான்' என்று அவன் கூறியதை ஆமோதித்தான் அவனுடைய தோழன்—மேலும், அவன் சொன்னான், 'ஒரு சிலருக்கு அபரிமிதமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது; மற்றவர்களுக்கு மிகக் கொஞ்சமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அநீதி, உலகை இவ் விதமாகப் பிரிவினைசெய்து வைத்திருக்கிறது. துன்பத்தைத் தவிர மற்றெதிலும் நமக்குச் சமமான பங்கு இல்லை.'

இப்படியாக, ஒருவருக்கொருவர் தங்களுடைய வறுமை யைப்பற்றிப் பேசி, அவர்கள் துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில், இந்த விசித்திரமான சம்பவம் நிகழ்ந்தது. மிகப் பிர காசமான ஒரு அழகிய நட்சத்திரம், அங்கே விண்ணிலிருந்து கீழே விழுந்தது. வானத்திலிருந்த மற்ற நட்சத்திரங்களையெல்லாம் தாண்டிக் கொண்டுவந்து அது நழுவிக் கீழே விழுந்தது. ஆச்சரி யத்துடன் இதை அவர்கள் உற்றுக் கவனித்துக்கொண்டிருக்கும் போதே, ஒரு கல்லெறியப்படும் தூரத்தில் இருந்த, ஆட்டுமந்தை களை அடைத்துவைக்கும் இடத்திற்கு மிக சமீபத்தில் உள்ள 'வில்லோ' மரத்தோப்பின் பின்புறமாக அது விழுந்து மறைவது போல அவர்களுக்குத் தென்பட்டது.

"ஏன்! அதோ ஒரு பொற்கோல் ஒன்று கிடக்கிறது—யார் அதைக் கண்டெடுத்துக்கொள்ளப் போகிறார்களோ, அவர்களுக் குத்தான் அது உரியது" என்று கூச்சலிட்டுக்கொண்டு, அதை நோக்கி விரைந்தோடினார்கள். பொன்னின் மீது அவர்களுக்கு அத்தனை ஆசை!

அவர்களில் ஒருவன் தன் நண்பனைவிட மிக வேகமாய் ஓடிச்சென்று அவனை முந்திவிட்டான். அப்படியே, அவன் வில்லோ மரங்களிடையே புகுந்தோடி எதிர்ப்புறமாக வந்து நின்றான். ஹா! அங்கே உண்மையாகவே ஒரு பொன்னாலான பொருள்

வெள்ளிப்பனி மீது கிடந்தது. அதை நோக்கி விரைந்து சென்றான். அவன் குனிந்து அதன்மீது கையை வைத்துத் தொட்டுப் பார்த்தான். அது பொன் இழைகளால் நெய்து, நட்சத்திரங்களைக் கொண்டு அழகிய வேலைப்பாடுகள் அமைந்த ஆடையில் பல மடிப்புக்களுடன் சுருட்டப்பட்டிருந்தது. விண்ணிலிருந்து விழுந்த அந்தப் பொக்கிஷத்தைத் தான் கண்டுபிடித்துவிட்டதாக மிகப் பெருமையும் மகிழ்ச்சியும் தொனிக்க உரக்கக் கத்தித் தன் தோழனைக் கூப்பிட்டான். தனது நண்பன் வந்தவுடன், அந்தப் பனி படர்ந்த தரைமீது உட்கார்ந்து, அந்த முடிப்பில் உள்ள பொற் காசுகளைப் பகிர்ந்துகொள்ள வெண்ணி, அவர்கள் அந்த முடிப்பின் மடிப்புகளைப் பிரித்து அவிழ்த்தார்கள். ஆனால்; அடாடா! அதில் பொன்னே இல்லை, வெள்ளியும் இல்லை, எத்தகைய செல்வமும் அதில் இல்லை; தூங்கிக்கொண்டிருந்த ஒரு சிறு குழந்தையைத்தான் அவர்கள் அதில் கண்டார்கள்.

அவர்களில் ஒருவன் மற்றவனிடம் சொன்னான், 'நாம் நினைத்ததற்கு நேர்மாறாக முடிந்திருக்கிறது; நமக்கு வேறு நல்ல அதிர்ஷ்டமுமில்லை. ஏனென்றால், ஒரு மனிதனுக்கு ஒரு குழந்தை இருந்து என்ன பிரயோசனம்? இதை இங்கேயே விட்டு விட்டு நமது வழியைப் பார்த்துக்கொண்டு நாம் போய்விடுவோம். நாம் ஏழை எளியவர்கள் பார்! நமக்கோ நம்முடைய சொந்தக் குழந்தைகள் இருக்கின்றன. அவைகள் உண்ணக்கூடிய உணவை நாம் மற்றவர்களுக்குக் கொடுக்க முடியாதல்லவா?' ஆனால், அவனுடைய தோழன் சொன்னான்: 'இல்லை—இந்தப் பனியில், இங்கேயே இந்தக் குழந்தையை சாகும்படியாய் விட்டுச்செல்வது மிகவும் பாதகமாகும்; நானும் உன்னைப் போலவே ஏழையாக இருந்தபோதிலும்—நானும் பல வயிறுகளுக்கு கஞ்சிவார்க்க வேண்டியிருந்தபோதிலும், இவ்வளவு பேருக்குப் போஷிக்கத்தகுந்த ஆஸ்தி ஒன்றுமில்லாத போனாலும், நான் என்னோடு இதை விட்டுக்கு எடுத்துச்செல்லவே விரும்புகிறேன். என் மனைவி இதை சிரத்தையுடன் கவனித்துக் காப்பாற்றி விடுவாள்.'

அந்தக் குழந்தையை அவன் ரொம்பவும் மெதுவாக அன்புடன் எடுத்துக் கடுங் குளிரினின்று அதைப் பாதுகாக்க, உடம்

பைச் சுற்றிலும் அந்தத் துணியால்மூடி எடுத்துக்கொண்டு, தன்னுடைய கிராமத்தை நோக்கிக் குன்றின் வழியாய் இறங்கி வந்தான். இதைக் கண்ட அவனது தோழன் அவனுடைய அறியாமைக்காகப் பச்சாத்தாபப் பட்டான்; ஆனாலும், அவனுடைய இளகிய மனத்தைக் கண்டு ரொம்பவும் ஆச்சரியப்பட்டான்.

அவர்கள் தங்கள் கிராமத்திற்கு வந்துசேர்ந்ததும், அவனுடைய தோழன் அவனிடம் சொன்னான்: 'நீ குழந்தையை வைத்துக்கொண்டிருக்கிறாய். அதனால், எனக்கு அந்த உடையைக் கொடுத்துவிடு. ஏனென்றால், இந்த முறையில் நாம் அதைப் பங்கிட்டுக் கொள்வது சிறந்ததாகும்.'

'முடியாது, ஏனெனில், இந்த ஆடை என்னுடையதுமல்ல, உன்னுடையதுமல்ல. இது குழந்தைக்குத்தான் உரியது' என்று தனது நியாயத்தை அவனுக்கு எடுத்துச் சொல்லிவிட்டு, தன்னுடைய வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டினான்.

அவன் மனைவி கதவைத் திறந்ததும், கணவன் பத்திரமாக வீடுவந்து சேர்ந்ததை எண்ணி, மன மகிழ்ந்து, அவனை அணைத்து முத்தமிட்டாள். அவனுடைய முதுகிலிருந்து சுள்ளிக்கட்டைக் கீழே இறக்கிவைத்து, அவனுடைய பூட்ஸில் உறைந்திருந்த பனியைத் துடைத்துவிட்டு, அவனை உள்ளே அழைத்துச் சென்றாள்.

ஆனால், அவன் அவளிடம் சொன்னான், 'நான் காட்டில் ஒன்றைக் கண்டெடுத்தேன்; நீ அதைப் போஷித்துப் பாதுகாக்க உனக்காக அதை இங்கே கொண்டுவந்திருக்கிறேன்.' அவன் வாசற்படியை விட்டு நகரவேயில்லை.

'அதென்ன? என்று கேட்டாள் ஆவலுடன், 'அதை எனக்குக் காட்டுங்களேன். வீடும் வெறிச்சென்றுதான் இருக்கிறது. நமக்கும் எத்தனையோ வேண்டித்தானிருக்கிறது.' உடனே மேலே போர்த்தியிருந்த அந்தத் துணியை எடுத்துவிட்டு, தூங்கிக் கொண்டிருந்த அந்த இளங் குழந்தையை அவளிடம் காட்டினான்.

நட்சத்திரக் குழந்தை

'ஐயையோ! பாவி, நமக்கென்ன நம்முடைய சொந்தக் குழந்தைகள் இல்லையா? நம்முடைய கணப்பின் அருகில் மற்றொரு பிள்ளையைக் கூட்டிவைத்துக் கொள்வதற்கு உங்களுக்கு என்ன அவ்வளவு அவசியம் வந்துவிட்டது? மேலும், இதன்மூலம் நமக்கு ஏதும் கேடு வராதென்று என்ன நிச்சயம்? யாருக்குத் தெரியும்? இன்னும், இந்தக் குழந்தையையும் நாம் எப்படிப் போஷித்துப் பாதுகாக்கமுடியும்?' என்று மிகுந்த சலிப்புடன் முணு முணுத்தாள். அவன்பேரில் அவளுக்கு ரொம்பக் கோபம் வந்தது.

'இல்லை, அது ஒரு நட்சத்திரக் குழந்தை!' என்முன். தான் அந்தக் குழந்தையைக் கண்டெடுத்த விநோதத்தை யெல்லாம் அவளுக்கு எடுத்துச் சொன்னான்.

அதைக் கேட்டும் அவள் சமாதானமடையவில்லை. அவள் அவனைக் கேலிசெய்தாள். 'நம்முடைய குழந்தைகளே உணவுக் குத் திண்டாடுகின்றன. நாம் இன்னொருவர் பிள்ளையைப் போஷித் துக் காப்பாற்றமுடியுமோ? நம்மை இலட்சியம் பண்ணி ஆதரிக்க இங்கு நமக்கு யார் இருக்கிறார்கள்? நமக்குத்தான் யார் உண வளிக்கிறார்கள்?' என்று மிகவும் ஆத்திரமாய்ப் பேசினாள்.

'இல்லை—சிட்டுக் குருவிகளைக்கூடக் கடவுள் அன்புடனும் ஆதரவுடனும் போஷிக்கிறாரே, அவைகளுக்கெல்லாம் உணவும் அளிக்கிறாரே!' என்று அவன் பதில் அளித்தான்.

'குளிர்காலத்தில் அந்தச் சிட்டுக்குருவிகளும்தான் பசியி னால் செத்துப்போவதில்லையா? என்று கேட்டாள் அவள். 'இன் னும், இப்பொழுது குளிர்காலம்தானே?'

அவன் அதற்கு ஏதும் பதில் சொல்லவில்லை. அப்பொழு தும் அவன் வாயிற்படியைவிட்டு நகரவேயில்லை.

காட்டிலிருந்து ஒரு கொடிய காற்று திறந்திருந்த கதவின் வழியே வீசி அவனை நடுங்கச் செய்தது. உடல் நடுக்கலுடன்

நட்சத்திரக் குழந்தை

அவள் சொன்னாள், 'நீங்கள் கதவைக் கொஞ்சம் சாத்திவைக்க மாட்டீர்களா? அங்கேயிருந்து கொடிய காற்று வீட்டினுள். வீசி, என்னைக் குளிர் நடுக்குகிறதே!'

'கல் நெஞ்சமுடையவர்களின் வீட்டில் எப்பொழுதும் கொடுங்காற்று வீசுவதில்லையே' என்றான் அவன். அதற்கு அவள் ஒன்றும் பதில் சொல்லவில்லை. பேசாமல் கணப்பின் அருகில் நெருங்கி உட்கார்ந்தாள்.

கொஞ்ச நாழிகைக்கெல்லாம் அவள் திரும்பி அவனை உற்று நோக்கினாள். அவளுடைய கண்களில் நீர் நிறைந்திருந்தது. அவன் வேகமாய் உள்ளே வந்து அந்தக் குழந்தையை அவளுடைய கையில் கொடுத்தான். அவள் அதை முத்தமிட்டாள். தன்னுடைய கைக் குழந்தை படுத்துக்கொண்டிருக்கும் சிறிய படுக்கையில் அந்தக் குழந்தையையும் கொண்டுபோய்ப் படுக்கவைத்தாள். மறுநாள் காலை அந்த விறகு வெட்டி அந்த அற்புதமான பொன்னுடையை எடுத்து ஒரு அழகிய பெட்டியினுள் வைத்தான். அவனுடைய மனைவி அந்தக் குழந்தையின் கழுத்தில் கிடந்த சிறிய மணிமாலையைக் கழற்றித் தந்தாள். அதையும் அவன் அந்தப் பெட்டியினுள்ளே வைத்தான்.

இவ்விதமாகவே விறகு வெட்டியின் குழந்தைகளுடனேயே, அந்த நட்சத்திரக் குழந்தையும் வளர்ந்துவந்தது. அவர்கள் உண்ணும்போது அதுவும் அவர்களுடன் உண்டது. அவர்களுடனே சேர்ந்து அதுவும் விளையாடிற்று. ஒவ்வொரு வருஷமும் கண்ணைக் கவரும்படியான அழகுடன் அவன் வளர்ந்துவந்தான். இதைக் கண்ட ஊராரெல்லாம் ஆச்சரியத்தில் மூழ்கிப்போனார்கள். ஏனென்றால், அவர்கள் மங்கிய நிறமும், கரிய தலைமயிர் உடையவர்களாகவும் இருந்தார்கள். ஆனால், கடைந்தெடுத்த தந்த விக்கிரகம்போல வெண்மை நிறமாகவும் மிக மேன்மையாகவும் இருந்தான் அவன். அவனுடைய சுருண்ட மயிர் 'டாவோடில்' (அரளிப்) புஷ்பத்தின் சிறு வட்டம்போல் அழகாக இருந்தது. அவனுடைய உதடுகள் சிவந்த மலர் இதழ்கள்போல இருந்

தது. அவன் அழகிய கண்கள் தெளிந்த நீரோடையின் அருகில் மலர்ந்திருக்கும் ஊதா நிறமுள்ள புஷ்பங்கள் போலிருந்தன. அவனது உடல், வயலில் காணப்படும் 'நார்ஸிஸஸ்' போலவே யிருந்தது.

இப்பேர்ப்பட்ட அவனுடைய அபூர்வமான அழகு அவனுக்குத் தீமையே விளைவித்தது. எப்படி யென்றால், அவன் கர்வங் கொண்டான், இரக்கமற்றவனானான், இன்னும் சுய நலத்திலேயே கண்ணாயிருந்தான். அந்த விறகு வெட்டியினுடைய குழந்தைகள், இன்னும் ஊராரின் குழந்தைகள் எல்லோரையும், மிக இழிந்த நிலையில் உள்ள ஏழைகளுக்குப் பிறந்த தாழ்ந்தவர்கள் என்று நிந்தித்தான். தான் மட்டும் நட்சத்திரத்தினின்று தோன்றியிருப்பதால், தானே ரொம்ப உயர்ந்தவன் என்றும் சொல்லித் தன்னைத் தானே அவர்களுக்கு எஜமானனாக்கிக்கொண்டு, அவர்களைத் தன்னுடைய 'வேலைக்காரர்கள்' என்று அழைத்தான். ஏழைகள், குருடர்கள், முடவர்கள், எக்காரணத்தினாலாவது துன்பத்திலுழலுபவர் ஆகியவர்களிடம் அவனுக்கு எள்ளளவும் இரக்கம் என்பதே இல்லை.

ஆனால், இதற்கு நேர்மாறாக அவர்கள் மீது கல்லெடுத்து எறிவான். எளியவர்களைத் தெருமூலைவரை துரத்திக்கொண்டு போய், 'வேறு எங்கேயாவது சென்று பிச்சைகேளு, போ!' என்று அவர்களை அடித்து விரட்டுவான். இதைக்கண்டு ஏதோ சில போக்கிரிகளைத் தவிர வேறு யாரும் அந்தக் கிராமத்திற்கே இரண்டாவது தடவை 'பிச்சை' என்று வரமாட்டார்கள். உண்மையிலேயே தன் அற்புத அழகைக் கண்டு வியந்து மயங்கிக்கிடந்தான். மெலிந்தவர்களையும், நலிந்தவர்களையும் பார்த்து வெகுவாகப் பரிகாசம் பண்ணினான். அவர்களைக் கேலிசெய்து நகைத்தான். அவன் தன்னையே மிகவும் பெருமை பாராட்டிப் புகழ்ந்து கொண்டான். வஸந்த காலத்தில் எங்கும் அமைதியாயிருக்கும் போது, பாதிரியாரின் பழத் தோட்டத்தின் ஊற்றோரத்தில் படுத்துக்கொண்டு, கீழே ஜலத்தில் பிரதிபலிக்கும் தனது அழகிய முகத் தோற்றத்தைக் கண்டு உள்ளம் பூரிப்பான். தன் ஒப்புயர்வற்ற

அழகினுல் தான் அடையும் இன்பத்தை அவன் எண்ணியதும், அவன் முகத்தில் புன்னகை தவழும்.

விறகு வெட்டியும் அவனுடைய மனைவியும் அவனை அடிக்கடி கடிந்துகொண்டார்கள். 'ஆதரவற்ற அந்த ஏழைகளிடம்—அனுதைகளிடம் நீ நடந்துகொள்வதுபோல, நாங்கள் உன்னை நடத்தவில்லையே. அவர்களிடம் இரங்கி அன்பு காட்டவேண்டியிருக்க, என்னத்திற்காக நீ அவர்களிடம் அவ்வளவு கொடியவனுக நடந்துகொள்ளுகிருய்?' என்று கண்டிப்பார்கள் அவனை.

அந்த வயதான பாதிரியார் அவனை அடிக்கடி அழைத்துவரச் செய்து, உயிர்களிடம் அன்புகாட்ட வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி அவனுக்கு இதமாகப் போதிப்பார். அவனுக்குப் புத்தி மதியாக எடுத்துச் சொல்வார். 'ஈயும், உனது சகோதரன். அதற்கு ஒரு தீங்கும் நீ செய்யாதே. காட்டில் பறந்து திரியும் பறவைகளுக்கும் அவைகளுக்குரிய சுதந்திரம் உண்டு. உன் சந்தோஷத்திற்காக அவைகளை நீ வலையில் சிக்கவைத்துப் பிடிக்காதே. கண்ணில்லாத புழுக்களையும், வளையில் வாழும் சுண்டெலிகளையும் கூட கடவுள் படைத்து, அவைகளுக்கும் இவ்வுலகில் வாழ இடம் கொடுத்திருக்கிருர். கடவுளின் உலகத்தில் துன்பத்தை விளைவிக்க நீ யார்? வயலிலுள்ள ஆடு மாடுகளும்கூட அவரை வாழ்த்துகின்றன.'

ஆனல், அந்த நட்சத்திரக் குழந்தை அவருடைய வார்த்தைகளை லட்சியம் செய்வதேயில்லை. அவரைக் கோபமாய் விழித்துப் பார்ப்பான்; பழித்து நகையாடுவான். ஓடிச்சென்று, தோழர்களுடன் கூடி, அவர்களின் தலைவனுய் நின்று விளையாடுவான். பார்க்க மிக்க அழகாயிருப்பான். வெகு சுறு சுறுப்பானவன். நடனம் ஆடுவான், குழல் ஊதுவான்—இனிமையாய்ப் பாடுவான். இவைகளைக்கண்டு அதிசயித்து, அவனுடைய தோழர்களும், அவனுக்குப் பணிந்து அவனைப் பின்பற்றியே நடந்தார்கள். நட்சத்திரக் குழந்தை அவர்களை எங்கெல்லாம் அழைத்துச் செல்கிருனே அங்கெல்லாம் கூடவே போவார்கள். நட்சத்திரக் குழந்தை எதைச் செய்கிருனே அவைகளையெல்லாம் அவர்களும் அவ்விதமே

செய்துமுடிப்பார்கள். அவன் சுண்டெலியின் மங்கிய சிறு கண்களை ஊசியினால் குத்தும்போதும், குஷ்டரோகியின் மீது கல்லை வீசி எறியும்போதும் அவர்கள் அவனுடன் சேர்ந்து சிரிப்பார்கள். ஒவ்வொரு விஷயத்திலும் அவர்களை அவன் ஆட்சிபுரிந்தான். அவனைப்போலவே அவர்களும் கல்நெஞ்சர்களாகி விட்டார்கள்.

இப்படி யிருக்கையில் ஒருநாள், அந்த ஊரில் ஒரு பிச்சைக்காரி வந்தாள். அவள் கட்டியிருந்த துணிமணிகள் எங்கும் நைந்தும் கிழிந்தும் ஒரே கந்தலாக இருந்தது. அந்தக் கரடுமுரடான பாதையில் நடந்துவந்த அவளுடைய கால்களிலிருந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்தது. அவள் மிகவும் கஷ்டமான நிலைமையில் இருந்தாள். ரொம்பவும் களைத்துப்போன அவள், களைப்பாறுவதற்காக 'செஸ்ட்நட்' மரத்தடியில் உட்கார்ந்திருந்தாள்.

அந்த நட்சத்திரக் குழந்தை அவளைப் பார்த்ததும், அவன் தன் தோழர்களிடம் சொன்னான்: 'அதோ, பாருங்கள்! அந்த அழகிய பசுமையான மரத்தினடியில் ஒரு மிகக் கேவலமான பிச்சைக்காரி உட்கார்ந்திருக்கிறாள். வாருங்கள்! அவளை நாம் அங்கிருந்து துரத்திவிடுவோம். ஐயோ! பார்க்கத்தான் எவ்வளவு விகாரமாயும் ஆபாசமாயும் இருக்கிறாள்!'

அவன் அவள் அருகில் ஓடிவந்து அவள்மீது கல்லை வீசி எறிந்தான். அவளைப் பரிகாசம் பண்ணினான். அவளுடைய கண்களில் பயமும் திகிலும் குடிகொண்டிருந்தது. அவள் அவனையே விழித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். சமீபத்தில் குழிந்த கண்களுடன் மிகவும் கஷ்டப்பட்டுக் கட்டைகளைப் பிளந்துகொண்டிருந்த விறகு வெட்டி அந்த நட்சத்திரக் குழந்தையின் செயலைக் கண்டு ஓடிவந்து அவனை அதட்டினான். 'உண்மையிலேயே நீ கொடிய கல்நெஞ்சனாக இருக்கிறாய். இரக்கம் என்பதையே அறியாதவனாக இருக்கிறாய். அவளை இவ்விதம் நீ துன்புறுத்துவதற்கு அந்த எளியவள் உனக்கு என்ன கெடுதல் செய்தாள்?' என்று கடிந்துகொண்டான்.

நட்சத்திரக் குழந்தை

நட்சத்திரக் குழந்தையின் முகம் கோபத்தால் சிவந்தது. அவன் தரையைக் காலால் ஓங்கி மிதித்தான். 'நான் என்ன செய்கிறேன் என்று என்னைக் கேட்பதற்கு நீ யார்? நீ சொல்கிறபடியெல்லாம் நான் கேட்பதற்கு-நடப்பதற்கு, நான் உன்னுடைய பிள்ளை இல்லையே' என்று சொன்னான்.

'நீ சொல்வது உண்மைதான்; ஆனால், நான் உன்னைக் காட்டில் கண்டெடுத்தபொழுது உன்மீது கருணை காட்டினேனே' என்று விடையளித்தான் அந்த விறகுவெட்டி.

இந்த வார்த்தைகளை அந்தப் பெண் கேட்டதும், அவள் ஒரு பெருங் கூச்சலிட்டு அலறி மூர்ச்சையாகி விழுந்துவிட்டாள். உடனே விறகுவெட்டி அவளை அவனுடைய வீட்டிற்கு எடுத்துச் சென்றான். அவனுடைய மனைவி அவளுக்குச் சிசுருஷை செய்தாள். அவள் மூர்ச்சை தெளிந்து எழுந்ததும், அவளுக்கு உண்ண உணவும், குடிக்கப் பானமும் கொடுத்து ஆறுதல் கூறினாள்.

ஆனால், அவள் எதையும் உண்ணவுமில்லை, குடிக்கவுமில்லை. நீங்கள் இந்தக்குழந்தையைக் காட்டில் கண்டெடுத்தேன் என்று சொன்னீர்களல்லவா? அது இன்றைக்கு சுமார் பத்து வருஷங்களுக்கு முன்பாக இருக்குமா? என்று கேட்டாள் விறகுவெட்டியை.

'ஆமாம், நான் இவனைக் காட்டில்தான் கண்டெடுத்தேன்; அது இன்றைக்கு சுமார் பத்து வருஷங்களாகிறது' என்று பதிலளித்தான்.

'அவனிடம் நீங்கள் என்னென்ன அடையாளங்களைக் கண்டீர்கள்? அவன் கழுத்தில் ஒரு சிறு மணிமாலை அணிந்துகொண்டிருந்தானல்லவா? அவன்மீது நட்சத்திரங்களால் நன்கு அலங்கரிக்கப்பட்ட பொன்னுடை போர்த்தப்பட்டிருந்ததல்லவா?' என்று மிக ஆர்வமுடன் கேட்டாள்.

'ஆம், நிஜமாகவே நீ சொல்வதுபோலவே இருந்தது' என்றான் அந்த விறகுவெட்டி. உடனே சென்று அந்தப் பெட்டியில்

வைத்திருந்த பொன்னுடையையும் மணிமாலையையும் அதிலிருந்து எடுத்துவந்து அவளிடம் காட்டினன்.

அவள் அவைகளையெல்லாம் கண்டதும் ஆனந்தக்கண்ணீர் உகுத்தாள். 'அவன் என்னுடைய இளைய பிள்ளை. நான் காட்டில் இழந்துவிட்ட அவனேதான். உலகமெங்கும் நான் அவனைத் தேடியே அலைகிறேன். தயவு செய்து அவனைச் சீக்கிரம் அழைத்து வரச் சொல்லுங்கள்' என்று கனிந்த அன்புடன் வேண்டினுள்.

அதன்படியே விறகு வெட்டியும் அவன் மனைவியும் வெளியே வந்து, நட்சத்திரக்குழந்தையைக் கூப்பிட்டு, 'வீட்டிற்குள்ளே போ; நீ உன் அம்மாவை அங்கே காணலாம்; அவள் உனக்காகவே அங்கு காத்திருக்கிருள்' என்று சொன்னுர்கள்.

அதிசயத்துடனும் பெருமகிழ்ச்சியுடனும் வீட்டினுள்ளே அவன் வேகமாய் ஓடினன். ஆனுல், அங்கே அவனுக்காகவே ஆவலுடன் காத்திருக்கும் அவளை அவன் கண்டதும் ஏளனமாய்ச் சிரித்தான். 'எங்கே? என் அம்மா எங்கே? இந்த இழிந்த பிச்சைக்காரியைத் தவிர வேறு யாரையும் இங்கே காணுேமே' என்றுன், நட்சத்திரக் குழந்தை.

'நான்தான் உன் அம்மா!' என்று சொன்னுள் அவனிடம் அந்த ஸ்திரீ.

'ஏன் இப்படி உளறுகிருய்? உனக்கென்ன பைத்தியம் பிடித்திருக்கிறதா?' என்று கோபமாய்க் கேட்டான் அந்த நட்சத்திரக்குழந்தை. 'நான் ஒன்றும் உன்னுடைய பிள்ளை இல்லை. நீ ஒரு பிச்சைக்காரியல்லவா? அவலட்சணத்தையும், அந்த அழுக்கேறிய கந்தலையும் பார்! இங்கிருந்து பேசாமல் வெளியேபோய் விடு. இனி சற்றும் உன் விகாரமான முகத்தை என்னிடம் காட்டாதே' என்றுன் அவன் கடுங்கோபத்துடன்.

'இல்லை-நிஜமாக நீதான் என்னுடைய இளையபிள்ளை. நான் காட்டில் இழந்துவிட்ட அவனேதான்,' என்று கதறினுள். முழங்கால் மண்டியிட்டு அவனை நோக்கி இரு கைகளையும் நீட்டி அவள்

கெஞ்சினுள். 'அந்தக் கொள்ளைக்காரர்கள் என்னிடமிருந்து திருடிக்கொண்டுபோய், உன்னைச் சாகும்படியாய்க் காட்டில் விட்டுச் சென்ருர்கள். ஆனல் இங்கு உன்னைப் பார்த்ததுமே நான் உன்னைக் கண்டுகொண்டேன். பொன்னுடை, மணிமாலையாகிய அந்த அடையாளங்களின் மூலமாக்வும் நான் தெரிந்துகொண் டேன். அதனுல், நான் உன்னை என்னேடு வந்துவிடும்படி ரொம்பவும் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்; ஏனென்ருல், இந்த உலக முழுவதும் நான் உன்னையே தேடியலைந்தேன். நீ என்னுடன் வந்துவிடு, என் மகனே. உன் அன்பு எனக்கு இன்றியமையாததாக இருக்கிறது' என்று தன் குறையைச்சொல்லி முறையிட்டுக் கொண்டாள்.

நட்சத்திரக் குழந்தை, அவன் நின்றவிடத்திலிருந்து சற்றும் நகரவேயில்லை. அவளுடைய முறையீட்டைக்கேட்டு அவன் உள்ளம் கனியவில்லை. அந்தஸ்திரீ அழுது புலம்பும் துன்பக்குரலைத்தவிர வேறு எவ்வித ஒலியும் அங்கு கேட்கவில்லை.

கடைசியாக, அவன் அவளிடம் பேசினுன். அவன் பேசிய தொனி கடுமையாகவும் கொடூரமாகவும் இருந்தது. 'அப்படியே நீ உண்மையாகவே என்னுடைய தாயாராக இருந்தபோதிலும், என்னை அவமானத்துக்குள்ளாக்காமல், நீ தூர இருந்துகொண்டு, நீ சொல்லுவதைப்போல நான் ஒரு பிச்சைக்காரியின் குழந்தை யாக இராமல், என்னை நான் ஏதோ ஒரு நட்சத்திரக்குழந்தை யென்றே யெண்ணி வாழ்வதைப்பார்த்து இன்புற்றிருப்பதே சிறந்ததாகும். ஆகையால், நீ இங்கிருந்து போய்விடு. இனிமேல் என் கண்ணில் படாதே' என்று சொன்னுன்.

'ஆ! என் மகனே, நான் உன்னைப்பிரிந்து போகுமுன் எனக்கு ஒரு முத்தம் அளிக்கமாட்டாயா? நான் உன்னைக்காண எவ் வளவோ துன்பமனுபவித்திருக்கிறேன் அப்பா!' என்ருள்.

'முடியாது! உன்னைப் பார்க்கவே சகிக்காமல் நீ ரொம்பவும் மோசமாக இருக்கிருயே! உன்னை முத்தமிடுவதைக் காட்டிலும்

விஷமுடைய விரியனையும், விகாரமான தேரையையும்கூட நான் முத்தமிட விரும்புவேனே!' என்று ஏளனமாய்ச் சொன்னான்.

இதைச் செவியுற்றதும் அந்தஸ்திரீ அலறிக்கொண்டே காட்டைநோக்கி நடந்தாள். அவள் சென்றுவிட்டாள் என்பதை யறிந்ததும் நட்சத்திரக்குழந்தை மிக மகிழ்ச்சியடைந்தான். ரொம்பவும் குதூகலத்துடன் ஓடிச்சென்று தோழர்களோடு விளையாடப் போனான்.

அவன் வருவதைக்கண்ட அவனுடைய தோழர்கள் அவனைப் பரிகாசம் பண்ணினார்கள்: 'என்ன, தேரையைப்போலவே ரொம்ப விகாரமாய் இருக்கிறாயே-விரியனைவிட நீ மிகக் குரூப மாக இருக்கிறாயே. இங்கிருந்து நீ போய்விடு. உன்னோடுவிளையாடி நாங்கள் துன்பமடைய முடியாது' என்று சொல்லி அவனைச் சோலையிலிருந்து வெளியே துரத்திவிட்டார்கள்.

நட்சத்திரக்குழந்தை ரொம்பவும் கோபம் கொண்டான். 'என்னைப்பற்றி அவர்கள் ஏதேதோ சொல்கிறார்களே, என்ன அது? நான் ஒரு நீர் நிறைந்த கிணற்றுக்குச் சென்று அதனுள் எட்டிப்பார்க்கப்போகிறேன். அது காட்டிவிடும் என்னுடைய உண்மையழகை' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

அவ்வாறே, அவன் ஒரு நீர்நிறைந்த கிணற்றுக்குச் சென்று அதனுள் எட்டிப் பார்த்தான். ஆ! அவனுடைய முகம் மிகவும் விகாரமாக தேரையைப் போலவே இருந்தது. அவனது தேகம் விரியன் பாம்பின் உடலைப்போலவே மிகக் குரூபமாய் இருந்தது, திகிலடைந்து அப்படியே புல் தரையில் விழுந்துவிட்டான். அழுது புலம்பினான். 'நிச்சயமாக எனக்கு நேர்ந்திருக்கும் இந்தக் கதி நான்செய்த பாபத்தின் பயனாகத்தான் இருக்கவேண்டும். ஏனென்றால், நான் என் தாய்சொல் துறந்தேன்—அவளைத் துரத்திவிட்டேன். மகா கர்வியாய் இருந்தேன். நான் அவளிடம் கொடுமையாய் நடந்துகொண்டேன். அதனால் உலக முழுவதும் அலைந்து அவளைத் தேடிக் கண்டுபிடிக்கப்போகிறேன். நான் அவளைக்கண்டு

பிடிக்கும் வரையில் எனக்கு ஓய்வு என்பதே கிடையாது' என்று எண்ணிக்கொண்டான்.

அவனிடம் அந்த விறகுவெட்டியின் சின்னப் பெண் ஓடி வந்து அவன் தோளின்மீது கையைப் போட்டுக்கொண்டு, 'நீ உன்னுடைய அழகை இழந்து விட்டதனால் என்ன? நீ எங்களுடனேயே இரு. நான் உன்னைக்கண்டு பரிகாசம் பண்ணவில்லை,' என்றாள்.

'முடியாது—நான் என் அம்மாவுக்கு கொடுமை செய்துவிட்டேன். அதன்பொருட்டு எனக்கு விதிக்கப்பட்ட கொடுந் தண்டனையாகவே எனக்கு இந்தக் கேடுவந்து சூழ்ந்திருக்கிறது. அதனாலே நான் இங்கிருந்து கிளம்பி, உலகமெங்கும் சுற்றித்திரிந்து அவளை எவ்விதமாவது கண்டுபிடிக்கவேண்டும்—கண்டுபிடித்து, அவளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும் வரை நான் இங்கே சும்மா இருப்பது தகாது' என்று அவளிடம் கூறினான்.

அதன்படியே காட்டை நோக்கி ஓடிவிட்டான். அம்மாவைத் தன்னிடம் வந்து சேரும்படி வருந்தி வருந்திக் கூவியழைத்தான். அதற்கு பதிலே கிடைக்கவில்லை. நாள் முழுதும் உரக்கக் கத்தி அவளைக் கூப்பிட்டான். சூரியன் அஸ்தமித்ததும் தழை குழைகளைப் படுக்கையாக விரித்துக்கொண்டு படுத்து உறங்கினான். பறவைகளும் விலங்குகளும் அவனை நெருங்கவுமில்லை. ஆம்! அவனுடைய கொடுமைகளை அவைகள் மறக்கவில்லை. அவனைக் காவல் புரிந்துவந்த அந்த விரியன்பாம்பும், மெதுவாய் ஊர்ந்து கொண்டிருந்த அந்தத் தேரையையும் தவிர, அங்கு வேறு யாருமேயில்லை. அவன் தனிமையாகவே இருந்தான்.

காலையில் அவன் எழுந்திருந்தான். அந்தக் காட்டுமரங்களிலிருந்து எதோ சில பழங்களைப் பறித்துத் தின்றான். மிக்க வருத்தத்துடன் அழுது புலம்பிக்கொண்டே பெருங் காட்டினுள் வழி நடந்தான். வழியில் அவன் எதிரில் கண்டவர்களையெல்லாம், 'அவர்கள் ஒருவேளை தன்னுடைய தாயாரைப் பார்த்திருக்கலாம்' என்றெண்ணி விசாரித்தான்.

நட்சத்திரக் குழந்தை

'நீ பூமிக்குள்ளே சென்று வாழ்வாயே. என் அம்மா அங்கே இருக்கிருளா? உனக்குத் தெரிந்தால் சொல்லேன்'என்று வளையில் வாழும் எலியைப் பார்த்து அவன் கேட்டான்.

'நீதான் என் கண்களைக் குத்திக் குருடாக்கிவிட்டாயே, நான் எவ்விதம் காணமுடியும்? என்று பதிலளித்தது எலி.

பாடும் சிறு குருவியினிடம் அவன் சென்று 'மிக உயர்ந்த மரங்களின் மீதெல்லாம் நீ பறந்து திரிவாயே; அங்கிருந்து உலக முழுவதையும் நீ காணமுடியுமே, நீ என் அம்மாவைப் பார்த் தாயோ? சொல்லேன்' என்முன்.

'உனது சந்தோஷத்திற்காக நீதான் என் சிறகுகளை வெட்டிவிட்டாயே! நான் எப்படிப் பறக்கமுடியும்?' என்று அந்தக் குருவி சொன்னது. பிர்மரத்தில் தனியே வசித்துவந்த அந்தச் சிறு அணிலைப்பார்த்து 'என் அம்மா எங்கே இருக்கிருள்?' என்று கேட்டான் அவன்.

'என் தாயைத்தான் நீ கொன்றுவிட்டாய். ஏன், உன்னு டைய அம்மாவையும் கொன்றுவிடுவதற்காகத்தான் தேடுகிருயா?' என்று கேட்டது அந்த அணில்.

நட்சத்திரக் குழந்தை அழுதான். தலை குனிந்தான். தெய்வ சிருஷ்டிகளிடம்-மன்னிக்கும்படி பிரார்த்தித்தான். பின்னர் அந்தப் பிச்சைக்காரியைத் தேடிக் காட்டில் சென்றுகொண்டிருந்தான். மூன்ருவது நாள் அவன் காட்டின் மற்ருெரு புறத்திற்கு வந்துவிட் டான். பின்னர், மைதானத்தினுள் நுழைந்தான் அவன்.

கிராமங்களின் வழியாக அவன் போய்க்கொண்டிருந்த பொழுது குழந்தைகளெல்லாம் அவனைப்பார்த்துக் கேலி செய் தார்கள். அவன்மீது கற்களை விசினுர்கள். சேகரித்து வைத்துள்ள தானியங்களுக்கு ஏதாவது கெடுதல் நேருமோவென்றஞ்சி, அவனை அங்கு மாடுகட்டுமிடத்தில்கூட படுக்கவிடமாட்டேன் என்ருர்கள். அவனைப்பார்ப்பதற்கு அவ்வளவு கேவலமாக இருந்தது. அங் கிருந்தவர்கள் அவனைத் துரத்திவிட்டார்கள். அவனுக்கு இரங்கு

வோர் அங்கு எவருமில்லை. மூன்று வருடகாலமாக அவன் உலக முழுதும் தேடித்திரிந்தும்கூட அவனுடைய தாயாகிய அந்தப் பிச்சைக்காரியைப்பற்றி அவன் எங்கும் கேள்விப்படவுமில்லை, பாதை நெடுகிலும், அவன் போய்க்கொண்டிருக்கும்போதே, திடீரென்று அவனுக்கெதிரில் தன் தாயார் வந்துநிற்பதுபோல அவனுக்குத் தோன்றும். அதை நிஜமென நம்பி, ஆவலுடன் அவளைக் கூப்பிடுவான். கூர்மையான கற்கள் காலில் இடறி இரத்தம் சிந்தும். அதுவரையில் விடாமல் பின் தொடர்ந்தே விரைந்தோடுவான். ஆனால் எப்படியாவது அவளைப் பிடித்துவிடுவது என்பது மட்டும் இவனால் முடியாது. அங்கே வசித்திருந்தவர்களெல்லாம் இவனுடைய துன்பத்தையும், மனோ வேதனையையும் தங்களுடைய விளையாட்டுக்கு உபயோகித்துக்கொண்டு, 'இப்பொழுதுதானே இங்கே அவளை நான் கண்டேன்' என்று இச்சகம் பேசி இவனை ஏமாற்றி அலைப்பார்கள். அவன் உலக முழுவதும் சுற்றித்திரிந்த இந்த மூன்று வருட காலத்தில் உலகத்தில் எங்கும் அவனிடம் அன்போ—இரக்கமோ—கருணையோ, தரும சிந்தையோ எதையும் யாரும் காட்டவில்லை. ஆனால், அவன் அகம்பாவமும் கர்வமும் கொண்டு யதேச்சையாக வாழ்ந்தானே அந்த நாளில் இவன் உலகத்தின்மீது எவ்விதம் எண்ணங்கொண்டிருந்தானோ அவ்விதமேதான் இப்பொழுதும் அவனிடம் இருந்தது.

களைத்துப்போய், கால்வலி யெடுத்துத் தள்ளாடிக்கொண்டிருந்த போதிலும், ஒரு நாள் சாயங்காலம் ஆற்றோரத்தின் அருகில் இருந்த மதில் சூழ்ந்த ஒரு பெரிய நகரத்தின் கோட்டை வாயிலை அடைந்து உள்ளே நுழைய முயன்றான். ஆனால், அங்கு காவல் புரிந்துவந்த சிப்பாய்கள் வழியின் குறுக்கே வாளை நீட்டி மறைத்தார்கள். அத்துடன் 'நகரத்தில் உனக்கென்ன வேலை? என்று கொஞ்சம் விரைப்பாகவே அவனைக் கேட்டார்கள்.

'நான் என் அம்மாவைத் தேடிக்கொண்டிருக்கிறேன். அவள் ஒருவேளை இந்த நகரத்தில் காணப்படலாமல்லவா? ஆதலால், என்னை உள்ளே செல்ல அனுமதிக்கும்படி உங்களை ரொம்பவும் வேண்டுகிறேன்' என்று அவன் அவர்களைக் கெஞ்சினான்.

நட்சத்திரக் குழந்தை

அவர்கள் அவனைப் பரிகாசம் பண்ணினார்கள். அவர்களில் ஒருவன் தாடியை ஆட்டிக்கொண்டு, கவசத்தைக் கீழே வைத்து விட்டு, 'உன்னை உன் தாயார் பார்த்தாளோ, இல்லையோ; நிச்சயமாய் அலறியழுவாள். சேற்றில் வாழும் தேரையைவிட, இல்லை, வேலியில் திரியும் விரியன் பாம்பைவிட நீ மிகவும் கேவலமாக, குரூபியாகக் காணப்படுகிறாயே. போ—போ, பேசாமல் போய்விடு. உன் அம்மா ஒன்றும் இந்த நகரத்தில் வசிக்கவில்லை.' என்று சற்றுக் கடுமையாகவே கூறினான். கையில் மஞ்சள் கொடியைத் தாங்கி நிற்கும் மற்றொருவன், உன் அம்மா யார்? அவளை நீ என்னத்திற்காகத் தேடுகிறாய்? என்று கேட்டான்.

'என்னுடைய அம்மாவும் என்னைப்போல ஒரு பிச்சைக்காரி தான். அவளை நான் மிகவும் கொடுமைப்படுத்தி விட்டேன். அவள் ஒருவேளை இந்த நகரத்தில் தங்கி இருக்கலாம். எப்படியாவது அவளைக் கண்டுபிடித்து என்னை மன்னிக்கும்படி அவளிடம் கேட்பதற்காகவே செல்கிறேன். அதற்காக என்னை நகரத்தினுள்ளே அனுமதிக்கும்படி ரொம்பவும் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்' என்று மன்றாடினான்.

ஆனால், அவர்கள் அவனை அனுமதிக்கவில்லை. ஈட்டியால் அவனைக் குத்தித் துன்புறுத்தினார்கள்.

அவன் அழுதுகொண்டே திரும்பிச் சென்றான். உடனே அங்கொருவன் வந்தான். அவனது ஆயுதங்களில் பொன் மலர்கள் சூட்டப்பட்டிருந்தன, தலையில் அணிந்திருந்த அவன் கிரீடத்தில் சிறகுகள் பொருந்திய சிங்கம் அமர்ந்திருப்பது போன்ற ஒரு உருவம் செதுக்கப்பட்டிருந்தது. 'நகரினுள்ளே செல்லவேண்டுமென்று கேட்டானே, அது யார்? என்று அவன் சிப்பாய்களை விசாரித்தான்.

'ஆம், அது ஒரு பிச்சைக்காரப்பயல், யாரோ ஒரு பிச்சைக்காரியின் பிள்ளையாம், நாங்கள் அவனைத் துரத்திவிட்டோம்,' என்றார்கள் சிப்பாய்கள்.

நட்சத்திரக் குழந்தை

'ஏன், அந்த அனுதையை யாருக்காவது ஒரு அடிமையாக நாம் விற்றுவிடுவோமே, அதற்குக்கிடைக்கும் பணம் நமக்கு ஒரு கிண்ணம் இனிய பானமாச்சு' என்று குதூகலமாகக் கூறினுன்.

அவ்வழியாகச் சென்றுகொண்டிருந்த ஒரு வயது சென்ற விகாரமான மனிதன் இதைக்கேட்டதும், அவர்களைக் கூப்பிட்டு, 'அந்தவிலைக்கு நான் வாங்கிக்கொள்கிறேன்' என்று கூறி, பணத்தைக் கொடுத்துவிட்டு, நட்சத்திரக் குழந்தையைக் கையில் பிடித்து அழைத்துக்கொண்டு நகரத்தினுள்ளே சென்ருன்.

அதன் பின்பு, அவர்கள் எத்தனையோ தெருக்களையெல்லாம் தாண்டி ஒரு சிறிய கதவுள்ள வாயிற்படியை அடைந்தார்கள். அதன் முன்னுல் அடர்த்தியான மாதுளை மரம் இருந்தது. அந்தக்கிழவன் ஒரு சூரிய காந்தக்கல் பதித்த மோதிரத்தினுல் அந்தச் சிறு கதவைத் தொட்டதும் அது திறந்துகொண்டது. உள்ளே நாலைந்து அடி நடந்ததும் புல் பூண்டுகளும் மண் சட்டிகளும் நிறைந்திருந்த ஒரு தோட்டத்தில் புகுந்தார்கள். பின்னர் அந்தக் கிழவன் தன் தலைப்பாகையிலிருந்து ஒரு அழகிய பட்டுத் துணியை எடுத்து நட்சத்திரக்குழந்தையின் கண்களைச் சுற்றிக் கட்டித் தன் முன்னுல் நடக்கச் செய்தான். அவனது கண்களைக் கட்டியிருந்த அந்தத் துணியை அவிழ்த்ததும், நட்சத்திரக் குழந்தைதான் ஒரு இருட்டறையில் இருப்பதை உணர்ந்தான். அங்கு, வளைந்த குழல்போன்ற ஒரு சிறு விளக்கிலிருந்து கொஞ்சம் வெளிச்சம் தெரிந்தது.

பிறகு அந்தக் கிழவன் சில பழைய கெட்டுப்போன ரொட்டிகளை ஒரு தட்டிலிட்டு அவன் முன்பு கொண்டுவைத்து 'சாப்பிடு' என்ருன். இன்னும் ஒரு கிண்ணத்தில் உப்புக்கரிக்கும் தண்ணீரைக்கொண்டு வைத்து 'குடி' என்ருன், அவன் அந்த ரொட்டிகளைத்தின்று, தண்ணீரைக் குடித்ததும், அவனை உள்ளே வைத்துக் கதவைப் பூட்டி இரும்புச் சங்கிலியால் நன்ருய்ப் பிணைத்துக் கட்டிவிட்டு அந்தக்கிழவன் வெளியே சென்றுவிட்டான்.

மறுநாள் காலையில் அந்தக் கிழவன் அங்கே அவனிடம் வந்தான். அந்தக்கிழவன்—, உண்மையிலேயே லிபியா நாட்டின் மந்திரவாதிகளில் மிகச் சிறந்தவன். நைல் நதியின் கரையருகில் உள்ள கல்லறைப் பக்கத்தில் வசித்துவந்த ஒருவரிடமிருந்து இந்தக்கலையை அவன் கற்றுத் தேர்ந்தான்—அவனிடம் ரொம்பவும் கோபத்துடன் சொன்னான்: 'இந்த ஜியார்ஸ் நகரத்தின் கோட்டைவாயிலுக்குச் சமீபத்தில் உள்ள காட்டில் மூன்று தங்கக்கட்டிகள் உள்ளன. அவைகளில் ஒன்று வெள்ளை நிறமுள்ள தங்கக்கட்டி; மற்றொன்று மஞ்சள் நிறமுள்ள தங்கக் கட்டி; மூன்றாவது தங்கக்கட்டி சிவப்பு நிறமுள்ளது. இன்றைக்கு நீ போய் அந்த வெள்ளைத் தங்கக்கட்டியை, என்னிடம் கொண்டு வந்துதரவேண்டும். அதைக் கொண்டுவரவில்லையென்றால், நான் சவுக்கினால், உன்னை நூறு அடி அடிப்பேன். போய் சீக்கிரம் கொண்டுவா. சாயங்காலம் இந்தத் தோட்டத்து வாயிலில் நான் உனக்காகக் காத்துக்கொண்டிருப்பேன்-கட்டாயம் நீ போய் அந்த வெள்ளை நிறமுள்ள தங்கக் கட்டியைக் கொண்டு வந்து தீரவேண்டும்-இல்லாவிட்டால் உன் பாடு பேராபத்தாய் முடியும். ஏனென்றால், நீ என்னுடைய அடிமை. நான் உன்னை ஒரு கிண்ணம் மதுரமான பானத்திற் குரியவிலை கொடுத்து வாங்கியிருக்கிறேன்.'

அழகிய பட்டுத்துணியினால் அவன் நட்சத்திரக் குழந்தையின் கண்களைக்கட்டி, வீட்டின் வழியே அழைத்துச் சென்று, அந்தத்தோட்டத்தைத் தாண்டி நாலைந்து அடி நடந்து சென்றான். தன்னுடைய அந்த மோதிரத்தினால் சிறு கதவைத்திறந்ததும் அவனைத் தெருவில் கொண்டுவந்துவிட்டான்.

நட்சத்திரக் குழந்தை நகரத்தின் கோட்டை வாயிலைக் கடந்து, அவனிடம் மந்திரவாதி கூறிய அந்தக் காட்டுக்கு வந்து சேர்ந்தான். அந்தக்காடு தூரத்திலிருந்து பார்ப்பதற்கு மிக அழகாக இருந்தது. இசை பாடும் பறவைகள் ஏராளமாகக் காணப்பட்டன, நறுமணம் கமழும் அழகிய மலர்கள் எங்கும் நிறைந்திருந்தன, இத்தகைய காட்டில் நட்சத்திரக்குழந்தை மிக

மகிழ்ச்சியுடன் சென்றுகொண்டிருந்தான். என்றாலும், இந்த அழகிய காட்சிகள் அவனுக்கு வெகுவாகப் பிரயோசனப்படவில்லை. ஏனென்றால் அவன் போகுமிடமெல்லாம் அடர்ந்த முட்புதர்களும், சிறு முட்செடிகளும் அவனை வழி மறித்தன. காஞ்சொறிபோன்ற முட் செடிகள் வேறு வேதனையளித்தன. கூர்மையான ஈட்டிகள் பாய்வதுபோல் நெருஞ்சி முட்கள் காலில் தைத்தன. இவைகளின் தொந்தரவினால் பெருந்துயரமடைந்தான். உதயத்திலிருந்து உச்சிப்பொழுது வரையிலும், இன்னும் உச்சிப்பொழுது முதல் அஸ்தமனம் வரையிலும் இடைவிடாது அதற்காகவே அலைந்து திரிந்தும் மந்திரவாதி சொல்லிய அந்த வெள்ளைத் தங்கக்கட்டியை அவன் எங்கும் காண முடியவில்லை. பின்பு, அஸ்தமித்ததும் அலறி அழுதுகொண்டு வீட்டை நோக்கித் திரும்பினான். ஏனென்றால், வீட்டுக்குச் சென்றதும் தனக்கு எத்தகைய விபரீதம் நேரக் காத்திருக்கிற தென்பது அவனுக்குத் தெரியும்.

ஆனால், காட்டின் எல்லையை அவன் அடைந்ததும், யாரோ ஒருவர் ஏதோ துன்புறுவது போன்ற ஒரு குரல் அருகிலிருந்த புதரிலிருந்து கேட்டது. இதைக் கேட்டதும், தன் துன்பத்தையும் மறந்து, அவன் அந்த இடத்திற்கு ஓடோடியும் சென்று பார்த்தான். அங்கே யாரோ ஒரு வேடன் முயலைப் பிடிப்பதற்காக வைத்திருந்த ஒரு பொறியில் சிறு முயலொன்று அகப்பட்டுக்கொண்டு தவிப்பதைக் கண்டான்.

நட்சத்திரக் குழந்தை அதைக் கண்டு மனமிரங்கி அதைப் பொறியிலிருந்து விடுவித்தான். அவன் அதனிடம் சொன்னான்: 'நானே ஒரு அடிமைதான்—இருந்தபோதிலும் நான் உனக்குச் சுதந்திரமளிக்கலாமல்லவா?'

'ஆம், உண்மையிலேயே நீ தான் எனக்குச் சுதந்திரமளித்தாய். நான் உனக்கு என்ன பிரதியுபகாரம் செய்யமுடியும்?' என்றது அந்த முயல்.

நட்சத்திரக் குழந்தை

'நான் ஒரு வெள்ளை நிறமுள்ள தங்கக் கட்டியைத் தேடியலைகிறேன். எங்குமே அதைக் காணமுடியவில்லை. அதை என் எஜமானனுக்கு நான் கொண்டுபோய்க் கொடுக்கவில்லையென்றால், அவர் என்னை நன்றாய் உதைத்துவிடுவார்' என்று அதனிடம் சொன்னான் நட்சத்திரக் குழந்தை.

'அது எந்த இடத்தில், என்ன காரியத்திற்காக மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது என்பது எனக்குத் தெரியும். நான் உன்னை அந்த இடத்திற்கு அழைத்துச் செல்கிறேன். நீ என்னுடன் வா' என்று சொல்லியது முயல்.

நட்சத்திரக் குழந்தையும் முயலுடனே சென்றான். ஆ! ஒரு பெரிய 'ஓக் மரத்தின்' பொந்தில் அவன் தேடிக்கொண்டிருந்த அந்த வெள்ளைத் தங்கக் கட்டியை அவன் கண்டான். அளவிலா ஆனந்தமடைந்தான். அதை வாங்கிக் கொண்டு அவன் முயலினிடம் சொன்னான்.

'நான் உனக்குச் செய்த ஒரு உதவியை எனக்கு நீ அதை விடப் பல மடங்குகள் அதிகமாகவே திருப்பிச் செய்திருக்கிறாய். நான் உன்னிடம் காட்டிய அன்பை நீ எனக்கு அதைக்காட்டிலும் நூறு மடங்கு அதிகமாகக் காட்டியுள்ளாய்?'

'இல்லை, நீ என்னிடம் நடந்துகொண்டது போலவேதான் நானும் உன்னிடம் நடந்துகொண்டிருக்கிறேன்' என்று பதிலளித்துவிட்டு, முயல் வெகு வேகமாய் ஓடி மறைந்தது. அந்த நட்சத்திரக் குழந்தையும் நகரத்தை நோக்கி நடந்தான்.

வரும் வழியில், நகரத்தின் கோட்டை வாயிலில் ஒரு மனிதன் உட்கார்ந்திருந்தான். அவன் ஒரு குஷ்டரோகி. அவன் முகத்தின்மீது பழுப்பு நிறத்தில் ஒரு கம்பளியைக் கட்டிக்கொண்டிருந்தான். அவனது குழிந்த சிறு கண்களில் தணல்போன்ற இரு விழிகள் ஒளி வீசின. நட்சத்திரக் குழந்தை வருவதைக் கண்டதும், அவன் தன்னிடமிருந்த மண் சட்டியில் தட்டியும், மணியை ஆட்டி சப்தப்படுத்தியும் அவனைக் கூப்பிட்டான் 'எனக்

குக் கொஞ்சம் பணம் கொடு; இல்லாவிட்டால் நான் பட்டினியால் சாகவேண்டியதுதான். ஏனென்ருல், அவர்கள் நகரத்திற்கு வெளியே என்னைத் தள்ளிவிட்டார்கள். அங்கே என்மீது அனுதாபமுடையவர் யாருமில்லை' என்று அவனைக் கெஞ்சினுன்.

'ஐயோ! நான் என் பையில் ஒரே ஒரு நாணயம்தானே வைத்திருக்கிறேன். அதை நான் என் எஜமானனிடம் கொண்டு போய் கொடுக்காவிட்டால், அவர் என்னை உதைத்துவிடுவார். ஏனென்ருல், நான் அவருடைய அடிமை' என்று கூறி மனங் கலங்கினுன்.

ஆனுல், அந்தக் குஷ்டரோகி அவனை ரொம்பவும் கெஞ்சி உதவி புரியுமாறு வேண்டிக்கொண்டான். நட்சத்திரக் குழந்தை அவனுக்கு இரங்கித் தன் கையிலிருந்த அந்த வெள்ளை நிறத் தங்கக் கட்டியைக் கொடுத்து விடும்வரையில் குஷ்டரோகி அவனை மிகவும் பணிந்து பிரார்த்தித்துக் கொண்டான்.

அந்த மந்திரவாதியின் வீட்டுக்கு அவன் வந்ததும், மந்திரவாதி கதவைத் திறந்து வைத்துக்கொண்டு அவனுக்காகக் காத்திருந்தான். அவனை உள்ளே அழைத்துச்சென்று, 'என்ன, அந்த வெள்ளை நிறமுள்ள தங்கக் கட்டியை நீ கொண்டுவந்தாயா?' என்று அவனைக் கேட்டான். 'நான் அதைக் கொண்டுவரவில்லை' என்ருன், நட்சத்திரக் குழந்தை. இதைக்கேட்ட மந்திரவாதி அவன் மீது கோபங்கொண்டு சீறிவிழுந்தான். அவனை நன்ருய் உதைத்தான். அவனுக்குமுன்பு ஒரு வெறுந் தட்டைவைத்து 'சாப்பிடு' என்ருன். ஒரு காலிக் கிண்ணத்தை வைத்து 'குடி' என்ருன். பின்பு, அவனை அந்த இருட்டறையில் தள்ளினுன்.

மறுநாள் காலை மந்திரவாதி அவனிடம்வந்து 'இன்றைக்கு நீ போய் என்னிடம் அந்த மஞ்சள் நிறமுள்ள தங்கக் கட்டியைக் கொண்டுவந்து கொடுக்கவில்லையாஞல், நான் உன்னை நிச்சயமாகவே அடிமையாக்கி உனக்குச் சவுக்கினுல் முந்நூறு அடி கொடுப்பேன்' என்ருன்.

அதன்படியே, நட்சத்திரக் குழந்தை காட்டுக்குச் சென்ருன். நாள் முழுதும் அவன் அந்த மஞ்சள்நிறத் தங்கக் கட்டியைத் தேடித்திரிந்தான். ஆனால், அவன் அதை எங்கும் காண முடியவில்லை. அஸ்தமித்ததும் அவன் உட்கார்ந்து அழத் தொடங்கினுன். இவ்வாறு அவன் அழுதுகொண்டிருக்கும் பொழுது, முன்பு பொறியிலிருந்து விடுதலை செய்து காப்பாற்றினுனே, அந்தச் சிறு முயல் அவனிடம் வந்தது. 'நீ ஏன் அழுது கொண்டிருக்கிருய்? காட்டில் நீ எதைத் தேடுகிருய்?' என்று அந்த முயல் அவனைக் கேட்டது.

'இங்கு எங்கேயோ மறைந்துகிடக்கும் ஒரு மஞ்சள்நிறத் தங்கக் கட்டியைத் தேடியலைகிறேன் நான். அதை நான் கண்டு பிடிக்கவில்லையானல் என்னை என் எஜமானர் நன்ருய் உதைத்து விடுவார். இன்னும் என்னை அடிமையாகவும் வைத்துக்கொண்டு விடுவார்' என்று சொன்னுன்.

'நீ என்னுடனே வா' என்று சொல்லி அந்த முயல் காட்டின் வழியே ஓடிச்சென்று ஒரு தண்ணீர்க் குட்டையை அடைந்தது. அந்தக் குட்டையின் அடியில் கிடந்தது அந்த மஞ்சள்நிறத் தங்கக் கட்டி.

'நான் உனக்கு எவ்வாறு நன்றி கூறுவேன்; ஆ! இவ்விதமாக நீ எனக்கு இந்த இரண்டாவது தடவையும் சரியான சமயத்தில் உதவிபுரிந்து உபகாரம் செய்திருக்கிருய்' என்று சொல்லி, நட்சத்திரக் குழந்தை அதனைப் பாராட்டினுன்.

'இல்லை, நீதான் முதலில் என்மீது கருணைகாட்டினுய்' என்று அந்த முயல் சொல்லிவிட்டு, வெகு வேகமாய் ஓடிவிட்டது.

நட்சத்திரக் குழந்தை அந்த மஞ்சள்நிறத் தங்கக் கட்டியை எடுத்துத் தன் பையில் வைத்துக்கொண்டு நகரத்தை நோக்கி விரைந்து நடந்தான். அவன் வருவதைக் கண்டதும் அந்தக் குஷ்டரோகி அவன் எதிரில் ஓடிச்சென்று, 'எனக்குக் கொஞ்சம் பணம்

கொடு. இல்லாவிட்டால் நான் பட்டினியால் சாகவேண்டியது தான்' என்று சொல்லி, அவனிடம் முழங்கால் மண்டியிட்டுக் கெஞ்சினான்.

'நான் என்னுடைய பையில் ஒரே ஒரு மஞ்சள் நிறமுள்ள தங்கக் கட்டியைத்தானே வைத்திருக்கிறேன். நான் அதை என் எஜமானரிடம் கொண்டுபோய்க் கொடுக்காவிட்டால் அவர் என்னை நன்றாய் உதைத்துவிடுவார். அவருடைய அடிமையாகவும் என்னை ஆக்கிக்கொள்ளுவார்' என்று அவனிடம் சொன்னான் நட்சத்திரக் குழந்தை. அந்தக் குஷ்டரோகி அவனை ரொம்பவும் வற்புறுத்திக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதால் நட்சத்திரக் குழந்தை அவன்மீது இரக்கம் கொண்டு, அந்த மஞ்சள் நிறத் தங்கக் கட்டியை அவனுக்குக் கொடுத்துவிட்டான்.

மந்திரவாதியின் வீட்டுக்கு அவன் வந்ததும், மந்திரவாதி கதவைத்திறந்து அவனை உள்ளே அழைத்துச்சென்று 'என்ன, அந்த மஞ்சள் நிறமுள்ள தங்கக்கட்டியை நீ கொண்டுவந்திருக்கிறாயா? என்று கேட்டான்.

'நான் அதைக்கொண்டுவரவில்லை' என்று சொன்னான் நட்சத்திரக் குழந்தை.

இதைக்கேட்ட மந்திரவாதி அவன் மீது சீறி விழுந்தான். நன்றாய் அவனை உதைத்தான். அவனுக்கு விலங்குபோட்டு, அந்த இருட்டறையிலேயே தள்ளிவிட்டான்.

மறுநாள் காலையில் மந்திரவாதி அவனிடம் வந்து 'இன்றைக்கு நீ போய் அந்தச் சிவப்பு நிறமுள்ள தங்கக்கட்டியை என்னிடம் கொண்டுவந்து கொடுத்துவிட்டால் நான் உன்னை விடுதலை செய்துவிடுவேன். நீ மட்டும் அதனைக் கொண்டுவர வில்லையானால் நான் உன்னை நிச்சயமாய்க் கொன்றேவிடுவேன்' என்று கூறினான்.

நட்சத்திரக் குழந்தை

நட்சத்திரக் குழந்தை காட்டிற்குச் சென்றான். நாள் முழுதும் அந்தச் சிவப்பு நிறமுள்ள தங்கக் கட்டியைத் தேடித் திரிந்தான். ஆனால் அவன் அதை எங்கும் காணமுடியவில்லை. சாயங்காலமானதும் அவன் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தான். அப்பொழுது அவன் அருகில் அந்தச் சிறு முயல் வந்தது.

'நீ தேடுகிற அந்தச் சிவப்பு நிறத் தங்கக்கட்டி உனக்குப் பின்னால் உள்ள குகையில் இருக்கிறது. அதனால் நீ இனி அழ வேண்டாம். சந்தோஷமாக இரு' என்று அவனிடம் முயல் சொல்லியது.

'நான் உனக்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்? ஆ! இந்த மூன்றாவது தடவையும் எனக்கு நீ சரியான சமயத்தில் வந்து சகாயம் செய்திருக்கிறாய்' என்றான் நட்சத்திரக் குழந்தை.

'இல்லை, நீதான் முதலில் என் மீது கருணைகாட்டினாய்' என்று அந்த முயல் பதிலளித்துவிட்டு மிகவேகமாய் ஓடிவிட்டது.

நட்சத்திரக் குழந்தை குகையினுள் நுழைந்தான். அதன் ஒரு கோடியில் அந்தச் சிவப்புநிறத் தங்கக்கட்டியை அவன் கண்டான். அதை எடுத்து அவன் தன் பையில் வைத்துக்கொண்டு விரைந்து நகரத்தை நோக்கி நடந்தான். அந்தக் குஷ்டரோகி அவன் வருவதைக்கண்டு வழியில் நின்று மறித்து, 'அந்த சிவப்புத் தங்கக் கட்டியை எனக்குக் கொடுத்துவிடு. இல்லாவிட்டால், நான் சாகத்தான் வேண்டும்' என்று அவனிடம் கெஞ்சினான்.

'என்னுடையதைவிட உன்னுடைய தேவை மிக அவசியமாக இருக்கிறது' என்று கூறி நட்சத்திரக் குழந்தை அவன் மீது மனமிரங்கி, அந்தச் சிவப்புத் தங்கக்கட்டியை அவனிடம் கொடுத்துவிட்டான். என்றாலும், அவன் உள்ளம் வருந்தியது. ஏனென்றால், தனக்கு என்ன விபரீதம் காத்துக்கிடக்கிறது என்பதை அவன் நன்கறிந்திருந்தான்.

நட்சத்திரக் குழந்தை

ஆ! நகரத்தின் கோட்டைவாயிலில் நுழைந்தவுடன் காவலாளிகள் 'நமது அரசர் எத்தனை அழகும் கம்பீரமும் உடையவராய் விளங்குகிறார்!' என்று அதிசயித்து, அவனை வணங்கினர்.

உலக முழுவதிலும் தேடினாலும் நிச்சயமாக இத்தகைய அழகும் கம்பீரமு முடைய ஒருவரைக்காண முடியாது என்ற சந்தோஷத்துடன் ஆரவாரித்து, நகரத்தின் ஜனத்திரள் அவனைச் சூழ்ந்து பின் தொடர்ந்து வந்தது. இதைக்கண்ட நட்சத்திரக் குழந்தை 'ஐயோ! என்னைக்கண்டு எல்லோரும் கேலி செய்கிறார்களே, என்னுடைய ஏழ்மையைக்கண்டு இகழ்ந்து பழிக்கிறார்களே' என்று அழுது புலம்பினான். ஏராளமான ஜனக்கூட்டத்தினிடையே மிக சிரமத்துடன் நடந்து சென்ற அவன் வழிதவறி எங்கெங்கோ சென்று கடைசியில்தான் ஒரு பிரம்மாண்டமான மைதானத்தில் வந்து நிற்பதை உணர்ந்தான். அங்கு ஒரு அரசனின் அழகிய அரண்மனை இருந்தது. அந்த அரண்மனையின் வாயிற்கதவு திறந்திருந்தது. குருமார்களும் நகரத்தின் மேலதிகாரிகளும் அவனைக் காண விரைந்து சென்று, தாழ்ந்து பணிந்தனர். 'நீங்கள்தான் எங்கள் தலைவர். உங்கள் வருகைக்காகவே நாங்கள் காத்துக்கிடக்கிறோம்—தாங்கள் தான் எங்கள் அரசரின் புதல்வர்' என்று கொண்டாடி வரவேற்றனர்.

'நான் அரசகுமாரனேயல்ல—நான் ஒரு ஏழைப் பிச்சைக்காரியின் பிள்ளை, நான் பார்ப்பதற்கு எவ்வளவு கேவலமாக இருக்கிறேன் என்பது எனக்கே தெரிகிறதே; அப்படியிருக்க நீங்கள், நான் மிக அழகுடையவனாக இருக்கிறேன் என்று எவ்வாறு கூறுகிறீர்கள்?' என்றான்.

பொன்மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ஆயுதங்களையுடையவனும், சிறகுகளையுடைய சிங்கம் ஒன்று அமர்ந்திருப்பது போன்ற உருவத்தையுடைய தொப்பியைத் தலையில் அணிந்தவனுமாகிய அந்த மனிதன் ஒரு கவசத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, 'எங்கள் தலைவர் அழகுடையவரில்லை' என்று எப்படிச் சொல்லலாம் என்று கர்ஜித்தான்.

நட்சத்திரக் குழந்தை

நட்சத்திரக் குழந்தை தன்னையே குனிந்து பார்த்துக் கொண்டான். ஆஹா! அவனுடைய முகம் முன்பிருந்த அழகுடனேயே விளங்கியது. அவனது தேகம் மறுபடியும் முன்போலவே பூரண காந்தியுடன் சோபித்தது. அவன் கண்ணில் இதற்குமுன் கண்டிராத புதுமை ஒளி வீசுவதை அவன் கண்டான்.

"எங்களை அரசாள இன்றையதினம் ஒருவர் வந்து சேருவார்" என்று வெகுநாளைக்கு முன்பே ஜோஸ்யர்கள் தீர்மானமாகக் கூறியிருக்கின்றனர். ஆதலால், இந்தக் கிரீடத்தையும் செங்கோலையும் எங்கள் தலைவராகிய தாங்கள் ஏற்றுக்கொண்டு நீதியுடனும் கருணையுடனும் எங்களை ஆட்சிபுரிய வேணும், என்று அந்தக் குருமார்களும் உயர்தர உத்தியோகஸ்தர்களும் அவனை மண்டியிட்டு வணங்கி வேண்டினார்கள்.

'நான் அதற்கெல்லாம் கொஞ்சமும் தகுதியற்றவன். ஏனென்றால், என்னை ஈன்றெடுத்த தாயை நான் துறந்தேன். அவளைத் திரும்பவும் நான் காணும் வரையில்—கண்டு மன்னிப்புக்கோரும்வரையில் எனக்கு சாந்தியே கிடையாது. ஆதலால், என்னை இஷ்டம்போல் செல்ல விடுங்கள். நான் உலகமெங்கும் மறுபடியும் தேடித்திரியவேண்டும். நீங்கள் எனக்கு கிரீடத்தையும் செங்கோலையும் தந்தாலும்கூட நான் இங்கு கொஞ்சமும் தாமதிக்க முடியாது' என்று அவர்களிடம் கூறினான். இவ்விதம் கூறிய அவன் அவர்களிடமிருந்து நகரத்தின் கோட்டை வாயிலுக்குப்போகும் தெருவை நோக்கித் தன் பார்வையைச் செலுத்தினான். ஆ! வீரர்களின் அருகில் சூழ்ந்து நின்ற ஜனக்கூட்டத்தின் நடுவில் தன்னுடைய தாயாகிய அந்தப் பிச்சைக்காரியையும், அவள் பக்கத்தில் சாலையின் அருகில் உட்கார்ந்திருந்தானே, அந்தக் குஷ்டரோகியையும் நிற்கக்கண்டான்.

ஆனந்த மேலிட்டால் அவன் கூவிக்கொண்டு, ஓடோடியும் சென்று, அவள்முன் மண்டியிட்டு வணங்கி, பாதங்களில் இருந்த புண்களை முத்தமிட்டுப் பணிந்து தன் கண்ணீரால் நனைத்தான்.

நட்சத்திரக் குழந்தை

அவன் உள்ளம் உருகி, தேம்பியழுதுகொண்டு 'தாயே! நான் கர்வம் பிடித்துக்கிடந்த அந்த நாளில் உன்னைத் துறந்தேன். ஆனால், இன்று—நான் பணிந்து அன்புடன் வேண்டிக்கொள்ளும் இந்த சமயத்தில் என்னை நீ ஏற்றுக்கொள். தாயே! உனக்கு நான் கொடுமைபுரிந்தேன், நீ என்னிடம் அன்பு காட்டு. தாயே! நான் உன்னை வெறுத்தேன். ஆனால், உனது குழந்தையாகிய என்னை ஏற்று அருள்' என்று இதயம் பிளந்து விடுவதுபோன்ற உருக்கமுடன் கூறினன். ஆனால் அந்தப் பிச்சைக்காரி ஒரு வார்த்தை அவனிடம் பேசவில்லை.

தன் கையால் அந்தக் குஷ்டரோகியின் வெண்மையான கால்களைத் தழுவி 'மும்முறையும் நான் உனக்குக் கருணை காட்டினேன்; என் தாயை என்னோடு பேசச்சொல்' என்று கெஞ்சினன். ஆனால், அந்தக் குஷ்டரோகியும் ஒரு வார்த்தை அவனோடு பேசவில்லை.

'தாயே! என் துயரம் என்னால் தாங்கமுடியவில்லை. என்னை மன்னித்துக் காட்டிற்கு அனுப்பிவிடு' என்று கதறியழுதான். அந்தப் பிச்சைக்காரி அவன் தலைமீது கையைவைத்து 'எழுந்திரு' என்று அன்புடன் கூறினள். அந்தக் குஷ்டரோகியும் அவன் தலைமீது கையைவைத்து 'எழுந்திரு' என்று பிரியமுடன் கூறினன்.

அவன் எழுந்திருந்து அவர்களைப் பார்த்தான். ஆஹா! அவர்கள் இருவரும் ஒரு அரசனும் அரசியுமாகக் காட்சியளித்தார்கள்.

அந்த ராணி சொன்னள்: இவர்தான் உன்னுடைய தகப்பனர்—உன்னால் அன்புடன் ஆதரிக்கப்பட்டவர்.

அந்த அரசன் சொன்னன்: இவளே உன்னுடைய தாய், உன்னுடைய கண்ணீரால் நனைந்த பாதத்தையுடையவள்.

அவர்களிருவரும் அவனைத் தழுவி முத்தமிட்டார்கள். அவனை அரண்மனைக்கு அழைத்துவந்து அழகிய ஆடைகளால்

அலங்கரித்து, அவன் தலையில் முடிசூடி, கையில் செங்கோல் தந்து ஆசிர்வதித்தனர்.

நதியின் கரையிலுள்ள அந்த நகரத்தை அவன் மிகச் சிறப்புடன் தனியரசு புரிந்தான். நீதி வழுவாது குடிகளிடம் அளவற்ற அன்புடனும் கருணையுடனும் அரசாண்டான். அந்தக் கொடிய மந்திரவாதியை நாடு கடத்திவிட்டான். அந்த விறகு வெட்டிக்கும் அவனுடைய மனைவிக்கும் நன்றி பாராட்டி ஏராள மான வெகுமதிகளை அனுப்பினான். அவர்களுடைய குழந்தை களுக்கு உயர்ந்த பதவிகள் தந்தான். பட்சிகளையோ, மிருகங்களை யோ, எவ்வுயிரையும் துன்புறுத்தலாகாதென்று வற்புறுத்தினான். அன்பு, கருணை, தருமசிந்தையுடன் வாழ மக்களுக்கு உபதேசித் தான். ஏழைகட்கு உணவளித்தான். ஆடையற்றோர்க்கு உடை கள் அளித்தான். நாடும் சீரும் சிறப்புமுற்று சமாதானம் நிலவி செழித்து விளங்கியது.

என்றாலும், அவன் நீண்ட நாள் ஆட்சிபுரியவில்லை. அவ னுக்கு அவ்வளவு கஷ்டமாக இருந்தது. கொடிய சோதனையாகிய அக்னி அவனை வாட்டி எடுத்தது. மூன்று வருஷ காலத்தில் அவன் மரண மடைந்தான். அவனுக்குப்பின் வந்த அரசன் கொடுங்கோலாட்சி புரிந்தான்.

பால்காரப் பையன்

அந்தத் தாழ்வாரம் குறுகலாயும் இருண்டதாயும் இருந்தது. அங்கிருந்து மேலே பார்த்தால் வெளிவானம் ஒரு சிறிது காணப்படும். புகை போக்கிகளிலிருந்து வெளியேறும் புகைகளினுல் அந்த வானமும் கருமை கலந்த சாம்பல் நிறமாகத் தெரிந்தது. காலடியில் எப்பொழுதும் தரையெங்கும் ஒரே ஈரமாய்க் கிடந்தது. தளத்தில் பதிந்திருந்த வட்டமான கற்களிலிருந்து ஈரம் கசிந்துகொண்டே இருந்தது. வெய்யிலில் தரை உலர்ந்து போவதேயில்லை. கடுங்கோடையில்தான், அதுவும் மத்தியானத்தில் மட்டுமே இருபக்கங்களிலும் வானளாவிய மாளிகைகள் நிறைந்த அந்த வீதியில் இருண்டபாகத்தில் ஏதோ கொஞ்சம் வெளிச்சம் ஒரு புறமாக சாய்ந்து விழும். மற்றப்படி உட்புறத்தில் தரையெங்கும் எப்பொழுதும் மங்கிய வெளிச்சமாகவே இருந்தது. அந்த இருட்டிலும் ஈரத்திலும் தட்டுத் தடுமாறி உள்ளே நாலடி நடந்து சென்று, அந்தக் குறுகிய வாசற்படி வழியே எட்டிப்பார்த்து உற்றுநோக்கினுல், சுவற்றில் ஒரு சிறு அட்டை காணப்படும். "ஸ்டிபெக்–செருப்புத்தைப்பவன்" என்று அதில் எழுதியிருந்தது. அப்பொழுது உச்சிப் பொழுதாகி ஒரு நாழிகை இருக்கும். அந்தத் தாழ்வாரத்தில் வசித்திருந்த ஏழைகள் சற்று முன்பே சாப்பிட்டுவிட்டார்கள். இருபுறத்திலும் ஜன்னல்கள் எல்லாம் திறந்திருந்தது. தட்டு முதலான பாத்திரங்களின் ஓசையும், சிறுவர்களின் பேச்சு சப்தமும் அங்கே உங்கள் காதில் விழும். உள்ளும் புறமும் முள்ளங்கி, பூண்டு, வெங்காயம் ஆகியவற்றின் மணம் வீசிக் கொண்டிருந்தது.

ஏதோ ஒரு பிரசித்தமான பாடலை அங்கொரு ஸ்திரீ தன் கீச்சுக்குரலில் உரக்கப் பாடிக்கொண்டிருந்தாள். எல்லாம் காதல்–வஸந்தம்–இன்பம்இவைகளைப்பற்றித் தான். அவள் அதை

பால்காரப் பையன்

ரொம்பவும் சுவாரஸ்யமாகப் பாடிக்கொண்டிருந்தாள். நடுவில், அவள் வீரிட்டுக்கத்தினாள். அந்தக் கூச்சல் ஒரு குழந்தையின் கூப்பாட்டுடனும், "தட தட" வென்று கீழே விழுந்த தட்டுக்களின் சத்தத்துடனும் கலந்தது.

'சத்தம் போடாதீங்க, அங்கே என்ன கத்தலும் கதறலும்' என்றொரு கனத்த குரல் தாழ்வாரத்திலிருந்து கேட்டது. 'அப்படியே மண்டையிலே போடவேணும், இப்படி எல்லோரும் சேர்ந்து ஒரே கூப்பாடு போட்டால் என்ன செய்கிறது?' என்ற கர்ஜனையுடன், ஜன்னலின் கதவு தடாலென்று சாத்தப்பட்டது. உடனே பாட்டும் நின்றது.

இப்பொழுது எங்கும் அமைதியாக இருந்தது. உள்ளே சுவற்றின் மேற்பாதியில் சூரிய வெளிச்சம் கொஞ்சம் விழுந்து வரவரக் குறைந்து கொண்டேவந்தது. வெளியில் தெருவெல்லாம் கொடிய வெய்யில் தகித்துக்கொண்டிருந்தது. நல்ல கடுங்கோடை. மரங்கள் எல்லாம் பச்சைப் பசேலென்று தளிர்த்து நிற்பவைகள். ஆனால், இப்பொழுது ஒரு புல் பூண்டுகூட முளைத்திருக்கவில்லை. வறண்ட காற்று வீசி வியர்க்கச் செய்தது; உடல் சிலிர்த்தது.

அந்தத் தாழ்வாரத்திலே வசித்துவந்த அதிருஷ்டஹீனர்களான ஏழைகள் சாப்பிட்டுவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தனர். ஒரு மணி—ஒன்றரை—இரண்டு மணி இதற்கு வழக்கமான நேரமாகும். ஆனால், சற்றுப்பொறுங்கள்! ஒரு ஜன்னல் கதவுதிறக்கப்படுகிறது. வெளியே தரைமீது ஏதோ ஒன்று எறியப்படுகிறது. ஒரு எலும்பு. அங்கேயே அது மங்கிய வெளிச்சத்தில் விழுந்துகிடந்தது. இருண்டு கிடந்த அந்த மூலையில் ஒரு பழைய நாய்க்கூண்டு இருந்தது. அதிலிருந்த நாய் தனது பிரகாசமான கண்களை அகல விழித்து ஆவலுடன் எட்டிப்பார்த்தது. மெதுவாக, ஒவ்வொரு பாதமாக முன்வைத்துத் தன் கூண்டிலிருந்து அந்த நாய் முன்னால் நகர்ந்துவந்தது. பசியால் மெலிந்த உடம்பை முழுதும் நீட்டி, தளத்தில் போட்டிருந்த கற்களின்

மீது கொஞ்சம் படுத்துக் கழுத்தைத் திருப்பியும், நாக்கை நீட்டியும் அதை எட்டிப்பிடிக்க முயற்சித்தது—வீணாயிற்று! அந்த எலும்பை நெருங்க முடியாதபடி அதன் சங்கிலி ரொம்ப வும் குட்டையாக இருந்தது. மிகவும் பரிதாபகரமாக முணு முணுத்துவிட்டு, அந்த நாய் தன்னுடைய போராட்டத்தை நிறுத்தியது.

தனது மயிரடர்ந்த தலையைப் பாதங்கள் மீது வைத்துக் கொண்டு, பாதி மூடிய கண்களுடன், கூண்டின் எதிரில் அது தரையில் நீண்டு படுத்துக்கிடந்தது—என்றாலும் சுற்றிலும் நடப்பதைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தது. சொறிபிடித்த அதன் உடம்பின் மீது ஈக்கள் மொய்த்தன. கண்ணிலிருந்து வடிந்துள்ள பசைபோன்ற கண்ணீர் மீது ஈக்கள் உட்கார்ந் தன. கொஞ்சம் எழுந்து கொண்டு மெதுவாய் உறுமியது. தன் மெலிந்த விலாப்புறத்தை வாலால் அடித்துக்கொண்டது.

அந்த எலும்பு—அந்தத் தாழ்வாரத்தின் மத்தியிலேயே கிடந்தது. ஈக்கள் அதன் மீது சூழ்ந்து மொய்த்துக்கிடந்தன. நாயின் பிரகாசமான கண்களில் மங்கிய ஒளி வீசியது. கடைசி யில், அது சுற்றும் முற்றும் ஒருமுறை பார்த்துவிட்டுத் தன் தடித்த நீண்ட முகத்தைத் தண்ணீர்த் தட்டில் அமிழ்த்தியது. ஆனால், அந்தப் பழைய தட்டு காலியாய்க் கிடந்தது. தண்ணீர் துளிக்கூட இல்லை!

மறுபடியும் வலது புறமும் இடது புறமும் திரும்பி, மோப்பம் பிடிப்பது போல மூச்சை உள்ளிழுத்துவிட்டு, நாக்கைத் தொங்கவிட்டுக்கொண்டு படுத்துவிட்டது. பின்பு, தூங்குவது போலக்கிடந்தது.

ஆனால், கவனியுங்கள்! தாழ்வாரத்தின் கதவு ஓசைப் படுகிறது. இரு கைகள் வந்து அதைத் தழுவிக்கொள்கின்றன. ஒரு குழந்தை வந்து அதன் பக்கத்தில் நின்று குனிந்து கொஞ்சு கிறது.

பால்காரப் பையன்

"பிளுட்டோ,—அருமை பிளுட்டோ,-நல்ல நாயே!" இதுவே அந்தக் குழந்தையின் அன்பு கனிந்த வாழ்த்து. நாய் துள்ளித் துள்ளிக் குதித்து அந்தக் குழந்தையின் சிறு மார்பின் மீது தலையை வைத்து மோதித் தள்ளியது. குழந்தையின் கையையும் முகத்தையும் நாக்கினால் நக்கியது. மிகச் சலிப்புடனும் களைப் புடனும்தான், அதன் குதூகலத்தை அவன் அனுபவிக்க வேண்டியிருந்தது.

"பிளுட்டோ! உனக்குத் தண்ணீர் கூடக்கிடைக்க வில்லையா? என் அருமை நாயே, கொஞ்சம் பொறுத்திரு" என்று சொல்லி, அந்தப் பையன் எழுந்திருந்து அந்த உடைந்த மண் தட்டில் குழாயிலிருந்து நிறைய ஜலம் பிடித்துக்கொண்டு வந்தான். பிறகு, நாயினுடைய எண்ணத்தை ஊகித்தறிந்து, அந்த எலும்பை எடுத்து அருகில் கொண்டுவந்துபோட்டு, அது தன் வலிமை பொருந்திய பல்லினால் அதை உடைத்துத் தின் பதை உற்றுநோக்கிக் கொண்டிருந்தான்.

பின்பு, துயரம் கலந்த புன்னகையுடன் அவன் தன் வெறுங் கைகளை விரித்துக்காண்பித்தான்.

"பிளுட்டோ! இனிமேல் இல்லை. கொஞ்சம்கூட இல்லை. ஆனால், நீ சற்றுப் பொறுத்திரு. உனக்குப் பொறுமை இருக் கிறது. என் கையில் கொஞ்சம் பணம் கிடைக்கும் வரையில் சற்றுப் பொறுத்திரு. பிறகு, நீயே ஆச்சரியமடையும்படி உனக்கு ஒன்று கொடுக்கப்போகிறேன், பிளுட்டோ! ஆமாம், உனக்கு ஒரு அபூர்வமான விருந்து! அங்கே, கசாப்புக் கடையில் தொங் கிக் கொண்டிருக்கிறதே, ஒரு கொழுத்த மசாலையிட்ட ஈரல், அதைத்தான் உனக்கு நான் வாங்கிக் கொடுக்கப்போகிறேன், புளுட்டோ, நிச்சயமாய்!"

ஹான்ஸ் ஸ்டிபெக் உறுதிமொழி கூறியது எல்லாம் சரி தான். கசாப்புக் கடையில் அந்த மசாலையிட்ட ஈரலை விலை கொடுத்து வாங்க இவன் பணத்திற்கு எங்கே போவான்? அவ னுடைய நண்பனுக்குக் கொடுக்க அந்த சமயத்தில் அவனிடம்

ஒன்றுமே யில்லை. தன்னுடைய ரொட்டியில் பாதியை காலையி லும் மாலையிலும் அதற்குப் போடுவதுடன் ஒரு எலும்போ, அல் லது வேறு ஏதாவது கிடைத்தால் அவைகளையும் இளம் இதயத்தி லிருந்து கனிந்த முழு அன்பையும் அளித்துவந்தான்.

ஹான்ஸ் ஸ்டிபெக், ஒரு பால்காரப் பையன். அவன் நகரத்திற்கு வடக்கே, வெளியில் வசிக்கிறான். அந்தத் தாழ்வாரத் தில்தான் அவனுடைய பெற்றோர்கள் வசிக்கிறார்கள். வானத்தில் வெண்ணிலா வீசிக்கொண்டிருக்கும்பொழுதே அதைவிட்டு அவன் கிளம்பிவிடுவது வழக்கம். இன்னும் ஜன நடமாட்டமே ஏற்ப டாத அந்த வீதிகளின் வழியாக இளைத்துத் துரும்பான உடம்பு டன் தனியே நடந்துவருவான். காதையும் கழுத்தையும் சேர்த்துக் கம்பளத்தை அவன் இறுகச் சுற்றிக் கட்டியிருந்தபோதிலும், மாரிக் காலத்தில் குளிர் மிகக் கடுமையாய்த் தாக்கும். கோடை காலத்திலோ களைத்த ஈயைப்போல கொடூரமான உச்சிநேரத்து வெய்யிலில் மெதுவாக வீட்டைநோக்கி நடந்துவருவான். அவனு டைய வளர்ச்சி தடைப்பட்டிருந்தது. அவனுடைய குழிந்த கண்கள், சப்பை மூக்கு, காது இவைகளையெல்லாம் பார்த்த யாரும் அவனைப் பனிரண்டு வயதுப் பையன் என்றே மதிக்கமாட் டார்கள். கொஞ்ச நாளைக்குமுன்பே, அவனது தாழ்ந்த புருவங் களின்மீது ஆழமான கோடுகளும், மெலிந்த முதுகில் கூனலும் ஏற்பட்டுவிட்டது.

கடைசியாக, அந்த நாயை அவன் ஒருமுறை தடவிக் கொடுத்துவிட்டு தன்னுடைய அறையை நோக்கி நடக்கலானான். அவன் அந்த இருட்டில் மறைந்தான். அறையின் வாசற்படியில் நின்றுதன் தலையிலிருந்த குல்லாவைக் கழற்றிவிட்டு, தலையை நிமிர்ந்து ஆகாயத்தை உற்று நோக்கினான். அது மழைபெய்தால் தான் என்ன, அல்லது வெய்யில் அடித்தால்தான் என்ன, அதைப் பற்றி அவனுக்கென்ன கவலை?

மெதுவாக அறையை நோக்கி நடந்துசென்றான். அறைக் கதவின்மீது ஒரு அட்டை தொங்கிக்கொண்டிருந்தது. "ஸ்டி பெக்—செருப்புத் தைப்பவன்" என்று அதில் எழுதியிருந்தது.

பால்காரப் பையன்

உள்ளேயிருந்து, யாரோ மெல்லிய குரலில் ஏதோ சொல்வதும், இன்னும் யாரோ ஒருவர் பெரிதாகக் கொட்டாவி விடுவதும் கேட்டது. அந்தப் பையன் முகத்தில் ஒரு பயந்த பார்வை தோன்றியது. அவனுடைய தகப்பனார் வீட்டில் இருந்தார்.

ஹான்ஸ் திகைத்து நின்றான். கடைசியில் அவன் மெதுவாக தாழ்ப்பாளை எடுத்துவிட்டான்.

"என்ன ஐயா! இப்பொழுதுதான் வந்தீர்களா? ஊம்... என்ன......சரியான நேரம்தான்! ஏ! சோம்பேறி, உதவாக்கரை இத்தனை நாழிகை எங்கேயெல்லாம் அலைந்து திரிந்துகொண்டிருந்தாய்? சரி, நீ 'குலேக்'குக்கு ஓடிப்போய்வர சரியான நேரந்தான். ஓடிப்போய் மூன்று பென்ஸுக்கு எனக்கு விஸ்கி வாங்கிக்கொண்டுவா. அதோ, பாட்டில் இருக்கு, எடுத்துக்கொண்டுபோ. என்னடா? முட்டாள்! அங்கே போய் ஊமை மாதிரி நின்றுகொண்டிராதே-அவனிடம் சொல்லு, நாளைக்கு பணம் தருகிறேன் என்று சொன்னேன்; இப்போ இதில் வாங்கிக்கொண்டு வரச் சொன்னேன் என்று, நான் சொன்னதாகச் சொல்லு."

"ஐயா! பணம் தராவிட்டால் அவன் என்னிடம் ஒன்றும் கொடுக்கமாட்டானே. நேற்றைக்கே அந்த பாட்டிலை என் தலையில் வீசி யெறிய வந்துவிட்டான்–எனக்குப் பயமாக இருக்கிறதே," என்றுசொல்லி அந்தப் பையன் அழுதான்.

அதிக உயரமில்லாமல் தரையை ஒட்டிப்போட்டிருந்த சோபாவில் படுத்து, இரண்டு கால்களையும் தூக்கி அதன் நுனியில் போட்டுக்கொண்டு, மயிரடர்ந்த தன் மார்பின் மீதிருந்த சட்டையைத் திறந்து விட்டுக்கொண்டு கிடந்தான் அந்தப் பருத்த ஆசாமி. அவன் அந்தப் பையனைப்பார்த்து "ஏ பன்றி! சரி, தாண்டா, நீ, மஹா யோக்கியன்" என்று கத்தினான். பின்னர், அவன், 'ஏன், இங்கே வீணே நின்றுகொண்டிருக்கிறாய்? என்ன. போகிறாயா?–வந்து காலால் உதை கொடுக்கவேணுமா? இப்போ நான் மூன்று எண்ணுவதற்குள் விஸ்கி வாங்கிவர ஓடவில்லை என்றால், நான் என்ன செய்வேன் தெரியுமா?........."

பால்காரப் பையன்

'ஸ்டிபெக்' என்று கூப்பிட்டுக்கொண்டே கணப்பின் அருகிலிருந்து அவனுடைய தாயார் அங்குவந்தாள். அவள் ஒரு குழந்தையை மார்பில் இடுக்கிக்கொண்டிருந்தாள். மற்றொரு குழந்தை அவள் ஆடையைப் பிடித்து இழுத்துக்கொண்டு நின்றது. தன் புருஷனுக்கும் அந்தப் பையனுக்கும் நடுவில்வந்து நின்றுகொண்டாள். "ஸ்டிபெக், அவனைச் சும்மா விட்டுவிடுங்கள், முதலில் அவன் ஏதாவது கொஞ்சம் ஆகாரம் பார்க்கட்டும். பின்னர், உங்களைப் போல நன்றாய் தைரியமாகப் பேசுவான்" என்று அவள் பரிந்து பேசினாள். ஹான்ஸை நோக்கி 'என்ன குழந்தை, அப்புறம் உங்கப்பாவுக்கு 'பானம்' வாங்கிக்கொண்டு வருவாயோல்லியோ? என்று கேட்டாள்.

பையன் தலையைக் கவிழ்த்துக்கொண்டான். 'எனக்குப் பயமாயிருக்கிறதே' என்று அவன் முனங்கினான். 'அவர் என்னை அடித்துவிடுவார்; பின்னும், 'பானம்' வாங்கிவந்து விட்டேனோ என்னை அவர் உறித்தேவிடுவார். அதை வாங்கிக்கொண்டுவர நான் போகவே மாட்டேன்' என்றான் அவன்.

'உஸ்.........ஸ்! உனக்குப் புண்ணியம் உண்டடா! குழந்தை, அவர் காதுகேட்க நீ அப்படிச் சொல்லாதேயேன்!' என்று அவள் அவன்வாயைத் தன்கையால் பொத்தினாள். நல்ல பையனோ இல்லையோ நீ! ஆகாரம் சாப்பிட்ட அப்புறம் போ! என்று அவன் காதில் மெதுவாய்ச் சொன்னாள். 'இல்லாவிட்டால் அவர் கோபத்தோடு எழுந்துவந்து விடுவார்.. நீ போகவில்லையானால் நிச்சயம் அவர் எழுந்து வந்துவிடுவார். வந்து, உதை, உதை என்று உதைத்து உரித்துவிடுவார்-அப்புறம், என்னையும் உதைத்து உரித்துவிடுவார்' என்றாள் அவள்.

நான் போனால், அவர் என்னைமட்டும்தான் அடிப்பார்; இல்லை அம்மா! உனக்கு ஒன்றும் இல்லையல்லவா – என் பங்கைப் பெற்றுக்கொள்வதோடின்றி உனக்கும் நான் உதைவாங்கிவைக்க விரும்பவில்லை என்றான் அந்தப் பையன். அவன் முகத்தில் வினயமான புன்னகை விளங்கியது. உன்னை முதலில் அடிப்பார். பின்பு கொஞ்சுவார்; இல்லை, முதலில் கொஞ்சுவார். பின்பு, அடிப்பார். இல்லை, எனக்குத் தெரியுமே!

பால்காரப் பையன்

தாயார் பெருமூச்செறிந்தாள்—மெலிந்த அவள் உடல் நடுங்கியது. அவள் கன்னத்தில் சதை தளர்ந்து ஆடியது.

"சரி, நீ இப்பொழுது போகப்போகிறுயா ? இல்லையா ?" என்று கர்ஜித்துத் தன் கையால் மேஜை மீது ஓங்கி ஒரு குத்து விட்டான், அந்த சோபாவில் கிடந்த மனிதன். 'இதெல்லாம் என்ன? இங்கே 'குசு குசு' வென்று காதோடு இரகசியம் பேசறது? வாயை மூடிக்கொண்டு அந்த பாட்டிலை எடுத்துக் கொண்டு நீ போகவில்லை ? இல்லையானுல், உன் கன்னங்களுக்கு ஏதாவது சாப்பாடு கேட்கிறதா, என்ன ? பேசாமல் சீக்கிரம் வெளியிலே போ ! இப்பொழுது நீ வெளியில் போகவில்லை?" என்று ரொம்பவும் ஆத்திரத்துடன் கத்திக்கொண்டு எழுந்திருக்க முயன்று, தரையில் ஓங்கி ஒரு காலால் உதைத்தான். உடனே அந்தப் பையன் பாட்டிலை எடுத்துக்கொண்டு கதவுக் கப்பால் ஓடினுன். தகப்பனுரின் கர்ஜனை போன்ற சிரிப்பு அவனுக்குப் பின்னே எதிரொலி செய்தது.

பால்காரப் பையன்களிடையே ஒரு பெரிய வழக்கம் இருந்தது. அவர்களில் ஒரு திருடன் இருந்தான். இந்த விஷயம் காட்டுத் தீ போலப் பரவியது.

அவன் அங்கேதான் இருந்தான். நீல உடையணிந்து, முகத்தை மறைக்கும் பச்சைக் குல்லாயுடன் காரியாலய அறையின் கதவைத்தாண்டி மெதுவாக அவன் நழுவிப் போய்க்கொண்டிருந்தான். உள்ளே விரிப்பின் மீது அவர்களுடனேயே உட்கார்ந்திருந்தான். மற்ற பையன்களெல்லாம் கூட்டமாகக் கூடிக் கொண்டு அவனையே உற்று நோக்கிக்கொண்டிருந்தனர். ஏதும் அறியாத ஹான்ஸ் (ஸ்டிபெக்) ஐ யார்தான் சந்தேகித்திருக்க முடியும் ? தானுக ஏதும் செய்தறியாத ஹான்ஸ், ஏதோ நெறி தவறி ஒரு அரைக்கிரௌனைத் திருடிவிட்டான்—ஆம்—அது மிக மிக அற்பமானதுதான். ஹான்ஸ், தான் சேகரித்த பணத்தைக் கொடுக்கும்போது வண்டியோட்டி அதைக் கவனித்துவிட்டான்.

பால்காரப் பையன்

அந்த விஷயம் இவ்விதமாகவே இருந்தது. ஹான்ஸ் ஸ்டிபெக்தான் திருடன். அதை அவன் மறுக்க முயற்சிக்கவேயில்லை. வெளுத்த முகத்துடன் பயந்து நடுங்கிப்போய் வண்டியோட்டி கொடுத்த அறைகளையும் குத்துக்களையும் வாங்கிக் கொண்டான். அவன் இன்ஸ்பெக்டரிடம் புகார் செய்தபோதும் ஹான்ஸ் அசையாமல் நின்று கொண்டிருந்தான். அவனுடைய உடைகளை யெல்லாம் அவர்கள் சோதனைபோட்ட பொழுது தலையைக் குனிந்துகொண்டு மௌனமாக நின்றிருந்தான் 'எங்கே அந்த அரைக்கிரௌன்? பதில் இல்லை.

'அதற்கு நீ என்ன செய்தாய், பையா? என்ன, உனக்குப் பசியாய் இருந்ததா? அல்லது, அதைக்கொண்டு ஏதாவது பட்சணங்கள் வாங்கிக்கொண்டாயா?' இதற்கும் பதில் இல்லை.

'ஸ்டிபெக்! வாயைத்திறந்து பேசு. எங்கே, அந்த அரைக்கிரௌன்?' இந்தக்கேள்வியுடன் இன்ஸ்பெக்டரின் வலிமையான கை மிகவும் பலமாக ஹான்ஸின் தோளில் விழுந்து தாக்கியது. பையா, திருடுவது பாவம் என்பது உனக்குத் தெரியாதா? அப்படியிருந்தும் நீ பணத்தைத் திருடிவிட்டாய். உனக்கு வெட்கம் இல்லை? இன்ஸ்பெக்டர் தன்னுடைய மூக்குக் கண்ணாடியை நெற்றியின்மீது வைத்துக்கொண்டு, மயிரடர்ந்த தன் புருவங்களின் வழியே குற்றவாளியை உற்றுநோக்கினார். 'உன்னை அந்த இடத்திலேயே வேலையைவிட்டு விலக்குவது என்னுடைய கடமை என்பது உனக்குத் தெரியுமல்லவா? இங்கு நாம் திருடர்களை வைத்துக்கொண்டு என்ன பிரயோசனம்? என்ன—நீ என்ன சொல்கிறாய்? என்றார் இன்ஸ்பெக்டர்.

பையனின் மெலிந்த கையும் காலும் பயத்தால் நடுங்கின. தன் கைகளிரண்டையும் உயரத் தூக்கி அவன் மன்றாடினான். தேம்பித் தேம்பி அழுதான். அவன் கலங்கிய கண்களிலிருந்து கண்ணீர் சொரிந்தது.

'என்னை வேலையைவிட்டு விரட்டி விடாதீர்கள், ஐயா! தயவு செய்து அப்படிச் செய்துவிடாதீர்கள்!' என்று கெஞ்சினான்.

பால்காரப் பையன்

அவன் பற்கள் பயத்தினால் கிட்டின. அவன் கன்னத்தின் வழியே கண்ணீர் ஆறாய்ப் பெருகியது.

'இன்ஸ்பெக்டரய்யா! தயவு செய்து என்னை வேலையை விட்டுத் துரத்திவிடாதீர்கள்! அவர் என்னை உதைத்துக் கொன்றுவிடுவார்—நிச்சயமாய்க் கொன்றுவிடுவார்—இன்ஸ்பெக்டர், தயவு செய்யுங்கள்—நான் இனிமேல் இவ்விதம் செய்யவே மாட்டேன். தயவு செய்து என்னை வேலையைவிட்டு துரத்தாதீர்கள்! இன்ஸ்பெக்டர், தயவு செய்யுங்கள்!'. 'பின்னர், ஏன் நீ பணத்தைத் திருடினாய்?'. ஹான்ஸ் மறுபடியும் மௌனமாய் நின்று கொண்டிருந்தான். அவன் இரு முழங்கால்களும் நடுங்கின. அவன் உதடுகள் இரண்டும் ஒட்டிக்கொண்டன.

'இவன் மகா பிடிவாதக்காரன்' என்று சொன்னார் இன்ஸ்பெக்டர் பக்கத்தில் நிற்பவர்களிடம்; தோள்களைக் குலுக்கிக் கொண்டே, இன்னும் கடுமையான குரலில்—'ஸ்டிபெக்—நீ இப்பொழுது வீட்டுக்குப் போகலாம். இன்று மத்யானமே உன் தகப்பனாரை இங்கு வரச்சொல். நான் அவருடன் கொஞ்சம் பேசவேண்டும். இப்படித் தேம்பித் தேம்பியழுவதை இப்பொழுதே நிறுத்திவிடு. அது உனக்கு நல்லதில்லை. பேசாமல் நேரே நீ வீட்டுக்குப் போ' என்றார் இன்ஸ்பெக்டர்.

தெருக்களின் வழியே அந்தப்பையன் நிழல்போல மெதுவாய் வந்துகொண்டிருந்தான். வெய்யில் மிகக் கடுமையாக இருந்தது. கொடூரமான வெய்யிலின் வெப்பம் தளத்திலிருந்தும் தாக்கியது. ஹான்ஸ் அவைகளை உணரவேயில்லை. வீட்டை நெருங்க நெருங்க அவன் நடை வேகம் குறைந்துகொண்டே வந்தது. ஒவ்வொரு கடையின் ஜன்னல் அருகிலும் நின்று நின்று, மெதுவாய் அசைந்து அசைந்து நடந்து வந்தான். இப்பொழுது அவன் அந்தக் கசாப்புக் கடை ஜன்னலின் பித்தளைக் கம்பிகளின் வழியே எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தான்.

இந்த சம்பவம் இங்கேதான் நடந்தது. நேற்றுத்தான் நடந்தது. இப்பொழுது நின்றுகொண்டிருப்பதைப் போல நேற்

றும் இங்கேதான் சாய்ந்துகொண்டு வழுவழுப்பான தோலில் சுற்றி ஜன்னலில் கட்டித் தொங்கிய மசாலையிட்ட அந்த ஈரலையே ரொம்பவும் ஆவலுடன் உற்றுநோக்கிக் கொண்டிருந்தான். அவன் நாக்கில் ஜலம் ஊறியது. என்றாலும், அதை அவன் தனக்கு வேணுமென்று ஆசைப்படவில்லை. இல்லை, அதை அவன் பிளூட்டோவுக்காகவே விரும்பினான். அவனுடைய அருமை பிளூட்டோ—நாக்கைத் தொங்கவிட்டுக்கொண்டு அந்தத் தாழ்வாரத்தின் மூலையில் படுத்துக்கொண்டிருக்கிறதல்லவா—ஈக்களின் உபத்திரவத்துடன் பசியினாலும் தாகத்தினாலும் அவஸ்தைப் பட்டுக்கொண்டு கிடக்கிறதல்லவா—அதற்காகத்தான். அதனைப் போஷிக்க அங்கு யாருமில்லை. அதனுடைய எஜமான் லஹ்மன். அவனுடைய குப்பை வண்டியைத்தான் இது இரவும் பகலும் தெருக்களில் இழுத்துக் கொண்டிருந்தது. அவன் தன் உணவுக்குச் செலவழிப்பதிலேயே ரொம்பக் கருமி. அப்பேர்ப்பட்டவன் இதைக் கவனிக்காமல் விட்டதில் என்ன ஆச்சரியம்? மேலும், ஹான்ஸ் .ஸ்டிபெக்தான் பிரமாதமாக அதற்கு என்ன செய்து விடமுடியும்? தன்னுடைய காலை உணவில் அவன் தரும் கொஞ்ச ரொட்டி பிளூட்டோவின் கடைவாய்க்குக்கூடக் காணாது.

சற்று நேரத்திற்கெல்லாம் தன் வண்டியுடன் வந்தான் லெஹ்மன். சாக்கு, அழுக்குத்துணி, குப்பை முதலியவைகள் உயரமாக அதில் குவிக்கப்பட்டிருந்தன. அந்த வண்டியின் பின்னே அவன் மெதுவாய் நடந்துவந்துகொண்டிருந்தான். அதை இழுத்துக்கொண்டுவந்த அந்த நாய், தெரு அந்த இடத்தில் சற்று மேடாக இருந்ததால், இழுத்துச் செல்ல முடியாமல் அங்கேயே நின்றுவிட்டது.

'ஏ! சோம்பேறி! ஊம்......இழுத்துச்செல்' என்றான் லெஹ்மன். தன் மெலிந்த உடலை மிகவும் கஷ்டத்துடன் முன்னுக்குத் தள்ளி, நாய் வெகு சிரமப்பட்டு இழுத்துப் பார்த்தது. என்றாலும், அதன் பின்னங்கால்கள் பாரம் இருந்த புறமாகவே பின்னுக்கு இழுத்தன. அதன் முயற்சியெல்லாம் வீணாயிற்று. வண்டி துளியாவது இருந்த இடத்தைவிட்டு அசையவே இல்லை.

பால்காரப் பையன்

'என்ன, உதவாக்கரை! இப்போ நீ இழுக்கிறாயா? இல்லையா? என்று திட்டிக்கொண்டே அந்த நாயின் விலாப் புறத்தில் ஓங்கி ஒரு உதைவிட்டான் லெஹ்மன்.

பிளூட்டோ நடுங்கிக்கொண்டு மறுபடியும் தன் முழு பலத்துடன் இழுக்க முயன்றது. தொடைகள் தரையில் தோயும்படி படுத்து முழு மூச்சுடன் இழுத்தது. கடைசியாக, வண்டி சில அடிகள் நகர்ந்து கொஞ்சம் முன்னால் சென்றது—மறுபடியும் அங்கே வண்டி அசையாமல் நின்றுவிட்டது. மேற்கொண்டு இழுக்க முடியாது திணறி, பெருமூச்சுடன் நாய் கீழே விழுந்து படுத்துவிட்டது.

'அடபடுபாவி!.. ...' என்று மிகக் கோபாவேசத்துடன் அவன் தன் காலால் நாயின் தலையில் மாறி மாறி பலமுறை உதைத்தான். தாங்கமுடியாத வேதனையில் எழும் அலறலாகிய துன்பக் குரல் அங்கு ஒலித்தது. இத்தகைய ஊளையால் அது தன் துயரத்தை தெரிவித்தது.

கடை ஜன்னலருகில் நின்றுகொண்டிருந்த ஹான்ஸ் ஸ்டிபெக், இதைக்கேட்டு மின்னலைப்போல் துள்ளியோடி வந்து அந்த நாய்க்கும் அதன் எஜமானனுக்கும் இடையில் வந்து நின்று, எஜமானனைத் தன் மெலிந்த கைகளால் தடுத்தான். 'ஐயா லெஹ்மன்! அதை அடிக்காதீர்கள்! கடவுளின் கருணைக்காகவாவது அன்பு காட்டுங்கள். பாவம்! மெலிந்த பிளூட்டோ! அதை இவ்விதம் துன்புறுத்தாதீர்கள்.'

குப்பை பொறுக்கும் லெஹ்மன், அந்தப் பையனின் கன்னத்தில் பலமாய் அறைந்துவிட்டான்.

'நீ போடா, முட்டாள் பயலே! உன் வேலையை நீ பாரடா' என்று சொல்லிவிட்டு, நாயை மற்றொரு உதைவிட்டான். அது மறுபடியும் மெதுவாக பிரயாசையுடன் பாரத்தை இழுக்க முயன்றது. வண்டி 'கிரீச்' என்ற சப்தத்துடன் கிளம்பியது.

பால்காரப் பையன்

கலங்கிய கண்களுடனும் மார்புவலியுடனும் அவர்கள் பின் திகைத்து நின்ற அந்தப் பையன், திரும்பவும் அந்த மசாலே யிட்ட ஈரலே பார்த்துக் கொண்டிருப்பதற்காக கசாப்புக்கடை ஜன்னலே நோக்கி நடந்தான். அவன் பார்த்தபடியே அதுஅவன் கண் முன்பு ஆடிக்கொண்டிருந்தது. அது அவ்விதம் ஆடிக் கொண்டிருந்தது, தலையை அசைத்துக் கண் ஜாடை காட்டுவது போலிருந்தது அவனுக்கு. பாவம், பிளுட்டோ! பிளுட்டோ! பிளுட்டோவுக்கு மட்டும் அந்த மசாலேயிட்ட ஈரல் கிடைத்து விட்டால்!

இன்றைக்குத்தான் ஹான்ஸ் ஸ்டிபெக் பணத்தைத் திருடிவிட்டான். அவன் தெருவில் போய்க்கொண்டிருக்கும் போதே, மற்ற பையன்களெல்லாம் அவனைப் பார்த்துச் சிரித்தார் கள். கூரைமீதிருந்த சிட்டுக் குருவிகள்கூட இவனைப்பார்த்து 'திருடன்—திருடன்' என்று கத்தின. இன்ஸ்பெக்டர் அவன் அப்பாவிடம் சொல்லிவிடுவார். இருந்தபோதிலும் அவன் கண் ணிலிருந்து வடியும் கண்ணிர்த் துளிகளிலும் வெற்றிப் பெருமிதம் ஒளிவீசியது. சுற்றும் முற்றும் பார்த்துப் பயங்கரமாய் விழித் தான். பின்னர், அவன் வாய்க்குள் கையைவிட்டு வாயினுள் வைத்திருந்த அந்த அரைக்கிரௌனை வெளியே எடுத்தான். அதைக் கையில் வைத்துச் சிறிது மூடிக்கொண்டு மனக் கலக்கத் துடன் அவன் கடையினுள் நுழைந்தான், சில நிமிஷங்களுக் கெல்லாம் ஒரு சிறு பொட்டலத்தைத் துணியில் மறைத்துக் கொண்டு வெளியே வந்தான். யாரோ பின்னல் துரத்திவருவது போல அவன் மிக வேகமாய் ஓடினன்.

அவன் அந்தத் தாழ்வாரத்துக்கு வந்து சேர்ந்தான். அது எப்போதும் போல குறுகியும் இருண்டும்தான் இருந்தது. ஆனல், அந்தப் பையனுக்கு அந்தத் தாழ்வாரம் அப்போது பிரகாசமாய் இருப்பதுபோலிருந்தது. அவனுடைய வெளுத்த முகத்தில் உணர்ச்சியால் நரம்புகள் துடித்தன. அவனது இதயம் வேகமாய் அடித்துக்கொண்டது. அவன் இதுவரை அடைந்திராத ஆனந் தத்தில் மூழ்கினன். இன்பத்தில் திளைத்து மகிழ்ந்திருந்த அவன்

தனக்கு நேரவிருக்கும் அவமானம்—பயங்கரம்—தண்டனை ஆகிய கொடுமைகளின் நினைவேயில்லாமலிருந்தான். உல்லாஸமாய்த் துள்ளிக் குதித்துக்கொண்டு அந்தத் தாழ்வாரத்தின் மூலையில் போய் மண்டியிட்டுக்கொண்டு, அந்த நாயின் மயிரடர்ந்த தலையைத் தன் துடிக்கும் மார்போடணைத்துக் கொண்டான்.

'ஏ! பிளூட்டோ, இதோ, இந்தா உனக்கு!' நாயின் தலையில் மூண்டாக வீங்கிப்போயிருப்பதையும், அதன் உடம்பெல்லாம் காயங்களால் வடுக்கள் ஏற்பட்டிருப்பதையும் கண்டதும் அவன் கண்களிலிருந்து கண்ணீர் ததும்பியது. 'பிளூட்டோ! அப்போ உன்னை அவன் உதைத்தானா? அவன்......! அழாதே, பிளூட்டோ! நீ அழவேண்டாம், இங்கே பார்! பிளூட்டோ! இதோ உனக்கு ஈரல்! மசாலையிட்ட ஈரல். பலே!'

நாய் ஆவலுடன் அதை மோந்து பார்த்தது. அதன் கண்கள் ஒளிவீசின. அது ஆசையுடன் வாயை அகலத்திறந்தது. ஹான்ஸ் மலர்ந்த முகத்துடன் ஒவ்வொரு துண்டாக வாங்கி வந்த ஈரலை ரொம்பவும் சந்தோஷமாக அதற்கு ஊட்டினான். துண்டங்கள் கொடுக்கக் கொடுக்கக்குறைந்து சிறிதாகிக்கொண்டே வந்தது. ஆனால், பிளூட்டோவுக்குப் பசியும் அதிகரித்துக்கொண்டே வந்தது.

'பிளூட்டோ, அவ்வளவுதான்! இனிமேல் கொஞ்சங்கூட இல்லை. நான் கொடுத்த அந்த அரைக்கிரெளனுக்கு அவர்கள் அவ்வளவுதான் கொடுத்தார்கள்.. அதை யெல்லாம்தான் சாப்பிட்டாகிவிட்டதே.'

இன்ஸ்பெக்டருடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு, அந்த செருப்புத்தைக்கிறவன் ஸ்டிபெக் திரும்பிவந்ததும், தனக்கு கிடைக்கவேண்டிய உதைகளிலிருந்து, ஹான்ஸ் தப்பித்துக் கொள்ளவில்லை. ஈவிரக்கமின்றி மிகக் கடுமையாக அவனுக்கு உதை கிடைத்தது.

பால்காரப் பையன்

'அட பாவி! திருட்டுப் பயலே'என்று திட்டிக்கொண்டே வந்து, அவனுடைய தகப்பனுர், ஹான்ஸைத் தூக்கிக் கீழே எறிந்தார் தரையிலே. அவர் சவுக்கை எடுத்துக்கொண்டு அந்தப் பையனை அடி அடியென்று அடித்துக் கை அசந்துபோனதும், தரையில் பந்துபோல் உருண்டுகிடந்த அவன் மெலிந்த உடம்பைக் காலால் மிதி மிதியென்று மிதித்துவிட்டார். 'அந்தப் பணம் எங்கே? அந்த அரைக்கிரௌனுக்கு நீ என்ன செய்தாய்? உன்னை இப்போ நொறுக்கிவிடப் போகிறேன். உன் உயிரையே வாங்கி விடுவேன்!'என்று அதட்டினுர் ஸ்டிபெக்.

'ஸ்டிபெக்—கடவுளின் கருணைக்காக மனமிரங்குங்கள் ஸ்டிபெக்' என்று ஹான்ஸின் தாயார், கருவிக்கொண்டிருக்கும் அவருடைய கையைப் பற்றிக்கொண்டு கதறினுள். இன்னும், 'அவனுக்கு ஏதும் ஆபத்தை உண்டாக்கிவிடப் போகிறீர்கள். ஐயோ! அவன் காலைக் கையை ஒடித்து விடுவீர்கள்போலிருக்கிறதே! பின்னர், அவன் எதற்குத்தான் உதவுவான்? ஸ்டிபெக், கடவுளின் கருணைக்காக இரங்குங்கள்' என்று அவள் கத்தவும், மற்றும் அவள் குழந்தைகளெல்லாம் சேர்ந்து உரக்கக் கூக்குரலிட்டன.

'இந்தா! உன் கூச்சலை நிறுத்துகிருயா? இல்லையா? உன் அலறு வாயைச் சற்று மூடேன்! என் நல்ல பெயரைக் காப்பாற்றிக் கொடுப்பதற்கு வேறு யார் இருக்கிருர்கள்? என்னுடைய நல்ல பெயரைத்தான் சொல்கிறேன். இந்தக் கேடுகெட்ட பிள்ளையோடு உன்னைக் கலியாணம் செய்துகொண்டதற்கும், இவ்வளவு பிரியமாய் உங்களிடம் நடந்துகொள்வதற்கும் இதுதான்மிச்சமோ? உபயோகமற்ற கழுதைகளா! இந்த அயோக்கியப் பயல் இருந்து எனக்கென்ன பிரயோசனம்? எலியை நசுக்குவதுபோல அப்படியே நசுக்கிவிடுவேன்,'

'ஸ்டிபெக்.........!'என்று கெஞ்சினுள் அவள்.

'வாயை மூடு'என்று கத்தி, வாயை அடைத்தான்.

ஒரு பெரிய அதிர்ச்சி ஏற்பட்டது போன்றிருந்தது. பயங்கரக் கூச்சலுடன் அவள் ஒரு புறத்தில்போய்ச்சுருண்டுவிழுந்தாள்,

பால்காரப் பையன்

அந்தப் பையன் கதறியழும் கண்றுவியைக் காணச் சகிக்காமல், அந்தத் தாழ்வாரத்தின் ஒரு கோடியில் போய் இரண்டு காதிலும் கையை வைத்துப் பொத்திக்கொண்டு ஒடுங்கிக் கிடந்தாள்.

கடைசியாக, அந்த மனிதனின் கோபம் ஒருவிதமாக தானே தணிந்தது. பேசாமல்போய் சோபாவில் சாய்ந்துகொண்டான். ஆனுல், அவன் வாய்மட்டும் கீழ்க்கண்டபடி முணுமுணுத்துக் கொண்டிருந்தது! 'என் நல்ல பெயர்—அந்த உதவாக்கரை—முழு முட்டாள்—ஏதாவது சொல்வதற்கு அவனுக்கு வாய் இருந்தால் தானே!—இன்ஸ்பெக்டர் என்னைப் பிடிக்கிருர்—அவர் சொல்கிருர், ஸ்டிபெக்—நீங்களோ யோக்யமான மனிதர்—நல்ல கண்யமுள்ள வர்—அது எனக்கு நன்ருய்த் தெரிகிறது.......... இன்னும் அவர் சொல்கிருர், உங்கள் முகத்துக்காகத்தான் ஐயா, இந்தப் பையனை இம்முறை மன்னித்துவிடுகிறேன்...... இனிமேல் அவன் மிகச்சிறிய பிழை செய்தாலும் நிச்சயமாய் வெளியே துரத்திவிடுவேன்......... காட்டிலிப் ஸ்டிபெக், நான் என் வாழ்நாளிலேயே இதுவரை கண்டிராத மிக யோக்யமானவர் – பிலிப்லி – அவரைப்பற்றிச் சொல்ல வார்த்தைகளே போதாது. இந்த உதவாக்கரை—முழு ஒழுங்கீனம்.........'

கடைசியாக அவன் கூறிய வார்த்தைகள் சில காதிலே விழவில்லை. ஹான்ஸ் ஸ்டிபெக் பேசாமல் பால் பண்ணைக்குப் போய்விட்டு திரும்பிவந்துகொண்டிருந்தான். பிறகு, சீக்கிரம் அவன் அயர்ந்து தூங்கிவிட்டான்.

வானில் நட்சத்திரங்கள் பிரகாசித்துக்கொண்டிருந்தன. ஹான்ஸ் ஸ்டிபெக் சப்தமின்றி அறை வாயிற்படியைத் தாண்டி வரும்போது, தாழ்வாரத்திற்கு எதிரில் நட்சத்திரம் ஒன்று ஜ்வலித்துக்கொண்டிருந்தது. அவன் உடலில் ஒவ்வொரு அங்கமும் வாயினுற்சொல்ல முடியாதபடி அவ்வளவு வலியெடுத்திருந்தது. அவனுல் எழுந்து நடக்கமுடியவில்லை. அதனுல் அவன் அடிமேல் அடியெடுத்து வைத்து மெல்ல ஊர்ந்துகொண்டே படியருகில் வந்தான். தாழ்வாரத்தின் குறுக்கே தட்டுத்தடுமாறி நடந்து

வந்து அந்த மூலையில் நாயின் அருகில்வந்து உட்கார்ந்துகொண்டு தேம்பித் தேம்பி அழுதான். மெதுவாக உறுமிக்கொண்டே அவனுடைய முகத்தில் பிளூட்டோ நக்கிக்கொடுத்தது. பின்னர் அவன் காலிலேயே தலையைச் சாய்த்துக்கொண்டு படுத்துவிட்டது.

மிகவும் களைத்துப்போய், தாங்கமுடியாத வலியுடன் அங்கேயே அவர்கள் இருவரும் படுத்துக்கிடந்தார்கள். அவர்களுக்கு மேலே உச்சியில் பொன்போல மின்னும் நட்சத்திரம் ஒன்று ஒளி வீசிக்கொண்டிருந்தது. ஆனால், அவர்கள் அதைக் காணவேயில்லை.

'என்ன, தம்பி! இரண்டு பென்ஸ் குறைகிறதே! எங்கே? என்ன? மறுபடியும் எடுத்துப் பதுக்கிக்கொண்டாயா? அப்படித்தான் இருக்கும் என்று நினைக்கிறேன்' என்று சொல்லி வண்டிக்காரன், அவனைப்பிடித்து ஒரு குலுக்கு குலுக்கினன். தன்னுடைய வெறுங்கையை விரித்துக்காட்டி, 'நான் எடுக்கவில்லை, உண்மையாகத்தான் சொல்கிறேன்—அதை நான் எடுக்கவேயில்லை. கடவுளே—அட ஈச்வரா! .....'என்று விம்மி விம்மி அழுதான் ஹான்ஸ்.

அவர்கள் இப்பொழுது தெருவில் பால்வண்டியின் அருகில் நின்றுகொண்டிருந்தார்கள். சரத் காலத்துக் குளிர்ந்த இளங் காற்று மெதுவாக வீசியது. மரங்களிலிருந்து பழுப்பு இலைகள் உதிர்ந்து அவர்கள் காலடியில் வந்து விழுந்தன. உலர்ந்து உதிரும் இலைகளைப்போலவே, குளிர்காற்றில் பையனும் நடுங்கிக் கொண்டிருந்தான்.

'அதை நான் எடுக்கவேயில்லை. ஓ! மிஸ்டர் ஸ்கூல்ஸ், போய் என்னைப்பற்றி ஏதும் புகார் செய்துவிடாதீர்கள். ஐயா! நான் அதை எடுக்கவேயில்லை—நான் அதை எடுக்கவேயில்லை—நான் அதை எடுக்கவேயில்லை.' மறுபடியும் மறுபடியும் அதே வார்த்தைகளை அறியாமையால் திரும்பத்திரும்பச் சொல்லிக் கொண்டேயிருந்தான்.

'யாருக்கும் தெரியும் 'அது?' என்முன் வண்டியோட்டி உணர்ச்சியின்றி. 'சரி. நேரே நீ ஆபீஸுக்கு வா; எப்படியிருந்த போதிலும் நான் உன்னைப்பற்றிப் புகார் செய்யத்தான் போகி றேன்' என்று கூறி, அவனுடைய சட்டையைப் பிடித்திழுத் தான் அவன்.

அந்தப் பென்ஸுகள் எங்கேதான் போயிற்று? ஒருவேளை அவனே எங்கேயாவது கீழே போட்டிருக்கலாம்—அல்லது—சில் லரை கொடுக்கும்போது தவறுதலாக. அதிகம் கொடுத்திருக் கலாம்—எப்படியோ அவை காணமற்போய்விட்டது. முன்னொரு முறை பால் பணத்தைத் திருடிவிட்ட ஹான்ஸ் ஸ்டிபெக்கை இப்போது யாரும் நம்பமாட்டார்கள்.

'அப்பொழுதே வேலையைவிட்டு நீக்கியாகிவிட்டது—நான் உன் தகப்பனாரிடம் இந்த விஷயத்தைத் தெரியப்படுத்துகிறேன்' என்றார் இன்ஸ்பெக்டர்.

ஹான்ஸ் அவனுக்குப் பழக்கமான வீதிகளின் வழியே குடித்தவன்போல் தள்ளாடித் தள்ளாடி நடந்துவந்து கொண்டி ருந்தான். அவர்கள் அவனை நம்பமாட்டார்கள்—அடுத்தபடியாக என்ன நடக்கப்போகிறது? பைத்தியம் பிடித்தாற்போன்ற ஒரு குழப்பமான பயங்கர உணர்ச்சி அவனைச் சூழ்ந்துகொண்டது. முன்பு கிடைத்த—அந்த கோடை காலத்தில் மெலிந்த உடம்பை முறித்து எறிந்த—அந்த ஏராளமான உதையும் மிதியும் அவன் நினைவுக்கு வந்தன. இப்பொழுது இலை உதிர்காலம் (சரத்காலம்) ஆனால், அப்பொழுது பட்ட உதைகளின் வடுக்கள் இன்னும் சரி யாக மாறவில்லை. முன்னமேயே தன் தகப்பனாரின் வசைமாரியை யும், தன் தாயார் நடுக்கத்துடன் தனக்காகப் பரிந்து பேசுவதை யும், தான் வேதனை தாங்காது விம்மியழுவதுமாகிய வற்றையெல் லாம் நன்கு உணரத் தொடங்கினான். வியர்வைத் துளிகள் தோன்றி பொட்டின் வழியாக கசிந்து ஒழுகியது. தலை சுழன்று கிறு கிறுத்துப்போய் அவன் கண்களை மூடினான்—அவன் எங்கே போவது? எங்கே? பைன்—ஜூனிபர் முதலிய மரங்கள் அடர்ந்த

பால்காரப் பையன்

காட்டுக்குள்ளே போய், அங்கே இரகசியமாகத் திரிந்துகொண்டிருக்கலாமா? எப்படியும் அவர்கள் அவனைக் கண்டுபிடித்தே விடுவார்கள். இப்பரந்த உலகின் வீதிகளில் வேறு எங்கேயாவது அவன் அலைந்துகொண்டிருக்கலாமா? அங்கேயும்கூட, அவர்கள் அவனைக் கண்டுபிடித்து விடுவார்கள். ஏக்கம் பிடித்த கண்களுடன், ரொம்பவும் முகம் வெளுத்துப்போய் அவன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அவன் ஒன்றும் சொல்லவில்லை. அவர்களே எல்லாம் சீக்கிரத்தில் அறிந்துகொண்டு விடுவார்கள்.

அவன் தாயார் தன்னுடைய காய்த்துப்போன சொர சொரப்பான கைகளால் அன்புடன் அவன் தலையைத் தடவிவிட்டுக் கொண்டே 'என்ன, உனக்கு உடம்பு சரியாக இல்லையா?' என்று கேட்டாள். தன் பிரியத்தை அவள் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள முயற்சிக்காவிட்டாலும், தன் பிள்ளையிடம் உண்மையாகவே அவள் மிகவும் பிரியமுடையவளாகவே இருந்தாள். ஆனால், இன்று ஹான்ஸின் தகப்பனார் வீட்டில் இல்லை. 'உனக்கென்ன காய்ச்சல் அடிக்கிறதா?' என்று கேட்டாள் அவன் தாயார்.

அவன் மெள்ளத் தலையை அசைத்துவிட்டு மெதுவாய் எழுந்து சென்று, இரவில் மற்றக் குழந்தைகளுடன் படுக்கையில் படுத்து உறங்கினான். சுவர்ப்புறமாக அவன் முகத்தைத் திருப்பி வைத்துக்கொண்டிருந்தான். வியர்வையுடனும் பெருமூச்சுடனும் கைகளை இறுகக் கட்டிக்கொண்டு உடம்பை நன்றாய் மூடிக் கொண்டு படுத்திருந்தான். அவனால் பிரார்த்தனை செய்யவும் முடியவில்லை; அவன் பிரார்த்தனை செய்வதும் வழக்கமில்லை. என்றாலும், அவன் எதைக் குறித்துப் பிரார்த்தனை செய்வது? பயமும் நடுக்கமும் அவனுக்கு மிக மிக அதிகமாக இருந்தது.

சாயங்காலம் அவனுடைய தகப்பனார் வீட்டுக்கு வந்தார். நன்றாய்க் குடித்துவிட்டு வந்திருந்தார் அவர். 'எங்கே அந்தப் பயல்' என்றார் மெதுவாக.

ஹான்ஸ் நடுங்கிப்போனான். தலையையும் சேர்த்து இழுத்துப் போர்த்துக்கொண்டான். அவனுக்கு மூச்சுவிடக்கூட பயமா

யிருந்தது. 'அவனுக்கு உடம்பு சரியில்லை' என்றாள் அவன் தாயார்.

'அது என்னது? முட்டாள் பயல்! இருக்கட்டும், நாளை வரைக்கும் பொறுத்துக்கொள்; நாளைக்கு நான் என்ன செய்கிறேன், பார்' என்று உறுமினான். தானே ஏதும் பேசாமல் படுக்கையில் போய் விழுந்தான், அந்தச் செருப்புத் தைக்கும் ஸ்டிபெக். அடுத்த நிமிஷத்தில் குறட்டை விட்டுக்கொண்டிருந்தான்.

"நாளைக்கு என்றாரே என்ன? அவருக்குத் தெரிந்து விட்டதோ—என்னவோ?" என்று எண்ணினான் ஹான்ஸ்.

அந்தப் பையனுக்குக் குளிரும் ஜுரமும் மாறி மாறி வந்து நடுக்கிவிட்டது. இருண்ட அறையில் தன் பிரகாசமான கண்களை அகலவிழித்து, திகைத்துத் திகைத்து உற்றுநோக்கினான். ஒரு தீராத ஆசை அவன் உள்ளத்தில் துள்ளி எழுந்தது. அவனுக்கு இருந்த பயத்தையும் மீறி அந்த ஆவல் எழுந்தது. அவன் மண்டையைப் பிளக்கும் தலைவலிக்குச் சற்று ஆறுதல் வேண்டி, எதிலேயாவது கொஞ்சம் சாய்ந்துகொண்டு சுகமாய்ப் படுத்துக்கொண்டிருக்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

'பிளுட்டோ!' என்று எண்ணியதுமே அவன் முகத்தில் புன்னகை அரும்பியது. ஆம்! அதுவேதான்! அவனுடைய அருமை நாய் பிளுட்டோ! பொழுது விடிந்ததும் அவன் சென்று அதைக் காணலாம். பிளுட்டோவைத்தான்! அருமைப்பிளுட்டோ!

அவனுடைய சிந்தனைகள் திரிந்தலைந்தன. குழப்பமான பற்பல கனவுகளும் காட்சிகளும் அவன் கருத்தில் உதித்து மறைந்தன. என்றாலும், சதா பிளுட்டோவின் நினைவுதான் அவன் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. கடைசியாக, ஹான்ஸ் தூங்கிவிட்டான். மெலிந்திருந்த அவன் கைகள் துப்பட்டியின் மீது கட்டிக்கிடந்தன. உதடுகள் விரிந்திருந்தன.

பால்காரப் பையன்

அவன் அதிகாலையில் வெகு சீக்கிரமாகவே எழுந்துவிட்டான். அமைதியாகத்தான் தூங்கினான் அவன். ஒளி குறைந்து வெளுத்துப்போன பிறைச் சந்திரன் அப்பொழுதும் பிரகாசித்துக்கொண்டிருந்தது. இன்னும் பொழுது புலரவில்லை. மெதுவாக ஹான்ஸ் படுக்கையைவிட்டு எழுந்தான். கைகால் முகம் கழுவினான். சிறிதும் சந்தடியின்றி வெகு ஜாக்கிரதையாகத் தலையை நன்றாய் வாரிக்கொண்டான். நீல உடைதரித்து, பச்சை நாடா சுற்றிய குல்லாவை அணிந்துகொண்டு, அவனுடைய தாயார் படுத்திருந்த அறையின் வழியே மெதுவாக வந்தான். அவளையே பார்த்துக்கொண்டு சில நிமிஷங்கள் அங்கேயே நின்றுகொண்டிருந்தான் ஹான்ஸ். பின்பு, அவன் வெளியேறினான்.

நள்ளிரவில் தூங்கிக்கொண்டிருந்தது போலவே செருப்புத் தைப்பவனான ஸ்டிபெக் இப்பொழுதும் உரக்கக் குறட்டைவிட்டு தூங்கிக்கொண்டிருந்தான். ஆனால் அவன் மனைவியோ எதிரொலிக்கும் கூக்குரல் கேட்டு விழித்தெழுந்தாள். அது தாழ்வாரத்திலிருந்துகேட்டது.

"ஸ்டிபெக் — ஸ்டிபெக் — அம்மா — ஸ்...... டி —பெக் !" இப்பொழுது என்ன ஆபத்து நேர்ந்தது? படுத்திருந்த குழந்தைகளும் விழித்தெழுந்து கத்த ஆரம்பித்துவிட்டன. தூங்கிக்கொண்டிருந்தவள் திடீரென்று எழுந்து சிற்றாடையை எடுத்துச் சுற்றிக்கொண்டு வெறுங்காலுடனேயே ஜன்னலை நோக்கி வேகமாய்ச் சென்றாள். வெகுநேரமாகவே யாரோ அங்கே நின்றுகொண்டு ஜன்னலின் கதவைத் தட்டிக்கொண்டிருந்திருக்கிறார்கள்.

"ஸ்டிபெக்.......ஸ்டிபெக்............அம்மா ....ஸ்டிபெக்" என்ன அது? என்ன ஆபத்து நேர்ந்திருக்கிறது? அவள் உடம்பெல்லாம் நடுக்கம் எடுத்தது. அந்தக் குரல்கள் அவ்வளவு பயங்கரமாக ஒலித்தன. 'வாங்க! இங்கே வெளியே வாங்க! சீக்கிரம், இங்கே சீக்கிரமாக. வாங்க அம்மா! உங்கள் பிள்ளை! அவனுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கிறதம்மா!'

. பால்காரப் பையன்

'ஆபத்து நேர்ந்திருக்கிறதா? அவனுக்கு என்ன ஆபத்து நேர்ந்திருக்கிறது?' என்று பெற்றவளின் தேகமெல்லாம் அபாயத்தின் காரணத்தை யறிய மிக்க ஆர்வமுடன் பயங்கரமாய்த் துடித்தது. 'ஸ்டிபெக்' என்று தன் புருஷனைக் கூவியழைத்தாள். அவன் சற்றே திரும்பி படுக்கையில் அசைந்து கொடுத்தான். அவ்வளவுதான், பின்னும் நீண்ட குறட்டைதான்.

வெளியே எழுந்த கூச்சல் பெரிதாகிப் பெருங் குழப்பமாக மாறியது. தாறுமாறான பல குரல்கள் கிளம்பின. கண்டவர் கத்தும் கூச்சல்கள்! இத்தனைக்கும் மத்தியில் நீண்ட பயங்கரமான ஊளைகள். பயத்தால் நடுங்கிக்கொண்டிருந்த அவள் தன் உடையைச் சீர்செய்துகொண்டாள். அவள் வெளியே வந்ததும் ஒரு பெரும் கூச்சல் ஏகமாகக் கிளம்பியது. தாழ்வாரத்து மூலையில் நாயின் கூண்டினருகே ஒவ்வொருவராக வந்து கூடிப்பெருங் கூட்டமாகிவிட்டது. ஒரே கூட்டமும் குழப்பமும்!

'என்ன அது? என்ன ஆபத்து நேர்ந்தது?'—'எதிர்பாராத ஒரு விபத்து'—'ஸ்டிபெக்கினுடைய பிள்ளை! ஆ! அட கடவுளே!' என்று பல குரல்கள்.

"ஹான்ஸ்-?" என்று கூவி யழைத்துக்கொண்டு ஓடிவருகிறாள், ஹான்ஸின் தாய்.

கூட்டத்தில் ஜனங்கள் விலகி வழிவிடுகிறார்கள். பெற்ற தாய் அவ்வழியே பாய்ந்து செல்கிறாள். உடனே, அவள் பயங்கரமாகக் கூச்சலிட்டாள். அது தாழ்வாரத்துச் சுவர்களில் தாக்கி எதிரொலித்தது. அவளுக்கு அந்த நாயின் அழுகையொலிதான் பதில் அளித்தது.

நாய்க் கூண்டின் மேலே சுவற்றில் ஒரு மூளை துருப் பிடித்துப்போய் நீட்டிக்கொண்டிருந்தது. அதிலிருந்து ஒரு சிறுவனின் மெலிந்த உடல் தொங்கி ஆடிக்கொண்டிருந்தது. நீல உடையணிந்திருந்த அந்தப் பையன் தன் கருப்புத் தோல் பெல்ட்டில் தொங்கிக்கொண்டிருந்தான். பச்சை நாடா சுற்றியிருந்த அந்தக் குல்லா நழுவிக் கீழே விழுந்துகிடந்தது. காலை

பால்காரப் பையன் .

இளங்காற்று அவன் சிடுக்கான மயிர்களிடையே வீசிக்கொண் டிருந்தது. வாய்திறந்திருந்தது; விழிகள் கண்ணாடிபோல்மின்னின.

வெறிகொண்டது போல அந்த நாய் தொங்கிக்கொண் டிருந்த அந்தப் பையனின் கால்களை வேகமாகத் தாவித் தாவிப் பிடிக்க முயன்றது. ஆனால், அதற்கு எட்டவேயில்லை. பிறகு, அது கீழே விழுந்து படுத்துக்கொண்டது. அது தன் தலையை உயரத் தூக்கி விண்ணை நோக்கி மிகப் பரிதாபகரமாக ஊளை யிட்டது. யாரையும் அங்கே அது நெருங்கவிடவில்லை.

'நாய்க்கூண்டின் அருகில் இருந்த இருண்ட சுவற்றில், ஒரு செய்தி காணப்பட்டது. பெரியதாக, யாருக்கும் புரியும் படியாக, குழந்தையின் கையெழுத்தில் அது எழுதப்பட்டிருந்தது.

" அந்த இரு பென்ஸுகளை நான் திருடவில்லை,
பிளுட்டோவினிடம் பிரியமாயிருங்கள்,
ஹான்ஸ் ஸ்டிபெக்—பால்காரப்பையன்,"

காதலும் வாழ்க்கையும்

கஸ்டவ் பாக் என்ற அந்த இளைஞன் உதவிக்கௌன்சிலராக வேலைபார்த்துக்கொண்டிருந்தான். அவன் லூயியின் தகப்பனரிடம் சென்று, லூயியைத் தனக்குக் கலியாணம் செய்து கொடுக்கும்படி கேட்டான். அப்பொழுது அந்தக் கனவான் கஸ்டவ்விடம் முதலில் கேட்ட கேள்வி இதுதான். 'தம்பி, நீ எவ்வளவு சம்பாதிக்கிருய்?' 'ஒரு மாதத்திற்கு நூறு குரோனர் * வரையில் கிடைக்கும். ஆனல் லூயி.........' என்று கஸ்டவ் பதில் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே, அவனுக்கு மாமனுராகப்போகும் அந்தக் கனவான் இடைமறித்து, 'மற்றவைகளைப்பற்றி ஒன்றும் கவலையில்லை, தம்பி. நீ போதிய அளவு சம்பாதிக்கவில்லையே' என்ருர். 'ஓ! ஆனல், லூயியும் நானும் ஒருவரை யொருவர் உண்மையில் எவ்வளவு காதலிக்கிருேம் தெரியுமா? எங்கள் இருவரையும் பிரிக்கவே முடியாது' என்ருன் கஸ்டவ். 'அப்படியே இருக்கட்டும். இருந்தாலும், நான் உன்னைக்கேட்கிறதென்னவென்ருல் உனக்கு ஒரு வருஷத்திற்கு வரக்கூடிய மொத்த வருமானம் ஆயிரத்தி இருநூறு குரோனர்தானே ஆகிறது, இல்லையா?' என்ருர் அவர். 'லிடின்கோவில்தான் முதல் முதல் நாங்கள் ஒருவருக்கொருவர் தெரிந்துகொண்டு பழக ஆரம்பித்தோம்' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தான் கஸ்டவ். 'உன்னுடைய இந்த சர்க்கார் சம்பளத்தைத்தவிர, இன்னும் ஏதாவது உனக்கு வருமானம் ஏற்படுத்திக்கொண்டிருக்கிருயா?' என்று கொஞ்சம் அழுத்தமாகக் கேட்டார் லூயியின் தகப்பனர். 'ஆமாம், அதற்கென்ன? நமக்குப் போதிய அளவு வருமானம் கிடைக்கும் என்றே நான் எண்ணுகிறேன். மேலும், நீங்களே பாருங்கள், எங்கள் பரஸ்பர நேசப் பான்மையானது.........' என்று கஸ்டவ் சொல்லிக் கொண்டிருக்கும்போதே நடுவில், 'ஆமாம் தம்பி, அதெல்லாம் சரிதான். ஆனல், நமது வருமானம் இன்னும் கொஞ்சம் கூடினல் பாதகமில்லை.' என்ருர் அவர். அதற்குள் ஆவல் மிகுந்த மணமகனகிய கஸ்டவ் சொன்னன்: 'ஓ, இன்னும் அதிகப்படியான வேலை

---

* ஒரு குரோனர் என்பது ஒன்றேயரைக்கால் ஷில்லிங் ஆகும்.

கள் சிலவற்றின்மூலம் நான் போதிய அளவு வருமானத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.' 'வேறு என்ன வேலைகள் செய்வாய்? எவ்வளவு இன்னும் அதிகமாகக் கிடைக்கும் உனக்கு?' என்றார் அந்தக் கனவான். 'பிரஞ்சு மொழி போதிக்கத்தெரியும் எனக்கு; இன்னும், நன்றாய் மொழிபெயர்க்கத் தெரியும். அத்துடன் கொஞ்சம் புரூப் பார்த்துத் திருத்திக் கொடுக்கும் வேலையும் பார்ப்பேன்' என்றான் கஸ்டவ். கையில் ஒரு பென்ஸிலை வைத்துக்கொண்டு, அந்தப் பெரியவர் 'எவ்வளவு பக்கம் தம்பி, மொழிபெயர்ப்புக்கள் எல்லாம்?' என்று கேட்டார். 'அதைப்பற்றி ஒன்றும் இப்பொழுது நான் திட்டமாகச் சொல்லமுடியவில்லை. ஆனால், தற்சமயம் நான் ஒரு பிரஞ்சு புத்தகத்தை மொழிபெயர்த்து எழுதிக்கொண்டிருக்கிறேன், அதற்கு எனக்கு ஒரு பக்கத்திற்கு பத்துக்குரோனர் வீதம் கொடுப்பதாக ஏற்பாடாகியிருக்கிறது.' 'மொத்தத்தில் அதில் எத்தனை பக்கங்கள் இருக்கின்றன?' என்று கேட்டார். 'நான் நினைக்கிறேன், அநேகமாக இருபத்தி நாலு பக்கங்கள் இருக்கலாம்.' 'ரொம்ப சரி, இதன் மூலம் சுமார் இருநூற்றைம்பது குரோனர் கிடைக்கும் என்று வைத்துக்கொள்வோம். இப்போதைக்கு இவைகளைத் தவிர இன்னும் ஏதாவது உண்டா?' என்று கேட்டார் அந்தப் பெரியவர். 'ஓ, தற்சமயம் வேறொன்றும் தெரியவில்லை. இன்னும் வரலாம். சந்தேகமில்லை.' என்றான் கஸ்டவ்.

'அதென்ன? அதைப்பற்றி நிச்சயமாக இப்பொழுது ஒன்றும் தெரியவில்லை என்கிறாய். ஆனால், நீ கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று நினைக்கிறாயே. தம்பி! நீ கலியாணம் என்றால் ஏதோ அதைப்பற்றி விசித்திரமான, புதுமையான எண்ணங்கொண்டிருக்கிறாய் என்று நினைக்கிறேன். கலியாணம் செய்துகொள்வது என்றால், அதனால் ஏற்படும் பொறுப்புகளை நீ உணர்ந்துகொண்டாயா? பின்னர், குழந்தைகள் பிறக்கும், அவைகளுக்கு உடை, உணவு முதலியவற்றிற்கு ஒரு குறைவுமின்றி, அவைகளைப் போஷித்து வளர்க்கவேண்டும், இல்லையா?' என்று கேட்டார்அவர். இவ்வாறு அவர் சொல்லும்போது, கஸ்டவ் இடை

மறித்துச் சொன்னுன்: 'ஆனுல், குழந்தைகள் என்ன அவ்வளவு சீக்கிரத்திலேயா பிறந்துவிடப் போகின்றன? மேலும், நாங்கள் ஒருவருக்கொருவர் இணையற்ற அன்புடையவர்களாக இருக்கிருேம். அந்த........' என்று ஏதோ சொல்லத் தொடங்கினுன். 'அதற் கென்ன? குழந்தைகள் பிறப்பது என்பது எதிர்காலத்திய விஷயந் தானே, அதைப்பற்றி இப்பொழுது சுலபமாகக் குறிசொல்லிவிட லாம்' என்ருர் பெரியவர்.

பின்னர், மனமிரங்கி, லூயியின் தகப்பனுர் சொன்னுர்: 'நீங்கள் இருவரும் கலியாணம் செய்துகொள்வது என்று தீர்மா னித்துவிட்டீர்கள் என்று நினைக்கிறேன். நீங்கள் ஒருவரையொ ருவர் உண்மையிலேயே மிக அன்புடன் காதலிக்கிறீர்கள் என்பதி லும் எனக்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை. அதனுல், முடிவாக நான் என்னுடைய அனுமதியையும் அளிக்கவேண்டியதுதான் என்று தோன்றுகிறது. ஆனுல், உனக்கு நான் ஒன்று சொல்வேன். லூயியுடன் நீ காலத்தை வீண் போக்காது, சரியான வழியில் பொழுதைப் பயன் படுத்திக்கொண்டு உன்னுடைய வருமானம் அதிகரிக்க முயற்சி செய்.'

இவ்விதமாக அனுமதி பெற்றதும் கஸ்டவ் என்ற அந்த இளைஞன் ஆனந்தத்தால் உடலும் உள்ளமும் பூரித்தான். முத்தமிட்டுக்காட்டுபவன்போல அப்பொழுதே அந்தப் பெரிய வரின் கையை முத்தமிட்டான், அவன் அடைந்த அளவு கடந்த ஆனந்தத்தை ஈசனேயறிவான். ஆம், அவனுடைய லூயி யும் கூட எல்லையற்ற ஆனந்தமடைந்தாள்! முதன் முதலில் அவர்கள் இருவரும் உல்லாசமாக வெளியே உலவிவிட்டு வரச் சென்ற பொழுது அவர்களுடைய இன்பமும், மனேகரமான காம்பீர்யமும் வர்ணிக்க இயலாதது. ஒவ்வொருவரும் இந்த மனமொத்த தம்பதிகளின் குதூகலத்தை எவ்வாறு கண்டுகளித் தார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

தான் பார்த்துத்திருத்தித்தரவேண்டிய அந்தப் புரூப் தாள்களையும் எடுத்துக்கொண்டு கஸ்டவ் மாலை வேளைகளில் லூயியைப் பார்க்கவருவதுண்டு. இவ்விதமாக அவன் வருவதைக்

கண்ட் லூரயியின் தந்தைக்கு இவ்னைப் பற்றி ஒரு நல்ல அபிப் பிராயம் ஏற்படலாயிற்று. அத்துடன் அந்த உத்சாக மிகுந்த இளைஞனுக்குத்தன் ஆசைக்காதலியிடமிருந்து ஒரு இன்பமய மான முத்தமும் கிடைத்தது. ஒரு நாள் சாயங்காலம் இருவரும் சற்று வேடிக்கையாக நாடகம் பார்க்கச் சென்றிருந்தார்கள்; வரும்பொழுது ஒரு வண்டியை அமர்த்திக்கொண்டு வீடுவந்து சேர்ந்தார்கள். அன்று மாலையில் நடந்த விருந்து, வேடிக்கை ஆகியவற்றிற்கு மொத்தம் சுமார் பத்துக்குரோனர் செலவானது. இன்னும், அவன் எத்தனையோ நாள் மாலை நேரத்தில் பாடம் சொல்லிக்கொடுப்பதை விட்டு விட்டு அந்த நேரத்தில் லூரயியை அழைத்துக்கொண்டு கொஞ்சதூரம் உலவி விட்டு வருவதற்காக, அந்த இள நங்கையின் வீடுதேடி வந்துவிடுவது வழக்கம்.

கலியாணத்திற்காகக் குறிக்கப்பட்டநாள் நெருங்க நெருங்க, தங்கள் மனதுக்கு மிகவும் பிடித்தமான முக்கியமாய் வாங்கவேண் டிய சாமான்களைப்பற்றிய ஜாபிதாவை ஆவலுடன் தயாரிக்கலா னார்கள். இரண்டு அழகிய படுக்கைகள்—நல்ல (அக்ரோட்டு) மரத்தில் செய்யப்பட்ட கட்டில்கள்—அதற்குகந்த சிறந்த ஸ்பிரிங் குகள் வைத்துத் தயாரிக்கப்பட்ட சுகமான குஷன் மெத்தைகள்—வாத்தின் மிருதுவான மயிர்களாலான அழகிய தலையணைகள் ஆகிய வைகளெல்லாம் அவர்கள் வாங்கினார்கள். லூரயியின் கூந்தல் மிகுந்த அழகுடையதாக இருந்தபடியால் அதற்கேற்ற மிகஉயர்ந்த நீல நிறத்தில் ஒரு அழகிய தலையணை இருக்க வேண்டியதுதான். அதோடு வீட்டுக்கு அலங்காரமாக வைக்கும் சாமான்கள் விற்கப் படுமிடத்திற்குச் சென்று அவர்கள் சில சாமான்கள் வாங்கிவந் தார்கள். சிவந்த மேல்மூடியையுடைய ஒரு அழகிய விளக்கு, பிங்கானில் செய்த கண்ணைக் கவரும் வனப்புடைய ரதிதேவியின் உருவச்சிலையொன்று, இன்னும் உணவு கொள்ளும்போது உதவக் கூடிய துண்டிக்கும் கத்திகள், குத்திக் கிழிக்கவும் பற்றிப்பிடிக்க வும் உதவும் கம்பிகள், கண்ணாடிக் கிண்ணங்கள்—டம்ளர்கள் முதலிய அலங்காரமான சாமான்கள் ஆகிய உணவு மேஜைக்குரிய ஒரு முழு செட்—இவைகளையெல்லாம் தேர்ந் தெடுத்து வாங்கிவந்தார்கள் அவர்கள். சமையலறைப் பாத்திரங்

களை வாங்கும்பொழுது தேர்ந்து எடுப்பதில் லூயியின் தாயார் கூடவிருந்து உதவிபுரிந்தாள். இந்த சமயத்தில் எல்லாம் அந்த உதவிக் கௌன்சிலருக்கு, ஆம்—கஸ்டவ்வுக்குத்தான் கொஞ்சமும் ஓய்வு என்பதே கிடையாது. அங்குமிங்கும் அலைந்து நல்லவீடு தேடிப் பிடிப்பதும், வேலையாட்களை அமர்த்திக் கொள்வதும், வாங்கிய சாமான்களெல்லாம் ஒழுங்காய் விடுவந்து சேர்ந்து சரியாய் வைக்கப்பட்டிருக்கிறதா என்று கவனிப்பதும், செலவுகளுக்கு வேண்டிய பணத்திற்கு அவ்வப்பொழுது 'செக்' எழுதிக்கொடுத்தனுப்புவதும்-இன்னும் என்னவேண்டும்?— இப்படியாக அவனுக்கு வேலைக்கு மேல்வேலையாக இருந்தது.

இத்தனை வேலைகளுக்குமிடையில் கஸ்டவ் இன்னும் அதிகப்படியாக உழைத்து வருமானத்தை அதிகரிக்க முயற்சிப்பது சாத்யமில்லை என்பது முற்றிலும் உண்மையே. ஆனல், அவர்களுடைய கலியாண வேலைகள் முடிந்ததும் ஒரு வேளை சாத்யமாகும் என்பதில் உண்மையிலேயே அவனுக்கு நம்பிக்கை இருந்தது. சாதாரணமாக இரண்டு அறைகளுடன் கூடிய ஒரு சிறு இடத்தில் குடித்தனம் தொடங்கி, மிகவும் சிக்கனமாகவே அவர்கள் வாழ்க்கை நடத்த எண்ணினர்கள். அறுநூறு குரோனர் வாடகையில், இரண்டு அறைகள், ஒரு சமையலறை, ஒரு சாமான் அறை இவற்றுடன் கூடிய ஒரு சிறு இடத்தைப் பேசி முடித்தார்கள். தங்கள் உபயோகத்துக் கென்று மாடியில் மூன்று அறைகள் வாங்கிக்கொண்டால் சௌகரியமாக இருக்கும் என்று முதலிலேயே லூயி சொன்னுள்: இது கிடக்கட்டும்; இன்னும் அவள் எதை விரும்பினுல்தான் என்ன, நிறைவேருதா? அவர்கள் இருவர் உள்ளமும் ஒன்ருகிவிட்டதின் பின்னர், லூயி கேட்டவைகளில் எதையளிக்கத்தான் கஸ்டவ் பின் வாங்குவான்?

கடைசியாக, அந்த அறைகளும் ஏற்பாடாகிவிட்டன. அந்த சயன அறை உண்மையிலேயே மிகவும் புனிதமான ஒரு அழகிய பள்ளியறை போலவே அமைந்திருந்தது. சேர்ந்தாற்போலவே போடப்பட்டிருந்த இரு படுக்கைகள், வாழ்க்கையாகிய பிரயாணத்தை ஆர்வமுடன் தொடங்கிச்செல்லும் இரு ரதங்கள் போலவே

காட்சியளித்தன. அந்த அழகிய நீலத் தலையணைகள், பனியை யொத்த மிக வெண்மையான விரிப்புக்கள், தலையணைமீது காணப் பட்ட சிறந்த ஜரிகை வேலைப்பாடுகள் ஆகியவை யெல்லாம் ஒளி வீசும் இன்பக் காட்சியாய் இருந்தது. இதற்கடுத்த அறை லூயி யின் சொந்த உபயோகத்திற்கென்றே தனியாக ஏற்பாடாகியிருந் தது. அதில் அவளுடைய சொந்த பியானோ வாத்தியத்தை (அவள் அதை 1200 குரோனர் கொடுத்து வாங்கியிருந்தாள்) வைத்திருந்தாள். அந்த அறையிலேதான் அவளுக்குச் சாப்பாடு, படிப்பு, நண்பர்களுடன் பேச்சு முதலிய சொந்த உபயோகத்திற் கெல்லாம்; இங்கேயும்கூட ஒரு அழகிய சாய்ந்த மேஜை; உணவு கொள்வதற்குரிய சிறந்த மேஜை, நாற்காலிகள்; இன்னும் மிகச் சிறந்த பொன் முலாம் பூசிய சட்டம்பிடித்த ஒரு பெரிய முகம் பார்க்கும் கண்ணாடி, ஒரு சோபா, புத்தகம் வைப்பதற்கான சிறிய அலமாரி ஒன்று ஆகியவைகள் இருந்தன.

ஒரு சனிக்கிழமை இரவு கலியாண வைபவம் மிக விமரிசை யாக நிறைவேறியது. இன்ப சாகரத்தில் மூழ்கிய அந்த இளம் தம்பதிகள் ஞாயிற்றுக்கிழமை காலையில் வெகு நேரமாகியும் மஞ் சத்தில் நித்திரையில் ஆழ்ந்திருந்தனர். முதலில் கஸ்டவ்தான் எழுந்திருந்தான். சாளரங்களின் வழியாக பிரகாசமான சூரிய கிரணங்கள் வீசிக்கொண்டிருந்த போதிலும் அவன் அவைகளின் கதவுகளை முழுவதும் திறந்துவிடவில்லை. ஆனால், சிவந்த மூடியையு டைய அந்த அழகிய விளக்கை ஏற்றினான். ஆஹா! அந்த விளக்கிலி ருந்து வீசிய மிக மனோகரமான சிவந்த ஒளி பீங்கானில் செய்யப் பட்ட அந்த அற்புதச்சிலைமீது விழுந்து கண்ணைக் கவரும் ஒப்பற்ற சௌந்தரியத்துடன் அது விளங்கியது. அழகிய இளங்கொடி போன்ற அவனுடைய மனைவி சற்றே சோர்ந்து களைத்தும், திருப்தி நிறைந்த முகத்துடனும் அங்கே துயின்றுகொண்டிருந்தாள். ரொம்ப சுகமான ஆழ்ந்த நித்திரையில் இருந்தாள் அவள். அன்று ஞாயிற்றுக்கிழமை அல்லவா? 'கடபுடா' சத்தத்துடன் அதிகாலை யில் வழக்கமாய்ப் போய்க்கொண்டிருக்கும் சந்தை வண்டிகளின் உபத்திரவமும் அன்று கிடையாது. அவள் நித்திரைக்கு எவ்வித இடையூறும் இல்லை. ஸ்திரீ—புருஷர்களை இவ்வுலகில் சிருஷ்டித்த

ஈசனின் செயலைக் கொண்டாடி மகிழ்வதுபோல, இந்த சமயத்தில் மாதாகோவிலின் மணியோசை கணீரென்று ஒலித்தது.

கஸ்டவ் ஏதோ காரியமாக திரையின் பின்புறம் சென்ற போது லூயி கொஞ்சம் புரண்டு படுத்துக்கொண்டாள். அவன் சமையலறைப் பக்கம் சென்று, காலை ஆகாரத்திற்குச் சொல்லி யனுப்பி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். அங்கே வைத்திருந்த புதிய பாத்திரங்கள் தான் எவ்வளவு அழகாகப் 'பள பள' வென்று மின்னின. அவைகள் எல்லாம் அவனுக்கே சொந்தமானவை—ஆம், அவனுக்கும் அவளுக்கும்தான். கஸ்டவ், சமையற்காரனைக் கூப்பிட்டு சமீபத்திலுள்ள ஹோட்டலுக்குச்சென்று, ஆகாரத்தை அனுப்பிவைக்கும்படி தகவல் சொல்லியனுப்பினான். இந்த விஷயங்களைப் பற்றியெல்லாம் ஹோட்டல் முதலாளிக்கு நன்ருய்த் தெரியும். ஒரு நாள் முன்னதாகவே கஸ்டவ் இன்னின்ன செய்ய வேண்டுமென்று முழு விவரங்களையும் அவரிடம் சொல்லித் தகுந்த ஏற்பாடு செய்திருந்தான். இப்பொழுது அவன் செய்யவேண்டிய தெல்லாம் ஒன்றே ஒன்றுதான். அதாவது, தேவையான சமயங்களில் இன்னது வேண்டும் என்று ஒரு ஆளிடம் தகவலைச் சொல்லி யனுப்பவேண்டியது, அவ்வளவுதான்.

பின்பு, புது மாப்பிள்ளையாகிய கஸ்டவ் படுக்கையறையை நோக்கிவந்து 'நான் உள்ளே வரலாமோ?' என்று சாத்தியிருந்த கதவை லேசாகத் தட்டிக்கேட்டான். உள்ளே 'கிரீச்' என்ற ஒரு சப்தம் கேட்டது. பின்னர், 'ஊஹூம்! அன்பரே, சற்று ஒரு நிமிஷம் பொறுங்கள்' என்ற இனிய குரல் ஒலித்தது.

கஸ்டவ் தானே மேஜைகளை ஒழுங்காய் எடுத்துப்போட்டான். உடனே ஹோட்டலிலிருந்து ஆகாராதிகள் வந்துசேர்ந்தன. மிகப் பரிசுத்தமான வெள்ளைத் துணி விரித்து, அதன்மீது புதிதாய் வாங்கிய அழகிய பாத்திரங்களை எடுத்துவைத்து, அதில் இனிய உணவுப் பொருள்கள் பரிமாறப்பட்டன. கலியாணத்தின்போது அணிவித்த அழகிய மலர்மாலைகளும் பூச்செண்டும் லூயி வந்து உட்காரவேண்டிய இடத்தில் வைக்கப்பட்டிருந்தன. காலையில்

அவள் உடுத்தியிருந்த அந்த அழகிய ஜரிகை வேலைப்பாடமைந்த உடைகளுடன் அந்த அறையில் அவள் நுழைந்ததும், இளஞ் சூரியனின் பொன்மயமான ஒளிக் கிரணங்கள் அவளைக் குதூகலமாக வரவேற்றன. கொஞ்சம் களைப்புடனேயே அவள் காணப்பட்டாள். அதனால் கஸ்டவ் எழுந்து, தானே ஒரு நாற்காலியை எடுத்துப்போட்டு அந்த மேஜையருகில் அவளை உட்காரச் செய்தான். ஓரிரண்டு துளி மதுரமான மதுவைப் பருகுவது அவளுக்கு அப்பொழுது மிக உத்சாக மூட்டுவதாயிருந்தது. ஹா! இத்தகைய மதுபானங்களை இவள் பருகுவதை இவளுடைய தாயார் ஒருவேளை காணநேர்ந்தால், லூயியைப் பற்றி அவள் என்ன நினைக்கவேண்டியிருக்கும்? ஆம், இப்பொழுது கலியாணம் செய்துகொண்டிருப்பதின் நன்மை இதுதான். உங்களுக்குத் தெரிகிறதா? கலியாணமாகிவிட்டதென்றால் பிறகு உங்கள் இஷ்டம் என்னவோ அவைகளையெல்லாம் எவ்வித தடையுமின்றி நீங்கள் செய்துகொள்ளலாம்.

இளமை தவழும் புது மாப்பிள்ளையாகிய கஸ்டவ் அவனுடைய அழகிய காதலியாகிய லூயியையே வைத்தகண் வாங்காமல் உற்றுநோக்கிக்கொண்டிருந்தான். ஆஹா! அதில் அவன் அடையும் ஆனந்தம் அளவு கடந்தது. அவனும் இதற்கு முன்னால் எத்தனையோ தடவைகள் அவனுடைய பால்ய வயதில் மிக மிக ருசியான இனிய விருந்துகள் சாப்பிட்டிருக்கிறான். என்றாலும், அவைகளிலிருந்து அவனுக்கு அப்பொழுது ஏற்பட்ட திருப்தி, இன்பம், சுகம் இவைகளெல்லாம் எம்மட்டுக்கு? ஒன்றுமில்லை என்றே சொல்லிவிடலாம். நல்ல சுவை மிகுந்த ஒரு தட்டு கடல் மீன் உணவையும், ரஸமான ஒரு கோப்பை மதுவையும் அவன் உட்கொண்டபோது, மேற்கூறிய விதமாக அவன் எண்ணக் கடலில் இன்ப உணர்ச்சி அலைமோதியது. விவாகம் செய்துகொள்ளாமல் வீண் காலங்கழிக்கும் அந்த பிரம்மசாரிகள் வெறும் மூடர்கள் என்பதில் என்ன சந்தேகம்? மேலும், அவர்கள்தான் எவ்வளவு சுயநலமிகளாக இருக்கிறார்கள்? இத்தகையவர்களுக்கெல்லாம். நாய்களுக்கு வரி விதிக்கிறார்கள் அல்லவா, அதைப்போல இவர்கள் மீதும் வரி விதிக்கவேண்டும். லூயி இவ்வளவு கடுஞ்சித்தமுடையவளல்ல. 'பாவம், அவர்கள் ரொம்ப ஏழைகளாயிருப்பார்கள்.

கலியாணம் செய்துகொள்ள விரும்பினாலும் ஒருவேளை இயலாதவர்களாயிருக்கக்கூடும்' என்று அவள் நயமாகவும் இனிமையாகவும் சொன்னாள். வசதியிருந்தால் அவர்களும் கலியாணம் செய்துகொள்ளத் தயாராகவே இருப்பார்கள் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை என்றே அவள் எண்ணினாள். லூயியின் இந்த மனப்பான்மைக்கு கஸ்டவ் உள்ளூர வருந்தினான். இன்பம் என்பது பணத்தால் அளந்து தீர்மானித்துவிடக் கூடியது அல்ல. இல்லை, இல்லை. ஆனால்........சரி, அதிருக்கட்டும்; இன்னும் எவ்வளவோ வேலைகள் இருக்கிறது. எல்லாம் சரியாகிவிடும். தற்போதைக்கு இந்த பேஷான வருவலும், பிரசித்தமான பர்கண்டி ஒயினும் இருக்கிறது. என்ன கவலை? இந்த ஆடம்பரம், டாம்பீகச் செலவு இவைகள் எல்லாம் புதிதாய் வந்திருந்த அழகிய மனைவிக்குச் சற்றும் பிரமிப் பூட்டக்கூடியவைதான். என்றாலும், லூயி கொஞ்சம் நாணத்துடன் மெதுவாக கஸ்டவ்வினிடம் கேட்டாள்: 'இந்த ரீதியில் நாம் குடித்தனம் நடத்திவந்தால், நமக்குச் சரிப்பட்டு வருமா?' 'இத்தகைய ஆதாரமற்ற வீண் பீதிகளுக்குக் கொஞ்சமும் இடமில்லை' என்று கஸ்டவ் நயமாக ஆறுதல் கூறி, செயலில் காட்டுபவன்போல லூயியின் சிறிய கண்ணாடிக் கோப்பையில் இன்னும் கொஞ்சம் ஒயினை ஊற்றினான். மேலும், சமாதானம் சொல்லுகிற முறையில் அவளிடம் கஸ்டவ் சொன்னான்: 'அதற்கென்ன? ஒரு நாளைக்கு இவ்விதம் சுகானுபவத்தின் பொருட்டு இப்படிச் செலவழிக்கவேண்டும் என்பது என்ன கட்டாயமா? எந்த மனிதனும் இயன்றவரை சாத்தியமான சமயங்களிலெல்லாம் வாழ்க்கையைக் குதூகலமாக அனுபவிக்க வேண்டும். ஆ! வாழ்க்கை எவ்வளவு இன்பகரமாக இருக்கிறது, பார்!'

சரியாக ஆறுமணிக்கு இரண்டு குதிரைகள் பூட்டிய அழகிய குதிரை வண்டியொன்று வாசலில் வந்து நின்றது. கலியாண தம்பதிகள் இருவரும் அதில் சவாரி செய்து உல்லாசமாகக் கொஞ்சதூரம் போய்வரலாமென்று கிளம்பினார்கள். பூங்காவனத்திலே பிரம்மானந்தமாக அழகிய பூஞ்செடிகளின் இடையே மகிழ்ச்சியுடன் விளையாடிக்கொண்டு, உட்கார்ந்து

காதலனுடன் இன்பமாக உரையாடியும் ஆனந்தமாகப் பொழுது போக்கிக்கொண்டிருந்தாள். அப்பொழுது அங்கு கால் நடையாக வந்து சேர்ந்தவர்களில் சிலர் இவர்களைத் தங்கள் கடைக்கண்ணில் பொறாமைக் குறிப்புடன் பார்த்துச்சென்றனர். இன்னும் சிலர் அருகில் வந்து சிநேகம் பாராட்டி இன்பமாக உரையாடியும் சென்றனர். அவர்களெல்லாம் இந்தக் கஸ்டவ்வைப்பற்றி மனதில் என்ன எண்ணிக்கொண்டிருக்கவேண்டும்? 'உதவிக்கௌன்சிலர் தகுந்த ஜோடியாகவே, தனக்குகந்தவளைத்தேடிக் கலியாணம் செய்துகொண்டிருக்கிறான். இன்னும், ஆசைக்காதலியைத் தேடி அடைந்ததுடன் அளவற்ற செல்வத்தையும் பெற்றிருக்கிறான் போலும்' என்றே எண்ணியிருப்பார்கள். அவர்கள் எல்லாம்—பாவம், ஏழைகள் நடந்து திரியவேண்டியிருக்கிறது. கொஞ்சமும் சிரமம் என்ற நினைவேயில்லாமல் ஆனந்தமாக அந்த மிருதுவான குஷன் மெத்தைகளில் சாய்ந்துகொண்டு சவாரிசெய்வது என்பது எவ்வளவு இன்பகரமானது? மனமொத்த தம்பதிகளின் மனோகரமான மணவாழ்க்கை முறையே இவ்விதமானதுதான்.

கலியாணமான பின்னர், அந்த மாதம் முழுவதும் இந்த விதமாக சுகானுபவ வாழ்க்கை தான்—நடனக்கச்சேரிகள், விருந்துகள், டீபார்ட்டிகள், நாடகங்கள் ஆகிய கேளிக்கைகளிலேயே காலம் கழிந்தது. என்றாலும், இவைகளைக்காட்டிலும் அவர்கள் பூரணமாக முழு இன்பத்தை அனுபவித்தது தங்களுடைய வீட்டில் அவர்கள் தனிமையில் அடைந்த சுகந்தான். அவளுடைய பெற்றோர்களிடமிருந்து, இரவில் லூயியைத் தனியே அழைத்துச்சென்று, சொந்த வீட்டில் தங்கள் இஷ்டம் போல் எல்லாம் இன்பமாக நடந்துகொள்வதை நினைக்க நினைக்க கஸ்டவ்வுக்கு ரொம்பவும் ரம்மியமாக இருந்தது. மாடியிலிருந்து அவர்கள் கீழே இறங்கிவந்து ஏதோ கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு உட்கார்ந்துகொண்டு உல்லாசமாக வெகுநேரம் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருப்பார்கள். கஸ்டவ் எல்லாவற்றிலும் இயன்றவரை ரொம்பவும் சிக்கனமாகவே இருந்தான்—ஆம்! நடைமுறையில் அல்ல. எல்லாம் கொள்கையளவில்தான். ஒரு

நாள் காதல் இளம் தம்பதிகள் சுவைமிகுந்த மீன் உணவை உருளைக்கிழங்குடன் கலந்து உண்டனர். லூயியும் அதை ரொம்பவும் பிரியமுடன் சாப்பிட்டாள். அடுத்த வாரத்தில் அதே தினம் வந்ததும், ஆசை மிகுதியினால் அதிகப்பணம் கொடுத்து ஏராளமாக வாங்கிக்கொண்டு வந்துவிட்டான் கஸ்டவ். லூயியிக்கு இது கொஞ்சமும் பிடிக்கவில்லை. இதை இன்னும் குறைந்த விலையில் முன்னொரு முறை லூயியே வாங்கி இருக்கிறாள். மேலும், இப்படியாக, தினியிலேயே வீணில் அதிகப்படியாகப் பணம் செலவழிப்பதை அவள் விரும்பவில்லை. என்றாலும் இத்தகைய அற்ப விஷயங்களுக்கெல்லாம் கணவனுடன் விரோதங் கொள்வானேன் என்று லூயியும் பேசாமல் இருந்துவிட்டாள்.

இரண்டு மாதங்களுக்குப்பின் அதுவரை இல்லாத புதுமையாக கொஞ்ச நாளாகவே லூயியிக்கு உடம்பு சற்று அசௌக்கியமாக இருந்தது. அவளுக்கென்ன? கடுமையான ஜலதோஷம் பிடித்திருந்ததோ அல்லது புதிதாக சமையலுக்கு வேண்டிய பாத்திரங்கள் எல்லாம் வாங்கினார்களே, அவைகளில் எதிர்பாராதவிதமாக பாத்திரங்களின் விஷம் ஏதும் இருந்து கலந்து விட்டதோ? இதற்காக டாக்டரை அழைத்துவந்து காட்டிய போது அவர் முகத்தில் ஒரு வினயம் கலந்த புன் சிரிப்புடன் சொன்னார்: 'அதெல்லாம் உடலில் ஒன்றும் கோளாறு இல்லை— எல்லாம் தானே சரியாகிவிடும்'. அவர் வியாதியை நிர்ணயித்துக் கூறும் விநோதம் எப்படி? உண்மையாகவே அவள் அப்பொழுது சற்று சுகக் குறைவாகத்தான் இருந்தாள். அசௌக்யத்தின் காரணத்தையறிய கஸ்டவ் மிகத் தீவிரமாகப் பல ஆராய்ச்சிகள் நடத்திப்பார்த்தான். ஒன்றும் பயன்படவில்லை. அவனுடைய மனைவிக்கு வந்த வியாதி குணமடைவதாகக் காணோம். லூயியிக்கு வந்திருந்த வியாதி சொஸ்தமாவதற்குரிய மார்க்கத்தைக் கண்டு பிடிக்க தான் படித்த வைத்திய புஸ்தகங்களை யெல்லாம் புரட்டிப் புரட்டிப் பார்த்தான். தினமும் கொஞ்சநேரம் அவளை வெது வெதுப்பான வெந்நீரில் காலை வைத்துக்கொண்டிருக்கச் செய்தான். ஒரு மாதத்திற்கெல்லாம் அவளுடைய வியாதி ஒரளவுக்குத் தைரிய மூட்டுகிறவகையில் சற்றே தணிந்து குணமடைவதுபோலக்

காணப்பட்டது. இது திடீரென்று ஏற்பட்டது. இத்தனை சீக்கிரத்தில் இவ்விதம் குணமடையும் குறி காணும் என்று அவர்கள் எதிர்பார்க்கவேயில்லை. என்றாலும், அவர்கள் ஒரு தந்தையும் தாயுமாக ஆகிறது என்பது எவ்வளவு இன்பகரமானது! பிறக்கப்போகும் குழந்தை கட்டாயம் ஆணாகவே இருக்கும். அதில் கொஞ்சமும் சந்தேகமே வேண்டாம். அதற்கு என்ன பெயரிடுவது என்பது பற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டியதுதான் பாக்கி. இதற்கிடையில் லூயி தன்னுடைய புருஷனைப் பிரியமுடன் தன் பக்கத்திலேயே வைத்துக்கொண்டிருந்த போதிலும், அவர்கள் கலியாணமானதிலிருந்து குடித்தனச் செலவுக்குத் தேவைப்படும் அளவிற்கும் மிகக் குறைந்த தொகையே கஸ்டவ்வுக்குச் சம்பளமாகக் கிடைப்பதனால், அதைத் தவிர அதிகப்படியான வருவாய் ஏதும் காணவில்லையே என்று அடிக்கடி அவனுக்கு எடுத்துக் காட்டி ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தாள். ஆமாம்; தங்கள் நிலைமைக்குக் கொஞ்சம் அதிகமாகவே ஆடம்பர வாழ்க்கை நடத்தினார்கள் என்பது உண்மைதான். ஆனாலும், இப்பொழுது அதில் ஒரு மாறுதலைச் செய்துகொண்டார்களானால், எல்லாம் திருப்திகரமாகப் போய்விடும்!

மறுநாள், உதவிக் கௌன்சிலராகிய கஸ்டவ் நோட்டு எழுதிக்கொடுத்துப் பணம் கடன் வாங்கி வரலாமென்று தன்னுடைய சிறந்த நண்பனாகிய ஒரு பாரிஸ்டரைக் காணச்சென்றான். இப்பொழுது அவன் எதிர்பார்க்கும் தொகையைக் கடனாகக் கொடுத்தால் சமீபத்தில் அவனுக்கு வரவிருக்கும் மிக முக்கியமான செலவுகளுக்கு ரொம்ப உபயோகமாக இருக்கும் என்றதெல்லாம் கஸ்டவ் தன் நண்பருக்கு எடுத்துச் சொன்னான். சட்ட ஞானமுள்ள அந்த நண்பரும் அவைகளை ஆமோதித்து அவனிடம் சொன்னார்: 'ஆமாம், கலியாணம் செய்துகொள்வதென்பதும், பின்னர், குடித்தனம் நடத்துவது என்பதும் ரொம்ப சிரமமான அதிகச் செலவு பிடிக்கும் காரியங்கள்தான். அந்தச் செலவுகளையெல்லாம் சமாளிக்க முடியாமல் நானும் கஷ்டப்பட்டதுண்டு. என்றாலும், இப்பொழுது நான் உதவி செய்வதற்கு இயலாமல் இருக்கிறது.'

தன் வேண்டுகோளை மேலும் வற்புறுத்திச் சொல்லக் கஸ்டவ்வுக்கு ரொம்பவும் அவமானமாக இருந்தது. அவன் வெறுங் கையோடு வீடு திரும்பினான். கஸ்டவ் வீட்டுக்கு வந்ததும் அவனைத் தேடி யாரோ இரண்டு புதிய மனிதர்கள் வந்துவிட்டுப் போனதாகக் கேள்விப்பட்டான். அவர்கள் ஒருவேளை ராணுவத்தி லுள்ள சேனைத் தலைவர்களாக இருக்கலாம் என்று ஊகித்தான். வாக்ஸ்ஹாம் கோட்டையிலுள்ள படைகளின் தலைவர்களாகிய தன்னுடைய நண்பர்களாக இருக்கவேண்டும் என்று எண்ணினான். ஆனால், வந்திருந்தவர்களின் தோற்றம் சேனைத்தலைவர்களைப் போல இல்லை என்று சொன்னார்களே, அவர்கள் பார்ப்பதற்கு ரொம்ப வயதானவர்களைப் போலக் காணப்பட்டார்களாமே; இல் லாவிட்டால், உபசாலாவிலிருந்து சிநேகிதர்கள் யாரேனும் தனக் குக் கலியாணம் நடந்தேறிய சமாசாரத்தைக் கேட்டு தன்னைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்திருப்பார்களோவென்று கூட எண்ணினான் கஸ்டவ். ஆனால், வேலைக்காரன் சொன்னான்: 'அவர்கள் உபசாலாவிலிருந்து வரவில்லையாம். கையில் ஆளுக்கு ஒரு தடி வைத்துக்கொண்டிருந்தார்கள். ஏதோ சொல்லவந்தவர் கள்போலத் தோன்றியது, ஆனால், அவர்கள் ஒன்றும் சொல்லி விட்டுப் போகவில்லை. இன்னும் கொஞ்சநேரத்தில் அநேகமாக அவர்கள் திரும்பி வந்தாலும் வரலாம்.'

கஸ்டவ் என்ற அந்த இளைஞன் திரும்பவும் சில சாமான் கள் வாங்கிவருவதற்காகக் கடைத்தெருவை நோக்கிச் சென்றான். சுவை மிகுந்த இனிய பழங்களை நிறைய வாங்கிக்கொண்டு வீட்டுக் குத் திரும்பிவந்தான். ஆம், அவைகளையும் அவன் ஒருவேளை கடையில் கடன் சொல்லிவிட்டுத்தான் வாங்கி வந்திருக்கவேண் டும், இங்கு வீட்டிற்கு வந்ததும், தன்னுடைய அருமை மனைவி யாகிய லூயியை மகிழ்ச்சியுடன் அழைத்து 'இவைகளைப் பார்த் தாயா? ஒன்றரைக் குரோனருக்கு இவ்வளவு பெரிதாகவும் நல்ல தாகவும் இந்தப் பழங்கள் கிடைப்பது எவ்வளவு அபூர்வமானது!' என்றான் கஸ்டவ்.

'ஓ; ஆனால், கஸ்டவ்—என் அன்பரே—இவைகளிலெல்

லாம் இவ்வளவு பணம் செலவழிக்க நம்மால் ஆகுமா ?' என்ருள் லூயி.

'அதைப்பற்றி ஒன்றும் கவலைப்படாதே, என் கண்ணே. இன்னும் கொஞ்சம் அதிக வருவாய்க்கான அதிகப்படியான வேலைகளுக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்,' என்று சமாதானம் கூறினுன் கஸ்டவ்.

'ஆனல், நம்முடைய கடன்களுக்கெல்லாம் நாம் என்ன செய்கிறது ?' என்று கேட்டாள் அவள்.

'கடன்களா ? அதற்கென்ன ? நான் இன்னும் சில தினங்களில் ஒரு பெரிய தொகை கடன் வாங்கலாமென்று இருக்கிறேன். அந்தப் பணத்தைக் கொண்டு நமக்குள்ள இந்தக் கடன்கள் முழுவதையும் கொடுத்துத் தீர்த்துவிடலாம்,' என்ருன் கஸ்டவ்.

இதைக்கேட்ட லூயி, அவனை இடைமறித்துச் சொன்னுள்: 'ஆஹா ! பேஷான யோசனைதான். பார்க்கப்போனுல் அதுவும் நமக்கு ஒரு பெருஞ் சுமைதானே. சிறு கடன்களையெல்லாம் தீர்க்க மற்ருெரு பெரும் புதுக் கடன் வாங்குகிறேன் என்கிறீர்களே !'

'அதனுல் ஒன்றும் பாதகமில்லை. இந்தச் சிறு கடன்களின் தொல்லையின்றிக் கொஞ்சம் சௌகரியமாக இருக்கலாமல்லவா ? நீ என்ன நினைக்கிருய் ? ஆனுல், இந்தக் கஷ்டங்களைப் பற்றியெல்லாம் நீ ஏன் வீணுக விவாவதித்துச் சிரமப்படுகிருய் என் அன்பே, ஹா ! இந்தப் பழங்கள் தின்பதற்கு எவ்வளவு இனிமையாக இருக்கிறது ? இந்த சுவைமிகுந்த இனிமையான பழங்களைச் சாப்பிட்டபிறகு ஒரு கண்ணுடி டம்ளரில் ஸ்பெயின் தேசத்து மதுரமான ஒயினைப் பருகுவது எவ்வளவு இன்பகரமானது என்று உனக்குத் தெரியுமா?, என்று மிகவும் குதூகலமாகக் கேட்டான் கஸ்டவ். இவ்வாறு அவன் கூறியதும், உடனே வேலையாளை அழைத்து இயற்கையாகவே மிக மதுரமான அந்த ஸ்பெயின் தேசத்து ஒயினை ஒரு பாட்டில் வாங்கிவரச் சொன்னுன் கஸ்டவ்.

அன்றைக்கு மத்தியானம் கஸ்டவ்வின் மனைவி சோபாவில்

படுத்துச் சற்றுநேரம் தூங்கி யெழுந்தவுடன், திரும்பவும் அந்தக் கடனைப்பற்றி வருத்தத்துடன் பேசலானாள். அவள் வற்புறுத்திச் சொல்லித் தீரவேண்டிய அதைப்பற்றிச்சொன்னால் அவன் கோபங் கொள்ளமாட்டான் என்று லூயி எண்ணினாள். கோபமா? இல்லை. ஒருக்காலும் கஸ்டவ் கோபங்கொள்ளமாட்டான். லூயி என்ன, வீட்டில் அந்தச் செலவுக்குப் பணம் இல்லை, இதற்குப் பணம் இல்லை என்று அவனைக் கட்டாயப்படுத்திக் கேட்கிறாளா? மேலும் லூயி விபரமாகச் சொன்னாள்: 'அந்தப் பலசரக்குக் கடைக்காரனுக்குக் கொடுத்தாகவேண்டிய பாக்கி இன்னும் கொடுக்கவில்லை. கசாப்புக் கடைக்காரன் வேறு அன்றே அவனுக்குக் கொடுக்கவேண்டிய பாக்கிப் பணத்தைக் கேட்டு நம்மைப் பயமுறுத்திச் சொன்னான். இன்றும், குதிரை லாயத்தைக் கவனித்துக்கொள்ளுபவன் வந்து அவனுடைய வாடகை பாக்கியைக் கொடுத்துக் கணக்குத் தீர்க்கவேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறான்.'

'இவ்வளவுதானே? அவைகள் எல்லாவற்றையும் உடனேயே கொடுத்துத் தீர்த்துவிடுவோம்—நாளைக்கே கடன் பைசா பாக்கி என்று இல்லாமல் அவ்வளவையும் கொடுத்துத் தீர்த்துவிட்டு மறுகாரியம் பார்ப்போம். அது சரி; இன்னும் வேறு ஏதாவது ரஸமான விஷயங்களைப் பற்றிப் பேசுவோமே. அப்படிக் கொஞ்ச தூரம் அந்தப் பார்க் வரையில் உல்லாஸமாகச் சென்று உலவி விட்டு வருவோமா? நீ என்ன சொல்கிறாய்? ஒருவேளை நீ வண்டியில் போய் வருவதற்குச் சம்மதிக்க மாட்டாய் என்று நினைக்கிறேன். அதனாலென்ன? வேண்டுமானால், அதோ, டிராம் இருக்கிறது. அதில் ஏறிக்கொண்டு 'பார்க்குக்குப் போய் வருவோம், வா.' என்று சந்தோஷமாக லூயியை அழைத்தான், உதவிக் கௌன்சிலராகிய கஸ்டவ்.

அதன்படியே, அவர்கள் 'பார்க்'குக்குச் சென்றார்கள். அங்கே, அல்ஹம்ரா ஹோட்டலில் தனியறையில் ஆனந்தமாய் விருந்துண்டார்கள். மிகவும் குதூகலமாக இருந்தது அது. அங்கு ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் எல்லோ

ரும் இந்தக் கேளிக்கையைக் கண்டு களித்தார்கள். 'இன்பத்தில் மிதக்கும் காதல் இளம் ஜோடிகள்' என்று அவர்கள் கருதி மன மகிழ்ந்தனர். இவ்விதம் அவர்கள் எண்ணிக்கொள்வது லூயிக்குச் சற்றுக் குறைவாகவே இருந்தது. ஆனாலும் கஸ்டவ்வுக்கு அது சந்தோஷமாகவே இருந்தது. முக்கியமாக ஹோட்டலைவிட்டு வெளியே வரும்பொழுது அங்கு கொடுக்கப்பட்ட 'பில்'லைக் கண்டதும், உண்மையிலேயே லூயி மனம் வாடினாள். அந்த 'பில்'லில் குறித்திருந்த அந்தத்தொகைக்கு அவர்கள் தங்களுடைய வீட்டில் இதைக் காட்டிலும் எவ்வளவோ அதிகமாகவும் நயமாகவும் செய்து உண்ணலாமே. மாதங்கள் பல கடந்தன. நிஜமாகவே அவசியமாகத் தயாரிக்க வேண்டியவைகளின் முக்யத்துவம் அப்பொழுதுதான் தெரிந்தது. ஆம், குழந்தைக்கு ஒரு தொட்டில், இன்னும் அதற்கு வேண்டிய துணிமணிகள் முதலியன. ஆனால், கஸ்டவ்வுக்குத்தான் பணம் சம்பாதிப்பதற்கான வேலைகள் செய்வதற்கு நேரம் கிடைப்பதில்லையே! குதிரை லாயத்தைக் கவனிப்பவன் வந்து வாடகைக்கு நெருக்குகிறான்; பலசரக்குக் கடைக்காரனோ மேற்கொண்டு கடனுகச் சாமான்கள் தர மறுக்கிறான்: ஏன், அவரவர்களுக்கும் ரட்சிக்கவேண்டிய சொந்தக் குடும்பங்கள் இருககிறதல்லவா? ஆ! எத்தகைய திகைப்பூட்டும் வாழ்க்கைப் பொருளாதாரம். இவ்விதமான பொருளாதார வாழ்வு வெறுப்பூட்டும் முறையில் ஒருவருக் கொருவர் எவ்வளவு நெருங்கிய சம்மந்தமுடையதாக இருக்கிறது?

கடைசியாக, விசேஷ நிகழ்ச்சிகளுக்குரிய மிக முக்யமான தினங்கள் தற்பொழுதான் ஏற்படுகின்றன. ஆம், குழந்தையைப் போஷித்துப் பாதுகாக்க ஒரு 'நர்ஸை' அமர்த்தவேண்டிய அவசியம் வந்துவிட்டது. அழகிய இளங் குழந்தையை எடுத்துச் சீராட்டிக்கொண்டிருக்கும் சமயத்தில், வாசலில் கடன்காரர்கள் வந்து தொல்லைப் படுத்துவார்கள். அப்படியே, குழந்தையை விட்டுவிட்டு அவர்களிடம் போய் தகுந்தவிதமாக அவர்களுக்குச் சமாதானம் சொல்லிப் போகச்சொல்ல வேண்டியதாக இருந்தது. என்ன செய்வாள்? பாவம்! மேலும், மேலும் இன்னும் அதிகப் படியான குடித்தனப் பொறுப்புக்கள் புதிது புதிதாகத்தோன்றி

கஸ்டவ்வுக்குத் தாங்கமுடியாத பெரும்பாரமாக இருந்தது. ரொம்பவும் சிரமப்பட்டு நிர்வகிக்க வேண்டியிருந்த குடும்பச் சுமையை கஸ்டவ் சமாளிக்க முடியவில்லை. அவைகள் அநேகமாக அவன் முதுகை முறித்துவிட்டதென்றே சொல்லலாம். அவனும் முயற்சி செய்து வெற்றிக்கு வழி தேடினன் என்பது வாஸ்தவம். மிகவும் கஷ்டப்பட்டுச் சில மொழிபெயர்க்க வேண்டிய வேலைகளைச்செய்து தருவதாக ஏற்றுக்கொண்டு வந்தான். ஆனால், அவைகளையெல்லாம் அவன் எவ்வாறு திருப்திகரமாகச் செய்து முடிப்பான்? அவனுக்குத்தான் எந்தப் பக்கம் திரும்பினாலும் துயரமும் தொல்லையுமே காட்சியளித்து அவனைத் துன்புறுத்துகின்றனவே. குடும்பக் காரியங்களைச் செய்துமுடிக்கவே அவனுக்குப் பொழுது போதவில்லையே. இத்தகைய மனோ நிலையில்தான் கஸ்டவ், தன்னுடைய மாமனாரின் உதவியைக் கோரினன்.

அந்த வயதுமுதிர்ந்த கனவானாகிய அவனுடைய மாமனார் கஸ்டவ்வுக்கு ரொம்பவும் வேண்டா வெறுப்புடன் சம்மதித்தார். 'நான் இந்த ஒருதடவை மட்டும் உங்களுக்கு உதவிசெய்யமுடியும். ஆனால் மறுபடியும், மறுபடியும் வந்து என்னை உதவிக்கு அழைக்காதீர்கள். இனி என்னால் முடியாது. எனக்கே என்னிடம் இருப்பது போதுமானதாயில்லை. மேலும், நீங்கள் மட்டும்தானா எனக்கு குழந்தைகள் ?' என்றார் அவர்.

அவனுடைய மனைவி, அந்த இளங் குழந்தை முதலியவர்களுக்குத் தகுந்த சுவையுள்ள உணவுப் பொருள்கள் தயாரித்துக் கொடுத்துப் போஷிக்கவும், இன்னும் அந்த விலையுயர்ந்த ஒயின் ஆகியவைகளுக் கெல்லாம் தேவையான பொருள் தேடிக்கொள்ளவும், மேலும் இளங் குழந்தையைக் கவனித்துக்கொள்ள ஏற்படுத்தியிருந்த 'ஆயாளுக்கு' வேறு மாதந்தோறும் சம்பளம் கொடுக்கவும் கஸ்டவ் இந்த வருமானத்திலேயே வகை செய்துகொள்ள வேண்டியதாக இருந்தது.

அதிருஷ்டவசமாக, கஸ்டவ்வின் மனைவி வெகு சீக்கிரத்திலேயே உடல்நலமடைந்து நடமாடலானாள். நாளடைவில் அவள்

புதிய பலம் பெற்று மீண்டும் ஒரு இளம்பெண்ணாகிய அழகிய இளங்கொடிபோல் காட்சியளித்தாள். ஆனாலும், லூயியின் தகப்பனார், மாப்பிள்ளையாகிய கஸ்டவ்விடம் சற்றுக் கடுமையாகவே பேசினார்: 'இந்தா, இனிமேல் இப்போதைக்கு உனக்குக் குழந்தையும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். இதெல்லாம் உன்னுடைய நன்மைக்காகவே தான் நான் சொல்கிறேன்.'

இப்படியாகக் கொஞ்சகாலத்துக்கு கஸ்டவ்வின் புதிய குடித்தனம் இன்பக் காதலுடனும் வளரும் கடனோடும் நடந்து வந்தது. ஆனால், கடன் பெருகி வளர்ந்து முடிவில் ஒருநாள் கடன்களைத் தீர்க்க வகையின்றி அவன் ஒரு பெருங் கடனாளியாக நேர்ந்தது. கடன் கொடுத்தவர்களெல்லாம் கஸ்டவ்வின் வீட்டினுள் நுழைந்து இருக்கும் சாமான்களை அள்ளிக்கொண்டு போவதாகப் பயமுறுத்தினார்கள். பிறகு, இவற்றையறிந்த அந்த வயது சென்ற கனவான் அங்குவந்து லூயியையும் அவளுடைய குழந்தையையும் தன்னுடைய வீட்டிற்கே அழைத்துக்கொண்டு போய்விட்டார். அழைத்துக்கொண்டு வண்டியில் போய்க்கொண்டிருந்த பொழுது, அவர் கஸ்டவ்வை ரொம்பவும் வருந்திக் கடிந்துகொண்டார். 'இத்தனை நாள் காத்திருந்து இப்படிக் கலியாணமாகி ஒரு வருஷத்திற்கெல்லாம் பிறந்தகம் தேடி ஓட்ச்செய்யும் இந்த அயோக்யனிடம் என் அருமை லூயியைக் கொண்டுபோய் கொடுத்தேனே.'

லூயி பேசாமல் கஸ்டவ்விடமே இருந்து சந்தோஷமாக வாழ்ந்துகொண்டிருப்பாள். ஆனால், அங்கு வாழ்க்கை நடத்தவே வசதி இல்லாதுபோயிற்று. ஜீவனத்திற்கு இன்றியமையாத உணவுப் பொருள்களுக்கே ரொம்பவும் கஷ்டமாயிருந்தது. அங்கு அவள் எதைக்கொண்டு வாழ்க்கை நடத்துவாள்? கையில் தடிகளுடன் அமீனாக்கள் வந்து வீட்டில் உள்ள சாமான்கள் யாவற்றையும்—நாற்காலி, மேஜை முதலான மரச்சாமான்கள், படுக்கைகள், மட்பாண்டங்கள், உணவு கொள்ளும்போது உபயோகிக்கும் கத்தி முதலிய வெட்டும் கருவிகள், இன்னும் சமையலறைப் பாத்திரங்கள் முழுவதையும்—எடுத்துக்கொண்டு வீட்டைக் காலிசெய்வதை

கஸ்டவ்வும் பேசாமல் அவர்களுக்குப் பின்னுல் நின்று பார்த்துக் கொண்டிருந்தான்.

இப்பொழுதுதான் வாழ்க்கையின் உண்மையான கோர சொரூபம் கஸ்டவ்வுக்குத் தெரியவந்தது. அவன் உண்மையிலேயே மிகக் கடுமையான வாழ்க்கை நடத்த ஆரம்பித்தான். தினந் தோறும் காலையில் வெளியாகும் ஒரு பத்திரிகாலயத்தில் புரூப் திருத்திக்கொடுக்கும் வேலையில் ஸ்திரமாக அமர்ந்தான். இதன் காரணமாக அவன் ஒவ்வொருநாளும் இரவில் வெகு நாழிகை வரை தன் இடத்திலே உட்கார்ந்துகொண்டு வேலைசெய்து கொண்டே இருக்க நேர்ந்தது. அவன் ஒரு 'இன்ஸால்வென்ட் ஆசாமி' என்று நிஜமாகவே விளம்பரப்படுத்தப்படவில்லை யாதலால், நல்லவேளையாக அவனுடைய சர்க்கார் உத்தியோகத் திற்கு ஏதும் ஆபத்து நேரவில்லை. என்றுலும், அதிலும் சம்பள உயர்வுக்கு இடம் இல்லாதுபோயிற்று. ஏதோ கஸ்டவ்வுக்கு ஒய்வு கிடைத்தபோது, ஞாயிற்றுக்கிழமை தோறும் வீட்டுக்கு வந்து அவனுடைய மனைவி, குழந்தை இவர்களை வேண்டுமாகுல் பார்த்துவிட்டுப்போகட்டும் என்று அனுமதியளித்திருந்தார் அவனுடைய மாமனுர். அன்றும் அவர்களுடன் தனிமையாக இருந்து கஸ்டவ் வாழ்க்கை நடத்த அவர் சம்மதிக்கவில்லை. சாயங்காலம் கஸ்டவ் அவர்களைவிட்டுப் பிரிந்து பத்திரிகாலயத் திற்குக் கிளம்பிச்செல்லும்போது வெளியே வாயிற்படி வரை கூடவே வந்து வழியனுப்புவார்கள். அவனும் சாந்தி நிறைந்த உள்ளத்துடன் மனத்தைக் கலங்கவிடாமல் அவர்களைவிட்டுப் பிரிந்து செல்வான்.

கஸ்டவ், தனக்குள்ள கடன் முழுவதையும் கொடுத்துத் தீர்ப்பது என்றுல், ஒருவேளை இன்னும் இருபது வருஷம் ஆனுலும் ஆகும். ஆம், அப்புறந்தான் என்ன ? அதன் பிறகாவது அவன் தன்னுடைய மனைவியையும் குழந்தையையும் வைத்து ஒழுங்காய் சம்ரட்சிக்க முடியுமா ? இல்லை, ஒருவேளை அவனுல் முடியாமலும் போகலாம். இத்தனைக்கும் இடையில், கஸ்டவ் வின் மாமனுர் இறந்து விட்டாராகுல், அவர்கள் குடியிருக்க

ஒரு வீடுமின்றித் திண்டாடவேண்டியதுதான். இதன் பொருட்டாவது, வெறுப்புடன் தங்களை இவ்வளவு கொடுமையாகப் பிரித்துவைத்துவிட்ட அந்த வயது முதிர்ந்த கல்நெஞ்சுடைய வரிடம்கூட கஸ்டவ் நன்றியுடன் இருக்கக் கடமைப்பட்டிருந்தான்.

ஆம்! உண்மைதான். மனித வாழ்க்கையே நிஜமாகவே மிகவும் கடினமாகவும் கொடுமையாகவும் தான் இருக்கிறது. அதில் என்ன சந்தேகம்? கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட இந்த உலகத்து உயிர்களில் மிருகங்கள், பறவைகள் முதலியவைகளுக்கெல்லாம் எவ்வளவு சுலபமாக அவைகளின் வாழ்க்கைக்குரிய உணவுப்பொருள் முதலியன கிடைத்து எவ்வளவு சந்தோஷமாக ஜீவிக்கின்றன? ஆனால், இந்த மனிதன் மட்டும் தன்னுடைய வாழ்க்கை செவ்வனே நடைபெற ஏன் இத்தனை கஷ்டப்பட்டு உழைத்துத் திரவேண்டியிருக்கிறது? ரொம்பக் கேவலமானது தான். இவ்வுலகில் ஒவ்வொருவருடைய வாழ்க்கைக்கும் இன்றியமையாத உணவுப்பொருள்கள் முதலிய சாதனங்கள் போதிய அளவில் கிடைக்காமல் இருப்பது பெருத்த அவமானம்!

எங்கள் அரிய இனிய இலக்கிய வெளியீடுகள்

1. கிளிக்காதல்—பண்டித ரத்நம் ரூ. 0—8—0
2. சிறை அனுபவம்—ஆஸ்கார் ஒயில்ட் 1—4—0
3. சிறந்த சிறுகதைகள்—ஆஸ்கார் ஒயில்ட் 1—4—0
4. ஓரங்க நாடகங்கள்—கே. ஸ்ரீநிவாஸ், பி. ஏ. 0–12–0
5. தாகூரின் கவிதைக்கனி—மணிவாசகம் 0–12–0
6. கவிதை, கலை, விமர்சனம்—சுப. நாராயணன் 2—0—0
7. 'கல்வி' முதலிய கட்டுரைகள்—வே. சாரநாதன் எம். ஏ. 1—6—0
8. 'சலோம்' அல்லது குமரியின் சபதம்—நாடகம் ஆஸ்கார் ஒயில்ட் 1—0—0
9. 'அசோகவனம்'—ஆ. முத்துசிவன் பி. ஏ. (Hons) அச்சில்
10. 'நட்சத்திரக் குழந்தை' முதலிய கதைகள்—மூன்று ஆசிரியர்கள் கிளேஸ் பதிப்பு 1—4—0; ஆண்டிக் பதிப்பு 1—8—0

இனிவெளிவரும் நூல்கள்

11. '93' தொண்ணூற்றி மூன்று—விக்டர் ஹியூகோ எழுதிய நாவல்—மொழிபெயர்ப்பு: சுப. நாராயணன்
12. "விரும்பிய வண்ணமே"—ஷேக்ஸ்பியர் நாடகம் மொழிபெயர்ப்பு: வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ
13. "செஞ்சி"—கவிஞன் ஷெல்லி எழுதிய நிகரற்ற சோக நாடகம்—வசன காவிய நடையில் மொழிபெயர்ப்பு: வி. ஆர். எம். செட்டியார்

English Works — By V. R. M. Chettiar B. A

1. LITERARY CRITICISM — Shelley and Oscar Wilde
2. THE GENIUS OF POETRY — Tagore & Aurobindo
3. "RADIANT RAINBOW"— Prose-Poems

நாவலர் பவர் பிரஸ், காரைக்குடி.